# மணிவிழா மலர்



## கலை வேந்தன்
## கணபதி ரவீந்திரன்

May 4th, 2013

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/ganapathiravindr00unse

# மணிவிழா

கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்

# கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்கள் கடந்து வந்த பாதை

1953ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 22ம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் சின்னதம்பி கணபதிப்பிள்ளை முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியராகவும், பின்னாளில் பிரபல்யமான சோதிடராகவும் திகழ்ந்தார். இவரது தாயார் நல்லம்மா கணபதிப்பிள்ளை ஓய்வுபெற்ற ஆசிரியராகவும், யாழ் வேம்படி மகளீர் கல்லூரி, உடுவில் இராமநாதன் கல்லூரி பழைய மாணவியாகவும் இருந்தார். இவருக்கு மூன்று ஆண் சகோதரங்களும் இரண்டு பெண்சகோதரங்களும் உள்ளனர். இவர் சிறுவயது முதல் சிறுகதை, கவிதை, ஓவியம் வரைதல் போன்ற துறைகளிலும், நாடகங்களும் நடித்து வந்தார்.

1969ம் ஆண்டு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவில் இவர் எழுதிய "தூது" என்ற கவிதையும் "அலைகடல்" என்ற சிறுகதையும் முதலிடம் பெற்றது. அடுத்த ஆண்டு இவர் எழுதிய "ஏடு எடுத்து நான் கவிதை எழுத வேண்டும்" என்ற கவிதையும் முதலிடங்களைப் பெற்றது. இவர் தன்னுடைய 14வயதில் ஈழநாடு பத்திரிகையில் நிருபராக இணைந்து கொண்டார். இரண்டு ஆண்டுகளில் இவரது எழுத்துத் திறனைப் பார்த்து இவரை அதே பத்திரிகையில் உதவியாசிரியாராக இணைத்துக் கெண்டார்கள். அக்காலத்தில் பத்திரிகை உலகில் ஜம்பவான்களாக விளங்கிய எஸ். கோபலரத்தினம் (பிரதம ஆசிரியர்), எஸ். மகாதேவா, அண்மையில் எம்மைவிட்டுப் பிரிந்த சசி பாரதி என்று அழைக்கப்படும் சபாரெத்தினம், வாரஇதழ் ஆசிரியர் பெருமாள் ஆகியோருடன் சிறுவயதிலிருந்தே பணியாற்றினார். கா.பொ.த. சாதரணம் வரை கனகரத்தினமகா வித்தியாலயத்திலும், கா.பொ.த உயர்தரத்தை செங்குந்தா இந்துக்கல்லூரியிலும் கற்றார். பின்னர் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்றிருந்த Jaffna Low Centerல் புவியியல், பொருளியல் ஆகிய பாடங்களை கற்பித்து வந்தார். பின்னர் ஸ்ரான்லி றோட்டில் Jaffna ஸ்ரான்லி சென்றர் என்ற கல்வி நிறுவனத்தை நிறுவி 800க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் வெற்றிகரமாக நடாத்தி வந்தார்.

1979ம் ஆண்டு தைமாதம் 19ம் திகதி 9 ஆண்டுகளாக காதலித்து வந்த சுபத்திரா மார்க்கண்டு என்பவரை திருமணம் செய்து மயூரன் சுமங்களா என இரு பிள்ளைகள் பிறந்தனர். இவரின் மகளான சுமங்களா துரதிஷ்டவசமாக 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ந்திகதி இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

1983லிருந்து 1990 வரை சவுதியரேபியாவில் பணியாற்றி பின்னர் 1990 லிருந்து 1997 வரை கொழும்பு வெள்ளைவத்தை காலிவிதியில் ரிப்ரொப் என்ரப்பிறைஸ் என்ற நிறுவனத்தையும், இன்னுமொரு பான்சி நிறுவனத்தையும் நடாத்தி வந்தார். இவர் கொழும்பிலிருந்த காலப்பகுதியில் "அரிமா" சங்கத்தில் இணைந்து பல நற்பணிகளை ஆற்றினார். அந்த நிறுவனத்தில் அதிக அங்கத்தவர்களைச் சேர்த்தமைக்கான தகங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இவற்றுடன் "அரிமா" சங்கத்தின் ஸ்தாபகர் மல்வின் ஜோன் அவர்களுடைய திருவுருவத்தை வரைந்து அதனை 15000 ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டது. ஓரே ஆண்டில் 3 தங்கப்பதங்கங்களை வென்று சாதனையாளர் ஆகினார்.

1998 டாக்கடர் பிகராடோவின் "ஓட்டை" என்ற நாடகத்தில் முதன்முதலாக ஒரு சிறு பாத்திரம் எடுத்து நடித்தார். அதே காலப்பகுதியில் "உதயன்" பத்திரிகையின் இரண்டாவது ஆண்டுவிழாவில் கலைஞர் சுந்தரேஸ்வரனுடன் இணைந்து "சிதம்பர சக்கரம்" என்ற நாடகத்தை கனடாவில் மேடை ஏற்றினார். அந்த நாடகம் 115 தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளது. இது தவிர கீதவாணி வானொலியில் கிட்டத்தட்ட 13 ஆண்டுகளுக்கு மேலாக அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பணியாற்றி பலரது பாராட்டுக்களையும் பெற்றார். இவர் அதே வானொலிக்கு ஏராளமான வானொலி நாடகங்களை எழுதியும் இயக்கியும் நடித்துள்ளார். "ஓர் ஓவியம் காவியம் ஆகிறது" என்ற தொடர் நாடகத்தை 17 வாரங்களாக கீதவாணி வானொலியில் ஒலிபரப்புச் செய்து பல நேயர்களின் பாராட்டையும் பெற்றது. நூறுக்கு மேற்பட்ட மேடை நாடகங்கள், தொலைகாட்சி நாடகங்களை எழுதி, இயக்கி நடித்துள்ளார். TVI தொலைக்காட்சியில் கே.எஸ். பாலச்சந்திரன் அவர்களால் நடாத்தப்பட்ட "வைத்திலிங்கம்" சோவிலும் இரண்டு பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். தமிழ் வண் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை "இதுதான்டா இம்சை" என்ற நாடகத்தை பிரதி ஞாயிறு தோறும் பல நாடகக் கலைஞர்களை உட்படுத்தி கடந்த 7 ஆண்டுகளாக நடாத்தி வருகின்றார். கனடாவில் தயாரிக்கப்பட்ட பல திரைப்படங்களில் நடித்து தனது முத்திரை பதித்துள்ளார். அதனைத் தொடர்ந்து ரூபி யோகதாசனின் தயாரிப்பில் வெளிவந்த இரண்டு திரைப்படங்களான "கதிரொளி" "கனேடியன்" திரைப்படங்களில் நடித்தும் உதவி இயக்குனராகவும் பணியாற்றி உள்ளார். கனடாவில் இவரது கலை முயற்சிகள் அனைத்துக்கும் ஊன்றுகோலாகவும் உறுதுணையாகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2002ம் ஆண்டு உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பொங்கல் விழாவில் Mega Banquet Hall உரிமையாளர் ஜெகன் இவருக்கு "கலைவேந்தன்" என பட்டமளித்து கௌரவித்தார். அராலி ஒன்றியம் இவருக்கு "கலை குருசே" என்ற பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

உதயன் பத்திரிகையில் இவர் எழுதிய "பயணக் கட்டுரைகளும்", ஆயுத எழுத்துப் பத்திரிகையில் "இது பெரிய கூத்து" என்ற கட்டுரையும் பல வாரங்களாக பிரசுரிக்கப்பட்டு வந்தது. ஆரம்ப காலத்தில் நம்நாடு பத்திரிகையில் தொடர்ச்சியாக இவரது கவிதைகளும் சிறுகதைகளும் பிரசுரிக்கப்பட்டு வந்தன. கனடா மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் இணைந்து இளமாணி பட்டப்படிப்பை மேற்கொண்டார். தற்போது அனைத்துலக தமிழ் வானொலியில் "பிஞ்சு நிலவுகள்" என்ற நிகழ்ச்சியில் ஏராளமான குழந்தைகளுக்கு திருக்குறள், தமிழ் கற்பித்து வருவதோடு தொடர்ந்தும் தமிழ்ப்பணி ஆற்றி வருகின்றார். நடிகை மனோரமா ஆச்சி மீது அளப்பரிய அன்பும் காதலும் கொண்ட இவருக்கு உதயன் விழாவில் மனோரமா ஆச்சியினால் நிறைந்த பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.

இவரது 46 ஆண்டு கால எழுத்துத்துறை அனுபவத்தையும், கலை திறன்களையும் பாராட்டி இவர் மீது பற்றும் பாசமும் கொண்டுள்ள அன்பு உள்ளங்களினால் இவருக்கு மணிவிழா எடுக்கப்படுகிறது.

உ

**கலை வேந்தன் கணபதி ரவீந்திரன்
அவர்களின் மணிவிழாவில்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளுடன்
அகமகிழ்ந்து வாழ்துகின்றேம்.**

கணபதி ரவீந்திரன் அவர்கள் தமிழ்மொழி மீதும், சைவசமயத்தின் மீதும், கலைகளின் மீதும் பற்றுடன் வாழ்ந்து வருபவர். ஆலயங்களில் சமயஉரைகள், பட்டிமன்றங்கள் மூலம் சமயதத்துவங்களை இளையோர் முதல் முதியோர் வரை எளிமையாக புரிந்துகொள்ளும் வண்ணம் அருள் உரைகள் நிகழ்த்தும் திறமை மிக்கவர்.

தமிழ்மொழியின் வளர்ச்சியில் அவர் வானொலி மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் பல நிகழ்வுகளை வழங்கிவருபவர். நகைச்சுவைமூலம் பல சமூக நாடகங்களை கலைநிகழ்வுகளிலும், தொலைக்காட்சியிலும் சமூக சீர்திருத்த கருத்துக்களை தெரிவித்து மக்களின் நல்வாழ்வுக்கு தன்னாலான சமூகப்பணியினை செவ்வனே ஆற்றிவருகின்றார். வானொலி, தொலைக்காட்சி, மேடைநிகழ்வுகள், திரைப்படம் ஆகிய அனைத்து துறையிலும் தன்னை ஈடுபடுத்தி ரூபி யோகநாதன் குழுவினருடன் இணைந்து கலைப்பணியூடாக நல்ல சமூகக் கருத்துக்களையும், அரசியல் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்துவதுடன் எம்மிடையே தவிர்க்க வேண்டிய குறைபாடுகளையும் துணிவுடன் மக்களுக்கு தெரியப்படுத்தித் தமிழ்மக்கள் ஒற்றுமையுடன் வாழவேண்டிய பலமான கருத்துக்களையும் தன்னுடைய கலைப்பணியினூடாக தெரியப்படுத்திவருபவர்.

இவ்வாறு தமிழ், சமய, சமூக, கலைப்பணிகளை செவ்வனே ஆற்றிவரும் கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்கள் (22.04.2013) இன்று 60வது அகவை மணிவிழாவினை கொண்டாடும் இவ்வேளையில் ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் அவரது நற்பணிகள் தொடர நோயற்ற வாழ்வுடனும் குறைவற்ற செல்வத்துடனும், துன்பமில்லாத மங்களமான நல்வாழ்வு வாழ்ந்து அவரது தமிழ், சமய, சமூக, கலைப்பணிள் தொடர நல் ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.



**"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர்
ரொறன்ரொ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

**மேருபுரம் ஸ்ரீ மகாபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்**
**ரொறன்ரோ**
1510 Birchmount Road, Scarborough, On. M1P 2G6
416-615-0100

# கலைஞர் கணபதி ரவீந்திரநாதன்

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் மேன்மை வேறு எந்தமொழியிலும் இல்லாத சிறப்புத்தன்மை வாய்ந்தது எமது தமிழ் மொழி. தமிழ் மொழியின் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்டும் இலக்கியப்படையல்களுள் நாடம் முக்கியமானது. தொன்று தொட்டு தமிழர் மரபில் ஊறிவிட்ட ஒரு கலை நாடகக்கலை, இறைவனின் அருட்பார்வையை மக்கள் மத்தியில் பரப்புவதற்கும் இறை பக்தியை மக்கள் மத்தியில் வளர்க்கவும் பயன்படுத்தப் பட்ட கலைவடிவங்களுள் ஒன்றுதான் நாடகக்கலை. “உலகமே நாடகமேடை, அதில் நாம் அனைவரும நடிகர்கள்” என்பார்கள். தெய்வாம்சம் பொருந்திய தெய்வக்கலையாக தமிழர் மத்தியில் போற்றப்பட்ட வந்த நாடக மரபு இறைவனின் திருவிளையாடல்களை எடுத்துச் சித்தரித்து அதன்வழி மக்களின் வாழ்க்கையை செம்மையாக்குவதற்காக காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளது.

இறை அம்சம்பொருந்திய வேடங்களைத் தாங்கி கலைஞர்களால் மிகப் புனிதமான ஒரு கலையாகக் கூத்து, நாடகம் என்பன இடம்பெற்றுவந்துள்ளன. மகாபாரதம், இராமாயணம், அரிச்சந்திரா, வள்ளி திருமணம், பேன்றன கூத்துவடிவத்திலும், நாடகவடிவத்திலும் கிராமந்தோறும் மேடையேற்றப்பட்டும் வட்டக்களரியில் ஆடப்பட்டும் வந்துள்ளன. இதில் வரும் கலைஞர்கள் மிகவும் பயபக்தியோடு தாம் மேற்கொள்ளும் நாடகமோ அல்லது கூத்தோ மேடையேறும்வரை இறைவனை வேண்டிய மிகத்தூய்மையாகம் சமய அனுட்டானங்களுக்கேற்பவும் நடந்துவந்துள்ளனர்.

இன்று நாடகங்கள் பல்வேறு வடிவங்களைப் பெற்று சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் பாணியில் அறிவுரைகளை மக்கள் எட்டக்கூடியவகையில் சமூத்தில் உள்ளவர்களின் பாத்திரங்களில் தோன்றி நடித்துவருவது யதார்த்தபூர்வமாகவும் ஜனரஞ்சகமாகவும் இடம்பெறுவதனை காணலாம்.

நடிப்பு என்பது எல்லோருக்கும் இலகுவாக கிடைக்கின்ற ஒன்றல்ல. அது அவர்களுக்கு இறைவனால் கொடுக்கப்படும் ஒரு கொடை என்றே கொள்ளவேண்டும். அத்தகைய கொடையாக நடிப்பைப் பெற்றவர்கள் உலகில் ஒரு சிலரே. ஆப்படியான விரல்விட்டு எண்ணத்தக்க கலைஞர்களுள்ள கலைவேந்தன் கணபதி ரவீந்திரநாதனும் ஒருவர் என்று துணிந்து கூறக்கூடிய அளவிற்கு அவரது நடிப்பாற்றல மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமடைந்துள்ளமை யாவரும் அறிந்ததே. நுடிப்பு என்பது கூர்ந்து அவதானித்து அதன்படி தங்களை அந்தப் பாத்திரத்தோடு ஒட்ட வைத்துக்கொண்டு அப்பாத்திரமாகவே மாறிவிடுகின்ற நிலைதான் சிறந்த நடிகனுக்கான அடிப்படைப் பண்பாக உள்ளது. அந்தப்பண்ணினை நாம் கணபதி ரவீந்திரநாதனிடம் காண்கின்றோம்.

இன்று பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்து நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக்கொண்டு தொடர்ந்தும் நடிப்புத் துறையில் தடம்பதித்துவரும் கணபதி ரவீந்திரநாதன் எமது ஆலயத்தில் பல்வேறு நாடகங்களில் பங்கெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நூடகத்துறையோடு மட்ம் நின்றுவிடாது சினிமாத்துறையிலும் தடம்பதித்து பல படங்களிலும் நடித்தள்ளமையோடு தானே தயாரித்தும் உள்ளார் என்பது அவரது கலையுடனான ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகின்றது.

கலைக்காகவே தனது வாழ்வை ஒப்படைத்துக் கலைஞனாகவே வாழ்ந்துவரும் திரு. கணபதி ரவீந்திரநாதன் அவர்கள் 60 அகவையை நிறைவுசெய்து வைரவிழாக்கொண்டாடும் இவ்வேளை ஸ்ரீமேருபுரம் பத்திரகாளி அம்பாள் அருளோடு நீண்டகாலம் வாழ்ந்து கலையால் சமூகத்தொண்டாற்றிவர ஆசிகளை நல்குகின்றோம்

**லிங்க சுரேஸ்வரக் குருக்கள்**
**லிங்க ரமேஸ்வரக் குருக்கள்**

உ
சாமி சரணம்

ஐயப்ப சுவாமி இந்து குரு பீடம்
பால ஜெகனிவாசக் குருக்கள்
(நல்லூர்இலங்கை)

AYYAPPA SWAMY HINDU GURU PEEDAM
BALA JEGANIVASAKURUKKAL
Hindu Priest Registrar of Marriages of Canada.
(Regd. No. 51904)

110, BETHANY LEIGH DR, SCARBOROUGH, ON M1V 2N7, Canada. Tel : 416-291-3333

# நல்வாழ்த்துக்கள்

மணிவிழாக்காணும் விழா நாயகன் திருவாளர் “கணபதி இரவீந்திரன்” அவர்களுக்கு எமது அன்பான நல்வாழ்த்துக்களையும் ஐய்யப்ப பெருமானின் திருவருள் நிறைந்து விளங்க பிரார்த்திக்கின்றோம்.

“என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற வாசகத்திற்கு அமைவாக தனது கலைப்பணி மூலம் புலம் பெயர்ந்த கனடா மண்ணில் அற்புதமான பணியை மிகச்சிறப்பாக நல்ல கருத்துக்களை காலத்தின் தேவை கருதி வெளிக்கொண்டு வருவது வரவேற்கக் கூடியது. சமுதாயத்தில் மிகவும் அக்கறை கொண்டவர்கள் கலைஞர்கள். தாம் பெற்ற அற்புதமான கலை ஆற்றல் மூலம் தம்மை அறியாமலேயே தம் வாழ்நாளை சமுதாய வளர்ச்சிக்காக அர்ப்பணிக்கக் கூடியவர்கள். மொழித்திறமை என்பது எல்லோருக்கும் கிடைக்க கூடியது அல்ல, இறைவனால் எமக்குக் கிடைத்த அற்புதமான வரம். அதனை நல்ல வழியில் பயன்படுத்துவோம்.

கணபதி இரவீந்திரன் அவர்களும் கனடாவில் சிறந்த இனிய பேச்சாற்றல், நாடகம், பட்டிமன்றம், நடிப்பு, ஊடகம் போன்ற பல கலைத்துறையிலும் தனது திறமையையும், அறிவையும் வெளிப்படுத்தியுள்ளார். சகலகலா வல்லவனாக விளங்கும் அவரை அவருடைய பணி மேலும் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

**கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய பிரதமகுருக்கள்**
**சிவஸ்ரீ, பால.ஜெகனிவாசக் குருக்கள்**
**நல்லூர்**

அருள்மிகு

ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம்

SRI MENATCHY AMMAN SOCIETY (TEMPLE) TORONTO

## ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம் ரொரன்றோ கலைவேந்தன் கணபதி ரவீந்திரனின் மணிவிழா வாழ்த்துக்கள்

கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களை அருள்மிகு மீனாட்சி அம்பாள் ஆலயம் வாழ்த்துவதில் அகமிக மகிழ்கின்றது.

மீனாட்சி அம்பாள் திருவருள் கொண்டு மூவேந்தர்கள் மூலம் முச்சங்கங்கள் அமைத்து முத்தமிழ் வளர்த்து ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அறிமுகப்படுத்திய எம்பெருமாட்டி மீனாட்சி அம்பாள் கலை வளர்க்கும் கலைஞர்களின் பணியை ஆசீர்வதிப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இவ்வகையில் கலைவேந்தன் கணபதி ரவீந்தரன் அவர்கள் கனடாவில் எங்கள் ஆலயத்தில் பல தடவைகள் கீதவாணி வானோலிக்காக நேரடி வர்ணனைகள் செய்தும் உரையாற்றியும், தொண்டுகள் பல புரிந்தும் சிறப்பித்து இருக்கிறார்.

அவர் தமிழ் மக்கள் துயர் உற்றிருப்பதை உணர்ந்து அவர்களுக்காக உருகி வழிபட்ட நாட்களை நாங்கள் நினைவுகூறிக் கொள்கின்றோம்.

என்று ஒருவர் பிறர் நலன்கருதி தன் நேரத்தை செலவு செய்கிறானோ அவன் இறைவனால் நேசிக்கப்படுகின்ற உத்தமனாயிருக்கின்றான்.

# HAPPY BIRTHDAY

Dear Ravi,

Your sixty years of living have been a great blessing to your family, friends, our community and most importantly to the industry of Film, Drama and Media. Our lives are enriched because of our getting to know you.

I am wishing you a great 60th full of all the things that you are still wanting to experience.

Happy Birthday!



**Ken Kirupa**
Ontario PC Party Candidate
ken@kenkirupa.ca

House of Commons



**Rathika Sitsabaiesan**
Member of Parliament for Scarborough-Rouge River

## A PERSONAL MESSAGE FROM MP RATHIKA SITSABAIESAN

22 April 2013

Dear Mr. Ganapathy Raveenthiran,

It is with great pleasure that I extend to you my best regards today on the celebration of your 60th birthday. For the past 60 years, you have lived a life filled with love from those around you.

Through the TV show "Ithuthanda Imsai" you have captured not only the audience of the show but the Tamil diaspora as well. Not only have you captured people through your show, but you have sent a message to your audience to better themselves. Thank you for your wonderful contribution and dedication to our multicultural society. It is a great pleasure to be able to recognize a Tamil individual who is preserving and promoting the Tamil culture in today's society.

Again, I wish you the very best on this the occasion of your 60th birthday. May your future be filled with much love and prosperity.

Many happy returns,

R. Sitsabaiesan MP

Rathika Sitsabaiesan, MP
Scarborough-Rouge River

**House of Commons**
719 Confederation Building
House of Commons
Ottawa ON
K1A 0A6
Tel: 613-996-9681
Fax: 613-996-6643

**Constituency**
8130 Sheppard Ave. E,
Suite 104
Toronto, ON
M1B 3W3
Tel: 416-298-4224
Fax: 416-298-6035
Toll Free: 1-866-871-4676

**Rathika.Sitsabaiesan@parl.gc.ca**

MARKHAM



May 4, 2013

**Logan Kanapathi**
*Councillor, Ward 7*

# *GREETINGS FROM MARKHAM*

Dear Mr. Kanapathi Raveenthiran,

On behalf of Members of Council and the City of Markham, I am very pleased to extend our best wishes and greetings to you on the celebration of your 60th Birthday.

You have crossed several milestones. Today calls for a big celebration.
Sixty years and counting... Enjoy the bliss of sixty; enjoy the fruits of your labour.

You have played multiple roles in your career as a Producer, Director, Actor, Comedian, TV/Radio Host, Writer, Speaker, and a Community Volunteer. It is a rare and unique talent to make others laugh; you are one such uniquely gifted person. I have first hand enjoyed your Dramas and Comedy Shows. They not only serve as a lively entertainment but are thought provoking and leave an everlasting impression with audience. Such creative art forms have been successful in promoting positive social change in the community. As a Councillor of Markham, the most culturally diverse city in Canada, I'm proud of your efforts and contribution in enriching Tamil Culture through art.

Thank you and I wish you continued success, joy and health in all your future endeavours.

Sincerely,

Logan Kanapathi
Councillor, City of Markham

**The Corporation of the City of Markham** · 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.479.7748 · Fax: 905.479.7763 · e-mail: lkanapathi@markham.ca · www.markham.ca




***Hon. Jim Karygiannis***
*Member of Parliament*
*Scarborough-Agincourt*

***Ottawa Office***
*House of Commons*
*231 West Block*
*Ottawa, Ontario*
*K1A 0A6*
*Tel: 613 992 4501*
*Fax: 613 995 1612*

***Constituency Office***
*3850 Finch Ave. E.*
*Suite 206*
*Scarborough, Ontario*
*M1T 3T6*
*Tel: 416 321 5454*
*Fax: 416 321 5456*

***E-Mail***
*jim@karygiannismp.com*

***Website***
*www.karygiannismp.com*


House of Commons

May 2013

It is with great pleasure that I join with his family and friends in celebrating the 60th Birthday of Mr. Kanapathi Raveendran.

Since his youth, Mr. Raveendran has been an active participant in various stage programs such as drama and speech, as well as in local radio and television shows. His experience over the past two decades, he has produced, written, directed and acted in Tamil language dramas. These productions have made it possible for audiences to share in the rich Tamil culture. His contributions to the entertainment industry have been recognized with hundreds of awards and titles.

Mr. Raveendran has been an active member of the community and is to be commended for his contributions and support to various social services.

Canada is a proud multicultural nation that embraces a wide variety of cultures and heritages. It has attracted, and continues to attract, people from all over the world. Canadians of Tamil heritage help to foster this identity and strengthen the fabric of our society. As the Liberal Critic for Multiculturalism, I look forward to our ongoing work in building a stronger Canada.

Your vision and leadership continues to be an inspiration.

Best of wishes for future success!

Sincerely,

James Karygiannis

Hon Jim Karygiannis, P.C., M.P.
Scarborough-Agincourt

*On the occasion of your $60^{th}$ birthday*

*On this 22nd day of April 1953*

*I extend my best wishes to*

# *Ganapathy Raveenthiran*

*Your commitment and dedication to the Tamil community is appreciated and truly inspiring.*

*Thank you!*

*Rathika Sitsabaiesan, MP*
*Scarborough-Rouge River*

*On behalf of the Government of Canada*
*Your Member of Parliament for Don Valley East,*
*Congratulations and Best Wishes to*

# Ganapathy Raveenthiran

*On celebrating your $60^{th}$ Birthday on*

*April 22nd, 2013*

*The warmest of wishes,*
*may your birthday be filled with happiness*

Joe Daniel, M.P
Don Valley East

House of Commons



May 4th, 2013

**Rathika Sitsabaiesan**
Member of Parliament for Scarborough-Rouge River

Dear Kanapathy,

I would like to extend my best wishes and greetings to you in celebration of your 60th birthday. It is a great honour to be included in this joyous celebration and to offer my most sincere birthday wishes.

You have made a tremendous contribution to the preservation and promotion of Tamil heritage and values in the Canadian Tamil community and throughout Canada. Through the many artistic endeavors you are involved with, you continue to enrich all of our lives and the legacy of Tamils in Canada. We are forever grateful for your efforts and for everything you have accomplished for Tamils in Canada. Your efforts do not go unnoticed and are truly appreciated by myself and I am sure the entire community.

Again, I wish you the happiest 60th birthday. May your future be filled with peace and happiness.

Many happy returns,

Rathika Sitsabaiesan

**House of Commons**
140 Confederation Building
House of Commons
Ottawa ON
K1A 0A6
Tel: 613-996-9681
Fax: 613-996-6643

**Constituency**
8130 Sheppard Ave. E,
Suite 104
Toronto, ON
M1B 3W3
Tel: 416-298-4224
Fax: 416-298-6035
Toll Free: 1-866-871-4676

Rathika.Sitsabaiesan@parl.gc.ca

*On behalf of the City of Toronto,*
*I, Councillor Raymond Cho, representing Ward 42, Scarborough-Rouge River,*
*am overjoyed to extend my warmest congratulations to*

***Ganapathy Raveendran***

*in celebrating your*

***60th Birthday***

*Each passing year provides another chance to pause and reflect on the many achievements of one's life. May the happy memories of time spent with family, friends and loved ones enrich your life and hold a special place in your heart as you look forward to many more birthdays to come. Remember you are just a 20 year old with 40 years of experience. You have seen or experienced a lot of wonderful things all these years. Hope you keep doing the same. Stay healthy and fit.*

*On this very special occasion, I am delighted to join your family and friends in wishing you a very Happy Birthday filled with the blessings of love, laughter and good health for this year and for many years to come.*

Raymond Cho

*Dr. Raymond Cho*
*Toronto City Councillor*
*Ward 42, Scarborough-Rouge River*

## Message from Neethan Shan
## President – Ontario New Democratic Party (Ontario NDP)



I am very pleased to extend my heartiest birthday wishes to Mr. Kanapathy Ravindran as he celebrates his milestone 60th birthday with families, friends and well-wishers. I have been a fan of his acting and comedy shows since my high school days. His comedy stage shows were a great hit amongst youth. In fact, he probably was the only adult comedian that youth those days connected to and enjoyed greatly.

His humour and his ability to spontaneous respond to situations in a witty manner are admirable. In addition to his artistic skills, I also would like to acknowledge his ability to connect with people of all ages on a personal level. He takes the time to talk to and listen to a great diversity of individuals. It is no surprise that his unique and friendly personality has brought him many good friends from all circles in the Tamil Canadian community.

Whenever we run into each other at various community events, he makes sure to indicate his support for my initiatives and never fails to communicate his hopes and wishes for my success.

I wish to congratulate and thank him for his significant contribution to Tamil Canadians in the fields of drama, cinema, arts and media. At the same time, I wish him a long life and good health so that he can continue to produce many more artistic pieces both on stage and in media for many more years to come.

Ravi anna, I take this opportunity to wish you many, many happy returns of the day.

Sincerely,

**Neethan Shan**
President, Ontario NDP

1740 KINGSTON RD. EAST, P.O.BOX #134, PICKERING, ON., L1V 2R2

On the behalf of Tamil Cultural & Academic Society of Durham, It is my greatest pleasure and privilege to congratulate

## Mr. Ganapathy Raveendran

on his 60th Birthday. Further, I would like to congratulate Mr. Ganapathy Raveendran for being an eminent architect for many Tamil dramas and movies in Canada. You are a repository important pillar and an invaluable asset to the Tamil Community. I gratefully acknowledge the support that you have given to our organization. I am confident that you will continue to play a leading role in serving the Canadian Tamil Artists and the local community.

Once again, I congratulate your achievements and extend the very best for your growth and success in the future. God bless you.

Yours truly,

Tom Thiru
President
Tamil Cultural & Academic Society of Durham (TCASD)



# ௬௦வது பிறந்ததின வாழ்த்து



சேய் உனை வாழ்த்த எங்கள்
தாய் இன்று எம்முன் இல்லை
ஆயினும் நான் இன்று உந்தன்
அன்னையாய் வாழ்த்துகிறேன்
நீ எந்தன் இளவல் ஆயினும்
நான் இன்று எமது தாயின்
சேவடி போற்றி நீர் சிறப்புற
வாழ்த்துகிறேன்.

தாயினைப் போற்றும் சேயே
இந்த தரணியில் நீடு வாழ்க
ஆய்கலை அனைத்தும் கற்று
அரும்பெயர் பெற்று வாழ்க
நேயர் தம் நெஞ்சமெல்லாம்
நிறைந்து நீ இனிது வாழ்க.

தூய்யவா எங்கள் தம்பி நீ
துயரின்றி என்றும் வாழ்க
வாழி நீ தம்பி - இந்த
வையகம் உனைப்போற்ற
ஊளிகள் பல சென்றாலும்
உன் பெயர் நிலைத்து நிற்க
ஆழிசூழ் உலகம் போற்றும்
அறிஞனாய் நிலைத்து வாழ்க

வாழி நீ எந்தன் தம்பி
வாழி நீ வாழ்க வாழ
அகவை இன்று
உனக்கு அறுபது என்று
அகமிக மகிழ்ந்து உன்னை
அன்போடு வாழ்த்துகின்றேன்
நினைத்திடும் புகழோடு
நீ நீடுழி வாழ்க வாழ்க

அன்புச் சகோதரி
**சாரதா கணபதிப்பிள்ளை**
சட்டத்தரணி
(கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட பதிவாளர்)


**S. KANAPATHYPILLAI** B.A., D.A.E

Attorney - at - Law
Notary Public
Commissioner for Oaths &
Company Secretary

Office
No. 5 Belmont Street,
Colombo - 12.
Mobile 077 9949312

Residence
47, Hanwella Road,
Galagedara,
Padukka
Tel. 2859245

# நடித்திடப் பிறந்தவன் நீயல்லவோ!

நகைச்சுவைக் கணபதி இரவீந்திரா
நாடக உலகத்தின் கலைவேந்தனே
அகவையும் அறுபதோ யார்நம்புவார்
அழகனே ஆண்டின்னும் நூறாள்கவே!

நடித்திடப் பிறந்தவன் நீயல்லவோ
நடத்திட வல்லவன் நீயல்லவோ
சுடச்சுடத் தருபவன் நீயல்லவோ
சுவைகளை விளைப்பவன் நியல்லவோ?

ஆயிரம் மேடைகள் கண்டவனே
அற்புதச் சாதனை படைத்தவனே
கோபுர உச்சியைத் தொட்டவனே
கொள்கையற் றோர்தமைச் சுட்டவனே!

நேர்மைக்கு நெஞ்சினைக் கொடுத்தவன்நீ
நீதியை நாட்டிட நடித்தவன்நீ
யாருக்கும் தீங்குகள் செய்தறியாய்
அன்பர்கள் துன்பங்கள் கொய்திடுவாய்!

தந்தைக்கு முதலிடம் தந்திடுவாய்
தமிழினைத் தாயெனக் கும்பிடுவாய்
சிந்திக்க நகைச்சுவை கொடுத்திடுவாய்
சிறந்தநற் கவிதைகள் வடித்திடுவாய்!

கவிதையை என்னிடம் சிலகாலம்
கற்றனை முற்றாய்த் தொடர்ந்திடவே
அவதிகொள் உலகம் விடவில்லை
ஆயினும் கவியுள்ளம் கெடவில்லை!

துணிவாய் எண்ணித் தொடர்ந்திடுவாய்
துயர்கள் வரினும் சிரித்தெழுவாய்
பணிவாய் நீளம் பாய்ந்திடுவாய்
பண்பாய் ஆழம் ஆய்ந்தறிவாய்!

கவலைக்கு மருந்தினைத் தந்துவரும்
கலைஞர்க்கு வயதில்லைத் தம்பி ரவி
எவரெஸ்டு மலையெழும் கதிரவன்போல்
என்றென்றும் வாழிய இன்புறவே!

யான்மட்டு மன்றிநற் றமிழுலக
யாவரும் நீடு வாழ்கவென
ஊன்மிக உருகியே வாழ்த்திடுவார்
உனக்கொரு குறையில்லை வாழியவே!

- வி. கந்தவனம்

# கணபதி இரவீந்திரன்



**பாராட்டுக்குரிய நகைச்சுவை:**

தமிழிலே நாடக அரங்கில் நகைச்சுவை என்றதும் எனது கண்முன்னே வருபவர்கள். கலைவாணர் N.S. கிருஷ்ணனும் நடிகவேள் M.R ராதாவுமே. முன்னவர் சமூகத்திற்குத் தேவையான பல முற்போக்குக் கருத்துக்களை நகைச்சுவையுடன் சொல்வார். கேட்பவர்கள் சிரித்து மகிழ்வார்கள். ஆனால் அதே சமயம் அங்கே பொதிந்துள்ள கருத்துக்கள் அவர்களில் ஒரு சிந்தனைத் தூண்டலாக அமையும். சிரிப்பது அந்த அமையத்துக்கு மாத்திரமே. சிந்தனையோ மனதினை வருடிக் கொண்டிருப்பதால் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கு ஆதார சுருதியாக அமையலாம். M.R ராதாவினுடைய நகைச்சுவை நையாண்டியும் கிண்டலும் நிறைந்ததாக அமையும். அன்றைய தினசரிச் செய்திகள் அவரது நகைச் சுவையில் அடிபடும். அச் செய்திகளின் ஜதார்த்தம், சமூகத்தில் அச் செய்திகளால் ஏற்படும் பாதிப்புக்கள், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற் போல என்பார்களே அப்படி இருக்கும். நகைச்சுயையினால் ஈர்க்கப்பட்டு நகைகின்ற பொழுதே ஏதோ ஒரு நருடல் மனதிலே லேசாகக் குத்தும்.

இக் கட்டுரையை வாசிப்போரில் குறைந்தது 90% பேர்களுக்காவது இந்த இரு கலைஞர்களின் நாடகம் பார்த்த அனுபவம் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் என்னைப் பொறுத்த மட்டிலே இவர்களுக்குப் பின்னர் திரை உலகிலோ நாடக அரங்கிலோ ஆட்சி செய்த எந்த ஒரு நடிகருமே எனது உள்ளத்தில் பெரிதாக இடம் பிடிக்கவில்லை. கணபதி இரவீந்திரனுடைய நகைச்சுவை நிகழ்ச்சிகளை நான் பலமுறை கண்டுள்ளேன். மிகவும் ரசித்தும் உள்ளேன். இத்தனை ஆற்றலா எனச் சிலாகித்துமுள்ளேன். சில சயமங்களில் எனது எதிர்பார்ப்பு நிகழ்ச்சிகளின் போது ஈடுசெய்யப்படா விட்டால் எனது வெறுப்பினையும் அவருக்கு எடுத்துக் கூறியுமுள்ளேன். இவ்விதமாக நிகழ்ச்சிகளைச் செய்வாயென்றால் இனிமேல் உன் நிகழ்ச்சிகளுக்கு வராமல் விட்டு விடுவேன் என எச்சரித்தும் உள்ளேன். ஆனால் அவருள்ளே ஒரு நகைச்சுவையாளன் இருப்பதை எவருமே மறுப்பதற்கில்லை. நல்ல நகைச்சுவையாளனாக இருப்பதற்கு அத்தியாவசியமானவை. தேடல், நிறையவே வாசித்தல், கேட்டல் மூலம் பெறுவது, தகவல்களை வைக்கும் பொட்டகம் போலத் தேவையான பொழுது உயபோகிக்கச் சேமித்து வைத்தலும் அவற்றினைத் தேவையான பொழுது எடுத்தியம்பும் நினைவாற்றலும், சாமானியரால் முடியாத குயுக்தியாகச் சிந்திக்கின்ற ஆற்றல், மற்றும் சமயோசிதம். இவை யாவும் கணபதி இரவீந்திரனிடம் ஓரளவு இருப்பதைக் கண்டேன். அவரை நல்லதோர் நகைச்சுவையாளாகக் கணித்தேன்.

**கவர்ச்சிகரமான பேச்சாளன்:**

வெண்கலப் பானையில் தட்டினால் எழுகின்றது போன்ற கணீரென்ற குரல் அவருடையது. எனவே மேடையில் பேசுகின்ற பொழுதோ அல்லது நிழச்சிகளை மேடைகளில் நடத்துனராகச் செயற்படுகின்ற பொழுதோ அவரது மொழி ஆதிக்கம் அவையினை ஆட்கொள்ளவே செய்யும். உரைகள் நிகழ்த்தும் பொழுது இலக்கியமயமாக அல்லது திரைப்படத்திலிருந்து பாடல்களை மேற்கோள் காட்டுகின்ற பாணி கவர்ச்சிகரமானதாக இருக்கும். நீண்ட கவிதை வரிகளை உணர்ச்சி பூர்வமாக அவர் சந்தர்பத்துக்கேற்றவாறு எடுத்துக் கூறுகையில் அவரது நினைவாற்றலைக் கண்டு நான் வியந்துள்ளேன். இலக்கியத்திலே அவருக்கு இருந்த ஈடுபாடும் மனனம் செய்கின்ற திறனும் பாராட்டுக்குரியவை. இத்தனை ஆற்றல் கொண்டவர் ஏன் தனது கல்வியைத் தொடராமல் விட்டார் என்ற எனது உள்ளத்து ஆதங்கம் இப்போது ஓரளவுக்குப் போய்விட்டது எனலாம். அவர் மனோன்மணியப் பல்கலைக் கழகத்தினது பட்டதாரியாய் ஆகியுள்ளமை நிறைவைத் தருகிறது.

**மற்றையோருக்கு உதவும் பண்பாளன்:**

கண்களில் பட்டவுடனே ஒரு முறுவல் அதனைத் தொடர்ந்து பணிவான உரையாடல் அவருக்கே உரிதான பழகு முறை. எங்கேயாயினும் விழாக்களிலே என்னைக் கண்டால் அவர் முதலில் விசாரிப்பது, நான் திரும்ப வீட்டிற்குப் போவதற்கு என்ன ஒழுங்கு செய்துள்ளேன் என்பதையே! என்னை மாத்திரமல்ல தனக்குப் பரிச்சயமானவர்கள் அத்தனை பேர்களையும் கேட்டறிந்து அவர்களுக்கு வீடேகுவதற்கு உதவ வேண்டுமாயின் சளைக்காமல் அதனைச் செய்து கொடுப்பது அவரது நல்லியல்புகளில் தலையாயது.

முதியவர்கள் மேல் அவர் காட்டும் அன்பு அலாதியானது. அவர் நடத்துகின்ற நாடகவிழாக்கள் எங்கு நடந்தாலும் அங்கு முதியவர்கள் வந்து இன்பமாகப் பொழுது போக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் அவர்களுக்குப் போக்கு வரத்து ஒழுங்குகளைத் தவறாது செய்து கொடுக்கும் பண்பாளராக விழங்குகிறார்.
இங்கு கலை ஆர்வம் உள்ள இளம் சிறார்களுக்குத் தனது கலைவிழாக்களிலே சந்தர்பங்களைக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்கிறார். அவரது ஊக்குவித்தலால் வளர்ந்து இன்று நல்ல கலைஞர்களாக மிளிர்ந்திருப்பவர்கள் பலரை எடுத்துக் கூறமுடியும்.

கணபதி இரவிந்திரன் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து சமூகத்துக்கு அரும்பணியாற்ற வேண்டும் என்ற என் ஆவல் நிறைவேறும் என்ற நம்பிக்கை உள்ளது.

**பொ.கனகசபாபதி**




ரவி தமிழ்வாணன்

நிர்வாக இயக்குநர்

மணிமேகலைப் பிரசுரம்,


## மனோரமாவின் பாராட்டைப் பெற்ற மகத்தான கலைஞர் கணபதி ரவீந்தரன்!

சில வருடங்களுக்கு முன்பு உதயன் ஆண்டு விழாவிற்கு பிரதம ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் அவர்களின் அழைப்பை ஏற்று தமிழகத்திலிருந்து மிகச்சிறந்த நடிகையான மனோரமாவும், இவர் மகன் பூபதியும், நானும் கனடாவிற்கு வந்து கலந்து கொண்டோம்.

மது அருந்திய ஒரு மனிதனின் நிலையை அரங்க நாடகமாக திரு. கணபதி ரவீந்தரன் நடித்து அனைவரையும் அசத்தி விட்டார். அசத்தி! மேடையில் நடிக்க ஆரம்பித்து அங்கிருந்து இறங்கி வந்து சபையினரிடம் வந்து கலாய்த்து கடைசி வரிசை வரை போய் தொடர்ச்சியான நகைச்சுவைகளை வசனங்களை அதுவும் இவருக்கு உரித்தான இயல்பான ஈழத்தமிழரின் சிரிப்பு வெடிகளை தொடர்ந்து போட்டுக்கொண்டே வர ஒரு பெரிய மின்விளக்கு இவர் போகும் இடமெல்லாம் வெளிச்சம் போட மிகப்பெரிய புகழ் வெளிச்சத்தைப் பெற்றார் நம் விழா நாயகர். மனோரமா ஆச்சி ஆச்சரியமடைந்து மனந்திறந்து வெகுவாகப் பாராட்டினார். ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்து அனுபவம் பெற்றவர் பாராட்டியது பெருமைக்குரிய விடயம்.

திரு. கணபதி ரவீந்திரன் சிறந்த கலைஞரும் கூட. இவர் நூலை வெளியிட இருக்கிறோம். இவர் 100 ஆண்டு வாழ வாழ்த்துகிறேன். இவருக்கு உறுதுணையாக இருக்கும் ரூபி யோகதாசனையும் பாராட்டுகிறேன்.

**அன்பின்**

**ரவி தமிழ்வாணன்**


தபால் பெட்டி எண் : 1447, எண் : 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24 34 29 26, தொலைநகல் : 0091 44 24 34 60 82
மின் அஞ்சல் : manimekalai@eth.net மின்இணையம் : tamilvanan.com

## திரு. கணபதி இரவீந்திரன் அகவை அறுபது பூர்த்தி விழாவில் வாழ்த்தி அளிக்கப்பட்ட வாழ்த்து மடல்

**22-04-2013**

செந்தமிழும் சைவமும் இணைந்து வாழ்ந்த
சிறப்புற்ற கலை, கல்வி பொலிந்த யாழில்
வந்தனைக் குகந்த கணபதி தம்பதியர் அன்று
வரமாகப் பெற்ற கார்முகில் வண்ணன் ரவி,
அந்தமிலான் அருளால் அகவை அறுபதைப் பூர்த்திசெய்ய
அன்புள்ளோர் அறிஞர் சுற்றம் அனைவரும் கூடி
நந்தா விளக்காய் வாக்கை என்றுமே ஒளிர வாழி!
நலன் பல பெற்று வாழ்க! என வாழ்த்துகின்றார்.



பார்த்து பல ஆண்டு கடந்த போதும்
பாசமுடன் உனை நினைக்க உள்ளமுண்டு,
நேற்றுத்தான் நடந்தது போல் சில நிகழ்வு
நெஞ்சத்தில் முகிழ்ந்தெழுந்து காட்சியாகும்
வேற்றுமொழி பேசும் நாட்டில் வாழ்ந்தபோதும்
வேதமென தமிழ் மொழியைக் கைவிடாது,
ஆற்றுமுந்தன் கலைப்பணிகள் உவந்து கேட்டேன்
அகம் குளிர உன்னை என்றும் வாழ்த்தும் அம்மா.

அன்று நீ செங்குந்த வகுப்பறையில் சிறுவனாக
ஆழியைத் தேடும் ஆறாய் ஓடிவந்து
அன்புடனே "மிஸ் நான் ரவி" என்றாய்
"மிஸ்" என்றால் இழப்பு என்று நினைத்த என்னை
என்றுமே யிழந்திடாத தாய்மை தான்
"மிஸ்" என்று உணர வைத்தாய் உன் செயலால்
அன்றுமுதல் என் நிழலாய்ச் சுற்றிவந்தாய்
என் குடும்பம் அனைவரையும் அன்பால் வீழ்த்தி வென்றாய்

மெலிந்த உடல், கலைந்த முடி, காந்தக் கண்கள்
சலியாது சரளமாகப் பேசும் ஆற்றல்,
விலையில்லா சித்திரங்கள் தீட்டும் வன்மை
விரைவாகப் பிறர் துயர் துடைக்கும் ஆர்வம்
வலிபோக்கும் நகைச்சுவையை அள்ளி ஈயும்
வித்தகனாய் நடிப்பினிலே விளக்கும் காட்சி பார்த்து
அலையலையாகப் பெருகும் சிரிப்பிலும் நீ
சிந்தனைக்கு விருந்து ஈயும் சூத்திரதாரி நீதான்!

அகவை அறுபதைப் பூர்த்தி செய்வோர்
ஆயிரம் பிறைகண்டார் எனப்புகல்வர் அன்று
தகமையதற்கு பல உண்டெனனினும்
தனித்துவமான ஓர் உண்மையுண்டு!
பகையாக உயிர் கொண்ட பசிப்பிணியை, ஒழிஎன
பாவை மணிமேகலை உணவீந்துயிர் கொடுத்தாள் (நீரும்)
உவகையமுதளித்த உன் நகைச்சுவையால்
உயிர்பெற்றோர் வாழ்த்தியதால் உயர்ஆயுள் பெற்றாய்

வாழ்த்துகிறேன் மைந்தா உன் வாழ்க்கை தன்னில்
வரலாற்றுச் சான்று காட்டும் சிறப்பு வேண்டும்
தாழ்மையுறும் ஈழமக்கள் பிறுமை போக்கி
வேற்று மண்ணில் வீரதாய அவர் வாழ்வதற்கு,
ஆழ்கடலாம் எம் இலக்கியத்தில் கதைகள் உண்டு
அவைகூறும் செய்தியினை அரங்கில் காட்ட
வேள்வியென நாடகத்தை நீர் செய்யும் போது
வேர்விடுமே தமிழ்ப்பண்பு மலர் சொரிய வாழி!

அம்மா
**திரு. திருமதி. பா. சண்முகராசா**

வளமுடன் பல்லாண்டு பணி தொடர பிறந்த நாள் வாழ்த்து



புலம்பெயர்ந்த மண்ணில் தமிழை தாய்மொழியாக பேசும் இளம் தலைமுறை கல்வியாளரின் பல்கலைத் திறனை இனம் கண்டு அவர்களை ஊக்கப்படுத்தி பல்வேறு வழிகளில் களம் அமைத்துக் கொடுப்பதில் முதன்மையானவர் நீண்ட நெடிய வரலாறு படைத்த தாய்த்தமிழ்ன முத்தமிழ் கலைஞர் கணபதி ரவீந்திரன் கடந்த கால சிறப்பான பணியோடு இன்னும வளமுடன் பல்லாண்டு பணி தொடரட்டும்.

எமது இணையத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் தேர்வில் பங்கேறகும் கல்வியாளரகள் அவர்தம் பெறறோர் தமிழ்மொழி விழாவில் பங்கேற்கும் கலைஞர்கள் அவர்தம் பெறறோர்கள் இணைய உறுப்பினர்கள் அனைவரும் முத்தமிழ் கலைஞர் கணபதி ரவீந்திரன கடந்த கால சிறப்பான பணியோடு இன்னும் வளமுடன் பல்லாண்டு பணி தொடர வாழ்த்துகிறோம்

முதறிஞர் கந்தமுருகேசனார் தமிழ்ப் பண்பாட்டு இணையம் மேழம் 23 2044 (May4,2013)



## கவின்கலைக் கலைஞன் கணபதி ரவீந்திரன்

"கலை" என்பது இயற்கையின் அருட்கொடை. எல்லோருக்கும் இந்த அருட்கொடை கிட்டுவதென்பது சாத்தியமில்லை. ஆனால் ஒரு சிலர் பிறக்கும் போதே கலைத்தேவியின் கடாச்சத்தை நெஞ்சில் சுமந்தபடியே பிறக்கின்றனர். சிலர் கலைகள் மீது தமக்கேற்பட்டுள்ள ஆறாக் காதலால் அவற்றைப் பயின்று அதிவும் திறமையும் திருப்தியுமடைகின்றனர். சிலருக்கு இவை எத்தனை முயன்றும் கைகூடுவதேயில்லை. இத்தகைய சூழ்நிலையில் கலைஞர் கணபதி ரவீந்திரன் பிறக்கும் போது கலைத்தேவியின் அருட்பார்வையுடன் பூவுலகிற்கு வந்தமையால் அவர் ஓர் பிறவிக் கலைஞனே என்பதை அவை மேற்கொள்ளும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் நினைவூட்டுகிறார். நடிப்பு, நகைச்சுவை எல்லாமே அவருக்கு அத்துப்படி.

இந்த விளையும் பயிர் தன் மாணவப் பருவம் என்ற "முளையிலேயே தனது பேச்சினால், குறும்பான நகைச்சுவையினால், மற்றவரை மகிழ்வித்தும், சிரிக்க வைத்தும், சபையைக் கலகலப்பாக்கியதோடு தான் வளர வளர இக்கலையும் அவர் இரத்தத்தில் உணர்வுகளில் ஒற்றிணைந்து ஊறி வளர்ச்சியடைந்துள்ளது எனக் குறிப்பிடலாம்.

கணீரென்ற இனிய குரல்வளம் எல்லோரையும் கவரும் இனிய சொல்வளம், மனதைத் தொட்டு வருடும் கருத்துவளம், நவீன செய்திகளைச் சுவையாக எடுத்து விளக்கும் உரைவளம் இவை எல்லாவற்றையும் முகபாவனையிலேயே பிம்பப்படுத்தும் ஆற்றல்வளம் எனச் சகலவிதமான நடிப்பு வளங்களையும் ஒன்றிணைத்து அன்றன்றைய காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப விநியோகம் செய்யும் மையமாக விளங்கிய சிறப்பு இக்கலைஞனுக்கே உரிய தனிச்சொத்தாகும்.

தாய் மண்ணில் இருந்தபோது காத்திரமான பல கௌரவங்களையும் பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்ட கணபதி ரவீந்திரன் உறைந்துபோகும் குளிரான காலநிலையைக் கொண்ட கனடாவில் காலூன்றிய பின்னரும் கூட பல நிகழ்ச்சிகளை நடாத்தி மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறார்.

மக்கள் மகிழ்ந்தால் மாத்திரம் போதாது, மனதில் நல்ல மாற்றமும் ஏற்பட வேண்டும். அவர்களும் இக்கலையில் ஊறித் திளைப்பதோடு தன் மனோபாவத்தை உளப்பாங்கை, சிறந்த விழுமியங்களை உள்வாங்கி அவற்றை வளர்த்தெடுப்பதும் வார்த்தெடுப்பதுமே கலையின் தலையாய பணியாகவும் இலக்காகவும் அமைய வேண்டுமென்பதற்கேற்ப கணபதி ரவீந்திரன் அவர்கள் மேற்கொண்டுவரும் இக்கலைப்பணி நிச்சயம் மக்களை மகிழ்விப்பதோடு மட்டுமன்றி சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றத்தையும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய திருப்பணியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நமாதானமானதும் சமத்துவமானதுமான சிறந்த விழுமியங்களை உள்ளடக்கிய அதிசிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான தார்மீக தத்துவங்களை இலக்காக வைத்து ஆடல், பாடல், சம்பாஷனை, இசை என்பவற்றை இணைத்து மக்கள் வாழ்வியலையொட்டி நடாத்தும் கலைஞன் கணபதி ரவீந்திரனின் கலைத்துவம் மிக்க பணி சிறக்க, கலைஞனின் கவித்துவம் பிரகாசத்தோடு மிளிர அவரது மணிவிழா நன்நாளிலே மங்கலம் பொலியும் நல்வாழ்த்துக்கள்!

வாழ்க! வளமுடன்!

**அன்புமிக்க**
**பத்மா சோம காந்தன்**

215 GA அன்டேசன் தொடர்மாடி
பார்க் வீதி
கொழும்பு -05

# வாழ்த்த வயதுண்டு .௬௦.

நட்பெனப்படுவது யாதெனின்
கண்ணீரோ, புன்னகையோ
முன் வருகின்ற முதல்கை.

மூடியிருந்த உள்ளங்கை திறக்க
வண்ணத்துப் பூச்சிகளாய் பறக்கின்ற வயதுகள்
கூடியிருந்த உறவுகளைத் திறக்க
கும்பல் கும்பலாய் விரிக்கின்ற நினைவுகள்
வயதொன்றில் மடிகளின் பயணமும்
வயது ஐந்தில் மழலையும் தளிர்நடையும்
பத்து வயதில் பள்ளியும் குறும்புகளும்
இருபதில் மேடைகளும் மனசில் தேவதைகளும்
மும்பதுகளில் புதிய தேசங்களும் முகங்களும்
இன்னும் கடக்க எத்தணையோ அனுபவங்களும்
இதோ மற்றும் ஒரு வாழ்த்துக்குரிய நாள்...
வாழ்த்துக்களுடன் நான்!
நான்

யார் சொன்னது
வெறும் சிட்டுக் குருவிகள் என்னு?
சேர்ந்தே கிளம்பி
சேர்ந்தே திரும்பும்
நட்புக் குருவிகள்

பேரன்பும் பெருங்கோபமுமாய்
வேரோடியிருந்த உணர்வுகளோடு
நீயும் நானும்
நட்பாய் தோழமையாய்
உன் வரையான எல்லாவற்றிலும்
ஒப்புதல் எனக்கில்லை
என் வரையான பலவற்றிலும்

ஏற்புடையவன் அல்ல நீ...
இந்த முரண்களுடனே
இருவரும் இருக்கும்
அழகான நட்பின்
வருஷங்கள் இருபத்தில்
இன்னும் தோழமையோடு...

நெஞ்சார வாழ்த்துகின்றேன்
நீடுழி வாழ்க...
கலையும் இலக்கியமுமாய்
காலச் சாலையெங்கும்
பூக்கள் பூப்பதித்து
கொண்டாடி வாழ்க!

விகடனிலிருந்து...

காதல் போன்ற மழை
சாலை நனைக்கும்
கலவி போன்ற மழை
சகலமும் பெயர்க்கும்
நட்பைப போன்ற மழை
வயலை நிறைக்கும்!

என்றும் நட்புடன்
**பிரியமுள்ள கலாதரன்**

## நடமாடும் கலைப் பூங்கா! கணபதி ரவீந்திரன்!

பன்னிரண்டு மாதங்கள்....
ஐம்பத்திரண்டு வாரங்கள்....
முன்னூற்றி அறுபத்தைந்து நாட்கள்....

விரிந்து நீளும் இந்த இடைவெளிக்குள்
விந்தைகள் பல புரியும் மனிதருக்கு
ஒரு வயது அதிகரிப்பை மட்டும்தான் காலம் வழங்குகின்றது

கணபதி ரவீந்திரன் என்னும்
பிறவிக் கலைஞரும் இதற்கு விதிவிலக்கல்ல...
விலை மதிப்பில்லாத இந்த கலைஞருக்கு இன்று
அவரது வயது மதிப்பளிக்கின்றது

மணிவிழா நடத்த இதயங்கள் விரும்பின
மனித நேயம் மண்டபத்துள் விரிந்தது
இனியொரு வைபவம் இதைப் போலிருக்குமோ
என்றே கேள்விகள் இன்றே எழுந்தன

ஒரு கருப்பு மனிதருக்குள்ளே
இத்தனை கலைப் பிம்பங்களா?
கணபதி ரவீந்திரன் நடமாடும் கலைப் பூங்காவா?

நால்வருக்கும் பொதுச் சொத்தாய் நம்மிடையே வாழ்பவர்
நகைச்சுவையை நம்பியே மேடைதன்னில் தோன்றுபவர்
மேலான இலக்கியங்கள் மோகத்துடன் கற்றவர் நம்
மொழியின் பெருமைகளை பேச்சினிலே போற்றுபவர்

நாடகத்தின் பாத்திரமாய் மாறி நின்று நடிப்பவர்
நம் இனிய குழந்தைகளை உணர்வூட்டி வளர்ப்பவர்
தேடி வரும் பெரியோரின் தேவைகளை அறிந்து
தென்பூட்டும் வகையில் உடனிருந்து மதிப்பவர்

கவிதையோ சிறுகதையோ கடிதான இலக்கியமோ
காதல் மிகக் கொண்டு கற்றுத் தெளிபவர்
குவியும் பாராட்டும் கொண்டு வரும் பரிசு கண்டும்
குலையாத மனங்கொண்ட கலைவேந்தன் வாழியவே

**ஆர். என். லோகேந்திரலிங்கம்**
**பிரதம ஆசிரியர் - கனடா உதயன் பத்திரிகை**

## எம்மவர் ரவி

கணபதி ரவீந்திரன் தமிழ் ஆண்டுகளின் ஒரு சுற்றை நிறைவு செய்துள்ளார் என்று அறிந்து ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

பேச்சு, நடிப்பு, இயக்கம், தயாரிப்பு, சமூகசேவை என்று பன்முக ஆற்றலும் திறமையும் ஆளுமையும் நிறைந்தவர் ரவி. இது பற்றி பலர் எழுதுவார்கள்.

மகாஜனக் கல்லூரி முத்தமிழ்விழா மேடையில் எனது நெறியாள்கையில் ''என்னத்தைச் சொல்லி'' என்ற நகைச்சுவை நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று திறம்பட நடித்து அதன் வெற்றிக்கு காரணமாக இருந்தவர் ரவி என்று கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன். திரைப்படங்கள் நாடகங்கள் மூலம் அவருடன் நான் தொடர்பாக இருக்கிறேன் என்பது மகிழ்வான விடயம்.

எதையும் சுலபமாக எடுக்கும் பாங்கும், தவறு என்று சுட்டிக்காட்டினால் தவறை ஒப்புக்கொண்டு அதற்கு மன்னிப்புக் கேட்கும் பண்பும் நான் அவரில் அவதானித்தவை.

நளினம், நக்கல் இல்லாத நகைச்சுவை கலந்த உரையாடல் மூலம் உலகம் முழுவதும் நண்பர்குழாம் வைத்திருக்கும் நண்பர் கணபதி ரவீந்திரன் இன்னும் ஒரு சுற்று சுகதேகியாக வாழ வாழ்த்துவது

**கதிர் துரைசிங்கம்**

# நினைவில் நிலைத்த கலைஞன்



உந்தனுக்கு அறுபது ஆயிற்றா? ஆச்சரியம் உண்மை அதுவானால் இருக்கட்டும். உன் உள்ளத்தால் உணர்வால், என்றும் ஓரே மாதிரித் தோற்றமளிப்பதால் அதைவிடக் குறைவாகவே என் மதிப்பு. உன் நடிப்பால் ஈர்க்கப்பட்ட ரசிகர் கூட்டத்தில் நானும் ஒருவன். கணபதி – சகலகலாவல்லவன் என்றால் சாலப்பொருந்தும். கை தட்டல் ஒலிக்கிடையே அர்த்தமுள்ள பேச்சுக்கள். அது உங்களுக்கு கடவுள் கொடுத்தவரம்.

நாடகத்துறையில் ஓர் சிகரம். பல ஆயிரக்கணக்கான மேடைகளைப் பதம் பார்த்த இயக்குனர், தலைசிறந்த நடிகர். சிரிப்பொலி அரங்கத்தை அதிர வைக்கும் நடிப்புக்கள் உங்களின் தனிப்பட்ட சொத்து. சினிமாத்துறை இந்தியர்களுக்கு மட்டும் உரித்தானதல்ல என்பதை உணர்த்தவல்ல படங்களைத் தயாரித்தளித்த பெருமை உங்களுக்குண்டு. பேனாவை எடுத்து பேப்பரில் வைத்தால் கவி, கவியாகப் பொழியும் கவியாற்றல் படைத்த நல்லதோர் கவிஞன், சமூக சீர்திருத்த வலுவான கருத்துக்களை பௌவியமாக தொலைக்காட்சிகளிலும், வானொலி நாடகங்களிலும் உலகமெல்லாம் பரவச்செய்து கொண்டிருக்கும் பெருமை உங்களுக்குரியது. நாடு கடந்து ஆற்றிவரும் கலைப்பணியை நாமறிவோம்.

பிறரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொதுச்சேவையிலும் நீங்களாக முன் வந்து உழைக்கும் உழைப்புக்களும் எல்லோர் மனதையும் கவர்ந்த ஓர் வழிகாட்டியாகவே அமைகிறது. யார் கேட்டாலும், எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் செய்வது உங்கள் இயல்பில் ஒன்று. சோகங்கள் சோதனைகளைச் சோர்வடையாமல் சந்தித்து அந்த இடைவெளியில் மற்றவர்களின் மகிழ்ச்சிக்கு மதிப்பளிக்கும் நிகரற்ற கலைஞன் நீங்கள்.

இத்தனைக்கு மேலாக, உங்கள் சொந்த முயற்சியால் நாடகக் கலையின் வளர்ச்சிக்காக தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக, ஆண்டுதோறும் பல நாடகங்களை, ஒரே மேடையில் நீங்களாகவே தயாரித்து, நாடகப் பெருவிழா என்னும் பெயரிலே நடாத்தி, சாதனை படைத்துவரும் உங்களுக்கும், உங்களுக்கு உந்து சக்தியாக இயங்கிவரும் ரூபி யோகதாசனுக்கும் ஒரு சபாஸ் போட்டுத்தான் ஆகவேண்டும்.

உங்கள் நடிப்பாற்றலின் நெளிவு சுளிவுகளைக் அணுவணுவாக ரசித்ததன் காரணத்தால், என்னுடைய நாடகங்களிலும் நடிக்க வைக்க வேண்டும் என்ற ஆவர்வத்தில், உங்களை அணுகிய போதெல்லாம், பணிவுடன் ஏற்று, நேரப்பழுவின் மத்தியிலும் ஒத்திகைகளுக்கு தவறாது ஒத்துழைத்து நாடகங்களின் தரத்தை உயர்தியது மட்டுமல்லாமல் மகாஜனாவின் விழாவையும் பொலிவுறச் செய்தமை எம் நெஞ்சத்தை விட்டு அகலாத அற்புதமான நிகழ்வுகள்.

கலைத்துறையில் உம் கையால் வளர்ந்த கலைஞர்கள் மிகப்பலர். நாளாந்தம் பேச்சு, மேடைகளில், பட்டிமன்றங்களில், வானொலியில், கவியரங்க திரையில் உங்கள் ஆற்றல்களை ரசித்த ரசிகர் கூட்டம் ஏராளம் ஏராளாம். என்னைப் பொறுத்த மட்டில் நீர் ஓர் கலைஞன். சிகரம் தான் இதைவிட பொதுவாழ்விலும் ''மனிதம்'' என்ற சொல்லின் அர்த்தம் புரிந்து வாழ்ந்து வருகிறீர்கள். ஓர் மனிதன் வாழும் பொழுதே வாழ்த்த வேண்டும். வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்களில் இதுவரை சாதித்தே ஓரளவுக்குப் போதுமானது. இறைவன் விதித்த நாட்கள் வளர இப்பணி தொடர இறையருள் புரிய வேண்டும். என்று பழக ஆரம்பித்தமோ, அன்றிலிருந்து இன்று வரை என் குடும்ப நண்பனாக இணைந்திருப்பதால் இணையற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துகிறோம்
**திரு. திருமதி. சாந்திநாதன்**

# கலை வாழ வாழும் கலைஞன்!



நல்லவனாய் நாட்டினிலே
நல்லதனை செய்து வந்தாய்
நாடறிந்த கலைஞனாய்
நம்மத்தியில் உலாவி வந்தாய்
சிறுவயது முதலாய் சித்திரம் தீட்டுவதிலும்
சிறைசென்று நண்பனுக்கு உதவவும் செய்தாய்
கற்ற அறிவினால் கவிதைகள் புனையவும்
கலகலவென்று மற்றவரை சிரிக்க வைத்தும்
இத்தனைக்கும் மேலாய் இலங்கையில்
ஈழநாடு இதழின் செய்தி ஆசிரியனாய்
சொல்லியே போகலாம் உன் புகழ்
சொந்த நாடுவிட்டு வந்தாலும்
ஏதிலிகளாய் இங்கு வந்து
ஏற்றமுடன் பல பணிகள்
கலைக்காகச் செய்தாயே
வானொலியில் வந்து விட்டால்
வாலிபரும் வயோதிபரும் வரிவரியாய் கேட்டிடுவார்
இதுதான்டா இம்சை என்றால்
இருக்கைவிட்டு யாரும் எழுந்திருக்கமாட்டார்கள்
கதிரொளியைக் களத்தினிலே கொண்டுவந்து
கதைகளும் கருத்துக்களும் சொல்லிடுவாய்
நாடகப் பெருவிழாவை நயமுடனே மேடையேற்றி
நம்மவரை அழைத்து நலம் விசாரித்திடுவாய்
தடம் பதித்து செல்லுகின்ற பாதையினில்
தடைகள் பல அகற்றி நீயும்
திரை விலக்கி திரைப்படமும் நீ எடுத்தாய்
கலைவேந்தன் என்றால்
கணபதி ரவி தானென்று சொல்ல வைத்தாய்
காலம் ஓடுகின்ற போதினிலே
கரைகிறது வயதும் தான்
அகவை அறுபது கண்டிடவே
அகத்தினில் வைத்து நாமும் வாழ்த்துகின்றோம்

வாழ்க பல்லாண்டு! வாழ்க நூறு!

அன்புடன்
**எஸ். ஜெ. சோதி**
**ஜே ஜே பிரண்டர்ஸ்**

## வாழ்க பல்லாண்டு! வாழ்க வளமுடன்!

என் அன்பான சகோதரனுக்கு இன்று ஒரு இனிய நாள் . தன் நகைச்சுவை நடிப்பால் எல்லோரையும் சிரிக்க வைக்கும் ஒரு ஒப்பற்ற கலைஞனுக்கு இன்று மணிவிழா. தனக்கு அறிமுகமான அனைவரையும் பாராட்டி மதிக்கும் ஒரு நல்ல மனிதனுக்கு இன்று மற்றுமொரு பெருவிழா கணபதிப்பிள்ளை திருரவீந்திரன் என்ற ஒருவரை கணபதி ரவீந்திரனாக அறிமுகப்படுத்தி இன்று வெற்றி கண்டு மகிழும்போது மனதில் ஒரு உற்சாகம், சொல்ல முடியா ஆனந்தம். எங்கள் வானொலி நிலையத்தில் இணைந்ததால் தான் இவரால் கனடாவில் புகழ் பெற முடிந்தது என்பதை விட, ரவியின் இனிய பண்பும், ஒப்பற்ற திறமையும் புகழ் பெற வைத்திருக்கிறது என்பதே உண்மை. ஆனால் இவரின் வெற்றிப்பாதையில் நானும் ஒரு அங்கமாக இருக்கிறேன் என்பதில் எனக்கு நிறைவு.
ரவியிடம் நான் கண்ட மற்றுமொரு சிறப்பு, அடுத்த எங்கள் தமிழ்ச் சந்ததியும் தமிழ் பேச வேண்டும் என அயர்ராது உழைப்பது, வானொலி நிகழ்ச்சிகளின் வழியாக குழந்தைகளை ஊக்கப்படுத்தி முன்னேற்றுவது அனைவரும் அறிந்த விடயமாகும். ஒரு மிகச்சிறந்த கலைஞனாக, நல்ல பண்பு கொண்ட மனிதனாக , நட்புக்கு உதாரணமாக விளங்கும் எங்கள் கணபதி ரவீந்திரன்

வாழ்க பல்லாண்டு! வாழ்க வளமுடன்!
எல்லாம் வல்ல கடவுள் துணையுடன்

என்றும் அன்புடன்
**நடா சு ராஜ்குமார்**
**குடும்பத்தினருடன் மனம் நிறைந்து வாழ்த்தி மகிழ்கிறேன்**
**அதிபர்**
**உலகத் தமிழ் வானொலி -கீதவாணி**

********

## நல்ல கலைஞன்!

தம்பி கணபதி இரவீந்திரன் எமக்கு நன் அறிமுகமான கலைஞன். நாட்டுப்பற்று மிக்க கலைஞன், இவனின் நாடகங்களைப் பார்க்கும் போது இவன் மண்ணின் மீதும், மொழியின் மீதும், அதன் வழிவந்த பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களிலும் கொண்ட அபரீதமான பற்றுதலைக் காணலாம். நகைச்சுவை நாடகங்களாக மேற்பார்வைக்கு தோற்றமளித்தாலும் ஒரு செய்தியை அங்கே சொல்லி வைக்கும் பாங்கு மெச்சத்தக்கது. இப்படியான கலைஞன் நீடுழி வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல கலைவாணியை வேண்டி, எங்கள் அன்புக்குரிய கலைவேந்தனை வாழ்த்தி அமைகின்றேன்.

சுபம்

என்றும் பேரன்புடன்
**தம்பையா ஸ்ரீபதி**

# இறை துணை



"மணிவிழா காணும் கணபதி இரவீந்திரனை மட்டற்ற மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறோம். மாச்சா [illegible]வேந்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கை நாடு கடந்த தமீழ அரசின் கனடாப்பேராளர்.

"ஆயிரம் மேடைகள் கண்ட அறிஞர் என்று அன்று சொல்லின் செல்வன் சேதுப்பிள்ளை அவர்கள் அறிஞர் அண்ணாவை வாழ்த்தியதை நினைவு கொள்ளும் போது ஆயிரம் நாடகமேடை ஏற்றிய கணபதி ரவீந்திரன் நினைவிற்கு வருகின்றார்கள். தமிழைக் குறிப்பிடும் போது முத்தமிழ் என்று நாம் குறிக்கத் தவறுவதில்லை. முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம் என்பதே ஆகும். இயற்தமிழும் இசைத்தமிழும் தமிழுக்கு வளம் ஊட்டுவதை நாம் மறக்கவில்லை எனினும் நாடகத்தமிழ் ஏனைய துறைகளை மிஞ்சும் அளவிற்கு பொது மக்களை நாடிச் செல்வதை நாம் ஏற்றே ஆகவேண்டும். தமிழில் எழுந்த இலக்கியங்கள் பல எனினும் சிலப்பதிகாரம் நெஞ்சை அன்றும் சிலப்பதிகாரம் என்ற மணியாரம் படைத்த தமிழ்நாடு என்று தனிப்புகழ் பெறுவதற்கு சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியமாக விளங்குவதே தலையாய காரணம். சிலப்பதிகாரத்தில் நாடகப்பண்பு தனிஇடம் பெற்று தமிழ் உள்ளங்களை ஈர்த்தபடி இருக்கிறது.

ஆங்கில இலக்கியத்தில் சேக்ஸ்பியரின் நாடகங்கள் தனிஇடம் பெறுகின்றன. சேக்ஸ்பியரின் நாடகங்களை ஆய்வு செய்துள்ள இலக்கியத் திறன் ஆய்வாளர்கள் படித்தோரையும் பாமர மக்களையும் ஒருங்கே ஈர்ந்துள்ளன. சேக்ஸ்பியரின் நாடகங்கள் என்று குறிப்பிடப்படுவது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. நமது கணபதி ரவீந்திரன் அவர்களின் வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், மேடை நாடகங்கள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு தனிவிருந்து, நகைச்சுவையை நல்குகின்றது. ஆனால் வெறுமனவே நகைச்சுவையை மட்டும் நல்காது நல்ல பல கருத்துக்களை சிந்தனைகளைத் தூண்டும் கருத்துக்களை, காலத்தின் தேவையை நிறைவு செய்யும் கருத்துக்களை, ஆனால் காலத்தால் சாகாது ஞாலத்தில் நிலைத்து நிற்கும் கருத்துக்களை அள்ளி வழங்கும் போது கண்ணிமை கொட்டாது எம் செவிகளை கூர்மைப்படுத்தி மெய் மறந்த நிலையில் கணபதி இரவீந்திரன் அவர்களின் நாடகங்களைப் பார்க்கின்றோம். குறிப்பாக ஈழத்தமிழரின் அன்றைய அவல நிலையை அவரும், அவருடன் ரூபியும் நாடகங்களில் கலந்து கொண்டு காட்டும் பாங்கு எம் அறிவிற்கும் விருந்து, எம் தமிழ் உணர்வுக்கும் விருந்தாக விளங்குகின்றது.

இப்பெருமகனின் 60வது பிறந்தநாள் 22-04-2013 அன்று ஆகும். கனடா வாழ் மூன்று லட்சம் தமிழ் மக்கள் மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகம் அவரை வாழ்த்தும் கடமைப்பாடு உடையது.

அறிஞர் அண்ணா நல்ல பேச்சாளர், நல்ல எழுத்தாளர், நல்ல எழுத்தாளர், சிந்தனையாளர் என்பது மட்டுமல்ல, நல்ல நாடக ஆசிரியர் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மறைந்த ஜனர்தனன் அவர்கள் தனது முனைவர் பட்டதுக்கு வரைந்த ஆய்வு அறிஞர் அண்ணாவின் நாடகங்கள் என்பதை நாம் நினைவில் கொண்டின் அறிஞர் அண்ணரின் நாடகப்பணி தமிழ் சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கத்தையும் நாம் கண்டு உணர முடியும்.

அறிஞர் அண்ணாவின் "சிவாஜி சாம்பிராட்சியம்" என்ற நாடகம் தனிச்சிறப்பு வாய்ந்தது. இந்த நாடகமே சிவாஜி கணேசனுக்கு சிவாஜி பட்டத்தை வழங்கியதையும் நாம் பெருமையுடன் நினைவு கொள்ள முடியும்.

அறிஞர் அண்ணாவின் "ஓர் இரவு" "வேலைக்காரி" போன்ற நாடகங்கள் தமிழ் சமுதாயததை விழிப்படையச் செய்ததை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அறிஞர் அண்ணாவின் "ஓர் இரவு" நாடகத்தைப் பார்த்த கல்வி அவர்கள் "இதோ ஒரு வேஹ்ட்ச் சோ" என்று புகழ்மாலை சூடியதை நாம் மறக்க முடியாது.

இது போன்றே கணபதி ரவி "சிதம்பரசக்கரம்" என்ற நாடகம் 125 மேடைகளில் ஏறி அழியாப் புகழ் பெற்றதை நாடக ஆய்வாளர்கள் நடுநிலையோடு நவில்வர்.

கணபதி ரவீந்திரன் ஊர்ச்சங்கங்கள் நடாத்திய நிகழ்வுகள், பரதநாடிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் தொகுப்பாளராக விளங்கி பாராட்டாதவர் இல்லை. ஊர்ச்சங்கங்கள் பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள் ஆகியவற்றிலும் அவர் ஆற்றிய பங்களிப்பு நிகழ்வோடு ஒட்டிய நிகழ்சிகளாகும்.

கணபதி ரவீந்திரன் அவர்கள் நாடகத்துறையில் மட்டும் பெயர்பெற்று விளங்கவில்லை. அவர் நல்லுள்ளம் படைத்த நண்பன். பாசத்தோடு அனைவருடனும் பழகுவார். அவர் உரையாடலில் நகைச்சுவையும் கிண்டலும் இணைந்து உவகை தரும்.

இவை அனைத்துக்கும் மேலாக குழந்தைகளைக் கண்டால் குட்டி உலகமென மதிக்கும் நம் கணபதி ரவீந்திரன் அவர்கள், குஞ்சுக் குழந்தைகளோடு குலாவி மகிழ்ந்து அவர்களுக்கு அறிவூட்டுவதில் தனி ஈடுபாடு உள்ளவர். திருக்குறளின் அருமையை உணர்ந்து இவர் எம் தமிழ்க் குழந்தைகள் தமிழினையும், திருக்குறளையும் மறவாது இருக்கும் முறையில் வானோலி வாயிலாகவும், ஏனைய துறைகள் ஊடாகவும் வகுப்புகள் நடத்தி பயிற்சிகள் வழங்கி வருவது அவரது தலையாய பணியாகும். இளை தலைமுறையினர் தமிழோடு இணைந்து வாழ அவர் ஆற்றிவரும் பணி வரலாற்றில் இடம்பெறும் தலையாய பணியாகும்.

சுருங்கச் சொல்லி விளங்கவைப்பின் திரு. கணபதி ரவீந்திரன் அவர்கள் தமிழ் இலக்கிய உலகின் தமிழ் நாடகத்துறையில் தனிமுத்திரை பதித்தவராவர்.

என்றும் புன்னகையுடன் காட்சியளிக்கும் அவர் தனது அறுபதாம் ஆண்டை அடைந்துள்ளார்.

தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் வாழ்வு கொடுக்கும் இப்பெருமகன் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு வாழ்கவென பைந்தமிழில் வாழ்த்தி நிறைவு செய்ய விரும்புகிறேன்.

**மா.க. ஈழவேந்தன்**

## பாதையில் ஓர் பதம்



வாழ்த்துரைக்க வந்துள்ளேன் வார்த்தைகளில், பூமாலையாய் சாத்திட, ரவி அண்ணா என்றவுடன் றவுக்கை கூட மலர்ந்திடும். ரவி அண்ணா பழகிய நாட்கள் பத்துக்கும் மேலானாலும் உங்கள் நற்குணங்களைச் சொல்ல பத்தாயிரம் ஆண்டுகள் வேண்டாமோ... எங்களுடன் நீங்கள் பழகும் அளவில்லா அன்பும், பண்பும், நேசமும் யாராலும் மறக்கமுடியாது, மறுக்கவும் முடியாது.

ரவி அண்ணா நடிப்பிலும், கவியிலும், பேச்சிலும், பண்பிலும் மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டி என்பதில் எந்தவித அச்சமும் அல்ல. என் உடன்பிறவாச் சகோதரனானாலும் நீங்கள் எப்போதும் எனது ஒரு சகோதரன் போல், என் கலைத்திறனை மட்டுமன்றி எத்தனையோ கலைப்பிரியர்களின் கலைகள் இலைமறை காயாய் இருந்தவற்றை இனம்கண்டு வெளியுலகிற்கு கொண்டு வந்துள்ளீர்கள் என்பதில் சமூகமாகிய நாங்கள் மிக பெருமைப்பட வேண்டும். அதேபோல் உங்களையும் பெருமைப்படுத்த கடமைப்பட்டுள்ளேன்.

எனக்குரைக்க இன்னும் எத்தனை எத்தனை, அத்தனைக்கும் வார்த்தைகள் வருகுது இல்லை. வாடிய பூவில் இருந்து, வரம்பிட்ட செடியாக வளர்ந்த மரங்கள் வடுவான செய்தி கேட்டு வாடியதேன்? என்னதான் இருந்தும் வாழும்போதே வாழ்த்த வேண்டும் என்பதற்கு அமைய வயது ஒன்று இன்று கூடி அறுபது ஆனாலும் இது உங்களுக்கு ஒரு புதியதொரு நல்லாண்டு. இவ்வாண்டிலும் “திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்று எத்தனை தடங்கல்கள் வந்தாலும், எங்கு சென்றாலும் உங்கள் கலைப்பணி வயல் போல் விளைந்து, வந்தோர் வருவோர் அனைவருக்கும் பசியாற உங்கள் கலைத்திறனை ஊற்றவும், நீங்களும் இன்னும் உண்டு, பருகி பல புதிய படைப்புக்களைப் படைக்க வேண்டுமென்று நெஞ்சார வாழ்த்துகிறேன். உங்களில் நேசமானவளும், நேர்மையில் துடிப்பானவளுமான சகோதரி

**சிவப்பிரியா**

# மேடைகளில் நகைச்சுவைக் கலைஞன் அவைகளில் நல்ல ரசிகன்

**கனக மனோகரன்**

என்னை நன்றாக இறைவன் படைத்தான்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே
திருமூலரின் ஒரு "திரு" வாசகம் இது.

தன்னை பலர் நயக்க வைக்கத்தான் தன்னை இறைவன் பிறக்க வைத்தான் என்று அன்புத்தம்பி கணபதி ரவீந்திரன் அறிந்து வைத்திருக்கிறான் என நினைக்கின்றேன்.

இன்றைய எதார்த்த உலகம் ஓர் இயந்திர உலகம். இந்த உலகின் உள்ளுறுப்பான பலர் வாழ்வில் சுகம், சுந்தரம், சுதந்திரம், சுகந்தம் இவற்றிற்கு பற்றாக்குறை. சோர்வுகள், சோகங்கள், ரோகங்களே அனந்தம்.

முசிப்பு எனில் சோர்வு. தன் அதிரும் குரலாலும், அட்டகாசமான சிரிப்பாலும், ஆர்ப்பாட்டமான நடிப்பாலும் இம் மண்ணில் முசிப்பாற்றும் பணியை (முசுப்பாத்தியை) கனகச்சிதமாகச் செய்யும் முன்னணிக் கலைஞன் கணபதி ரவீந்திரன்.

கனடியத் தமிழர்களைச் சிரிக்க வைப்பது என்பது ஒரு கடினமான கைங்காரியம். ஏனெனில் நாம் முசுடுகள். ஒரு சமயம் கனடா வந்த திண்டுக்கல் லியோனி தனது தரமான பகிடிகளும் கனடாவில் எடுபடவில்லை என்று ஆதங்கப்பட்டாராம். சென்னை Golden Beach இல் உள்ள சிரிக்க வைக்க முடியாத மனிதனுக்கு இந்த மண்ணின் சொந்த பந்தங்கள் அதிகம். நாகரீக வளர்ச்சி பெற்றுள்ள எம்மளவில் (நோய்விட்டுப் போகும் வழியான) வாய்விட்டுச் சிரிப்பது அநாகரிகம். வெள்ளைக் கொக்காகிவிட்ட அரிசிக்காக்கைகள் நாம். (விசயம் தெரியாத, விபரம் புரியாத வெள்ளையர் சிரிப்பது வேறு விடயம்) குரங்கிலிருந்து பிறந்த சிரிக்கத் தெரிந்த விலங்கு இன்று இழிக்கும் வேலையை மட்டும் இடையிடையே செய்து கொண்டிருக்கின்றது.

ரசனை இலாதது கல் மனது - இசையை
ரசிக்கின்ற மனதே நல் மனது.

என்றான் கவியரசு கண்ணதாசன். நல்ல மனது இசையையும் ரசிக்கும், நகைச்சுவையையும் ரசிக்கும். தம்பி ரவி ஒரு திறமான கலைஞன், தரமான நடிகன், நகைச்சுவை மன்னன், அது மட்டுமல்ல. ஒரு அவையில் நல்ல ரசிகனாகவும் செயற்பட்டு நிகழ்வுகளுக்கு வலு சேர்ப்பது அவனது சிறப்பம்சம்.

ஒரு வகையில் கணபதி ரவீந்திரன் எனக்கு ஒரு வழிகாட்டி. பல விழாக்களிலும் நான் அவதானித்த ஒரு அம்சம். நல்ல கட்டங்களில் சபையில் இருக்கும் "ரவி" பாராட்டுக் குரல் கொடுப்பான், பலமாகக் கை தட்டுவான், உரமாகச் சிரிப்பான். "அதுவும் அற்றவர் வாய்ச் சொல்அருளீர்" என்றான் பாமன்னன். "ஆகா", "அற்புதம்", "அபாரம்", "சபாஸ்" என ஆதரவுக்குரல் கொடுக்கும் தொண்டைச் செய்கையில் தொண்டையா கட்டிவிடும்?

இனிமேல் என்னை அவதானமாகப் பாருங்கள். நான் அவைகளில் கணபதி ரவீந்திரன் பின்பற்றி கையொலியையும் வாயொலியையும் எழும்புகிறேன். அதன் பின்னர் சபையினருக்கு இந்த இடத்தில் கை தட்ட வேண்டும், இந்த இடத்தில் வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் என்று புரிகிறது. என்னுடன் இணைந்து கொள்கிறார்கள்.

இனிமேலாவது கணபதி மகனின் பாணியில் நீங்களும் கைகளைக் கொட்டுங்கள், மேசைகளில் தட்டுங்கள். கலை நிகழ்ச்சிகள் களை கட்டும். வண்ணக் கலைகளும் வளரும், அன்னை தமிழும் வாழும்.

எங்கள் அகங்களை தொடுகின்ற அற்புதக் கலைஞன் இன்று அறுபதை தொட்டிருக்கிறான். இக் கலைவேந்தனின் தனி வாழ்வும், கலை வாழ்வும் ஒரு சேர சிறக்க – தழைக்க – நிலைக்க இறையருளை இறைஞ்சுகின்றேன்.

********

## கலைவேந்தன் கணபதி இரவீந்திரன் மணிவிழா வாழ்த்துக்கள்

கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்கள் கனடாவில் தலைசிறந்த கலைஞர்களில் ஒருவராக கலைப்பணிகள் பல ஆற்றி வருகின்றார். அவருடைய கலைப்பணிகளில் சமூக உணர்வு ஆழமாக பதிந்து இருப்பதனால், சமூக நலன்கருதி பல படைப்புக்களை தந்திருக்கின்றார். அவருடைய தமிழ் உணர்வு இன்னொரு வகையிலே அவரை அறியாமல் அவருடைய எழுத்து, பேச்சு கலைப்படைப்புகளிலே துள்ளியமாக வெளிவருவதை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவருடைய மொழிப்பற்று, இனப்பற்று, சமூக சிந்தனை ஆகியவற்றிலும் அவர் வாழும் கனேடிய தேசத்தின் நன்றி உணர்வும் ஒரு கலைஞன் எனும் பொற்காசின் இரு பக்கங்களாக அமைகிறது.

கணபதி இரவீந்திரன் அவர்கள் எங்கள் தொலைக்காட்சியில் வாரந்தோறும் தயாரித்து வழங்கிவரும் சமூக நாடகங்கள் பல நேயர்களின் பாராட்டைப் பெற்றிருப்பதையிட்டு எமக்கு மகிழ்வாக இருக்கிறது. கனடாவில் அதன் சட்ட திட்டங்களுக்கு அமைய எம் கலைப்பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாத்து அதனை அடுத்த சந்ததிக்கும் வழங்கும் வகையில் அவர் பல கலைப்பணிகள் ஆற்ற வேண்டுமென்று தமிழ் வண் தொலைக்காட்சி, வணக்கம் தொலைக்காட்சி, வணக்கம் வானொலி சார்பில் வாழ்த்துகிறேன்.

**சுமனஸ்ரீ**
**தமிழ் வண் தொலைக்காட்சி,**
**வணக்கம் வானொலி அதிபர்**

# கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் மணிவிழா வாழ்த்துக்கள்



கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களின் கலைப்பணியினால் ஈர்க்கப்பட்ட நூற்றுக்கணக்கான கலைஞர்களிலும், பல்லாயிரக்கணக்கான நேயர்களிலும் நானும் ஒருவர் என்பதில் பெருமைப்படுகிறேன். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பல்லாயிரக்கணக்கான நேயர்களில் ஒருவராக நானும் பல நிகழ்ச்சிகளை நேயராகக் கேட்டு மகிழ்ந்தேன். அவ்வாறு நிகழ்ச்சியை நாட்டு நடப்புக்களை, சமுதாய ஏற்ற இறக்கங்களை நகைச்சுவை கலந்த நரம்புகளை இறுகக் கவ்வும், அர்த்தமுள்ள அறிவுரைகளோடு இடம்பெற்ற நிகழ்வுகளைக் கேட்டு என் உள்ளம் பூரிப்படைந்தது. அவ்வாறான கலைஞனை கண்டு பாராட்ட வேண்டுமென்று என்னுள்ளம் துடித்தது.

இவ்வாறான வேளை ஆவணி மாதம் 7ம் திகதி டவுண்ரவுனில் அருள்பாலித்துக் கொண்டிருந்த ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிகழ்வின் போது ஒரு மூலையிலிருந்து கணீரென்ற குரலில் அந்த நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்து கொண்டிருப்பதை நான் காணக்கூடியதாக இருந்தது. அந்தக் குரலின் சொந்தக்காரன் வேறு யாருமில்லை. மதிப்புக்குரிய கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் என அறிந்து மிகவும் மகிழ்தேன். நிகழ்வு நிறைவான பின்னர் அவரை நேரடியாக வாழ்த்துகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவ்வேளை அவர் எனது கலையார்வத்தைக் கண்டு உணர்ந்து உங்கள் கலைத்துறை எங்கள் சமுதாயத்திற்கு தேவைப்படுகிறது, வாருங்கள் இணைந்து கலைப்பணி ஆற்றுவோம் என்று திறந்த மனதுடன் என்னை அழைத்துக் கொண்டார்.

அன்றிலிருந்து அவருடைய கலைப்பணிகளின் பயணத்திலே பங்குபற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கலைவேந்தன் அவர்கள் பழகுவதற்கு இனியவர் என்றாலும் கலைக்கோவிலுக்குள் காலடி வைத்தவுடன் அவர் கடும்போக்கை கடைப்பிடித்து தரமான கலைப்படைப்புக்களை அர்த்தமுள்ளதாக வழங்கப்பட வேண்டுமென்பதை உன்னிப்பாக செயல்படுபவர். நான் எனது இளமைப் பராயத்திலிருந்து கலைத்திறனால் பாடசாலையிலும், இலங்கையின் தேசிய ரீதியிலும் பாராட்டுக்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றிருந்தேன். அதனை கனடாவில் தொடர்ந்து வளர்த்துவர எனக்கு ஒரு வாய்ப்பு அளித்து ஊக்குவித்த கணபதி ரவீந்திரன் அவர்கள் என்னைப் போல கலையார்வம் கொண்ட பலரை வழிப்படுத்தி, நெறிப்படுத்தி தமிழ் அன்னைக்கு

கலைப்படைப்புக்களை அர்ப்பணம் செய்திருக்கிறார். அவர் பல தடவைகள் தனது கலையுயர்வுக்கு எனது பங்களிப்பு பின்புலத்திலே மிகமுக்கியமானதாக இருக்கிறது என்று பல தடவைகள் பகீரங்கமாக குறிப்பிட்டிருப்பது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் அவர் என் கலைவாழ்வில் காட்டிய பணிகள் உயர்வானதாகவே கருதிக்கொள்கிறேன்.

ஒரு கலைஞன் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும், அவனுக்கு அங்கீகரிக்கப்படும் கௌரவங்கள் அவனோடு பின்னிப் பிணைந்து இருக்கும் கலைமகனுக்கு அளிக்கப்படும் கௌரவமாகும். கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் நாடகம், கவிதை, எழுத்து, பேச்சு எனப் பலவேறு துறைகளில் தொடர்ந்தும் பணியாற்றி பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் நோய்நொடி இல்லாமல் பல்லாண்டு காலம் பார்போற்றும் உத்தமனாக வாழவேண்டுமென மனமார உளமார வாழ்த்தி அவருடைய அன்பும் ஆசியும் எனக்கு என்றென்றும் இருக்க ஆண்டவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்
**ரூபி யோகதாசன்**
★★★★★★★★

## அகவை அறுபதை அடைந்திடும் கணபதி ரவீந்திரனை வாழ்த்துகிறோம்.

அகவை அறுபதை கலைக்குடும்பத்தினருடனும் உறவுகள், நட்புகளுடனும் ஆனந்தமாகக் கொண்டாடும் பல்கலைவேந்தன் கணபதிரவீந்திரன் பாரினிலே பகலவன்போல் பல்லாண்டு,பல்லாண்டு, பல்லாண்டு வாழ்கவென இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

நாடறிந்த நாடகக் கலைஞன், சின்னத்திரை, வெள்ளித்திரை நட்சத்திரம், வானொலி அறிவிப்பாளர், நல்லதோர் எழுத்தாளர், பட்டிமன்றப் பேச்சாளர், நகைச்சுவை விற்பன்னர், அழுகுதமிழ் கவிஞர், தமிழை தமிழாக கணீரென்ற குரலில் பேசும் வெண்கலக்குரலோனை பல்கலை வேந்தன், நாடமாடும் கலைக்கூடம் என எல்லோரும் போற்றிப்புகழந்து பாராட்டுவதில் வியப்பேதுமில்லை.

கலையும் உயிரும் ஒன்றாகிக் கலந்து நிற்கும் இன்முகவேந்தன் மணிவிழாக் காணும் கணபதி இரவீந்திரனை இந்நன்நாளில் நாமும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**அன்புடன்**
**எம்.பி.கோணேஷ் , பத்மினி கோணேஷ்**

## தமிழன் வழிகாட்டி செந்தியின் வாழ்த்துச்செய்தி

புலம் பெயர்ந்த கனடிய மண்ணில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, மேடை நாடகம் என மக்களை தன் வயப்படுத்தும் அனைத்து ஊடகங்களிலும் தனக்கென தனியிடம் வகித்தவர் கணபதி ரவீந்திரன் என்று சொன்னால் மாற்று கருத்து யாருக்கும் இருக்காது என்று நம்புகிறேன்.

மக்கள் திலகம் எம்.ஜ.ஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், உலகநாயகன் கமலகாசன், சுப்பர் ஸ்ரார் ரஜனி போன்றவர்களோடு நடிப்பில் சச்கை போட்ட மனோரமா ஆச்சியே நம்ம கணபதி ரவீந்திரனை பாராட்டியுள்ளார். இதைவிட பெருமை வேறு என்ன வேண்டும்.

தமிழன் வழிகாட்டியின் ஆதரவில் நடைபெற்ற வர்த்தகச்சோலையின் மேடை நிகழ்ச்சிகளினை அலங்கரித்து எமக்கு பெருமை சேர்த்தவர்.

வாமும் போதே ஓர் கலைஞனை கௌரவித்த விழா குழுவிற்கு தலை வணங்குகின்றேன்.

வாழ்க! வளர்க!

அன்புடன்
என்றும் உங்கள்
**செந்தி**



## மதிக்கத் தெரிந்த மனிதன்



கணபதி ரவீந்தரன் என்ற கலைஞன் கனம் பொருந்தியவர் மட்டுமல்ல, மற்றவரை கனப்படுத்தவும் தெரிந்தவர். பெருமை என்பது இம்மியளவும் இல்லாதவர். ஓர் இரு மேடை ஏறினாலே சிலருக்கு பெருமிதம் ஏற்படும். ஆனால் இந்தக் கலைஞனோ ஆயிரம் மேடை ஏறியும் தாழ்மையைத் தன்வசம் வைத்துள்ளவர்.

என்னை எப்பொழுது கண்டாலும் எப்படிச் சேர் இருக்கிறீர்கள் என்று சுகம் விசாரிப்பார். வானொலி, தொலைக்காட்சிகளில் தான் பங்குபற்றிய நிகழ்ச்சிகளைப் பார்த்தீர்களா? எப்படிச் சேர் இருந்தது என்றும், அதனை இன்னும் விரிவு படுத்தலமா என்றெல்லாம் ஆலோசனைகள் கேட்பார். அதனால் தான் அந்த கலைஞன் எங்கள் மத்தியில் அனைவராலும் மதிக்கப்படுகின்றார். அவருக்கு இசையில், இயல் நாடகத்தில் உள்ள அறிவை விட குறைவாக இருந்தாலும், இசையை ரசிக்கக் கூடியவர். இராகம், தாளம், பல்லவி போன்றவற்றை அமர்ந்திருந்து கேட்பவர்.

அவரின் கலை வளர்ச்சியும், தமிழ்ப்பற்றும் வளர்ந்து வருவது போல் இவர் வயதும் வளர்ந்து இன்று அகவை அறுபதை அடைந்திருக்கும் இந்நாளில் நானும் இளங்கலைஞர் மன்றமும் இவரை பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி நிற்கிறோம்.

**சங்கீதபூஷணம்**
**பொன் சுந்தரலிங்கம்**

********

## கலைஞர்கள்

கலைஞர்கள் தாங்கள் வாழும் போது தமது இனம், மொழி, கலை போன்றவற்றையும் வாழ வைத்துக் கொண்டிருப்பார்கள். இதனால் தான் எம் மொழியும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. எமது மொழியை இன்று வேற்று இனத்தவர்களும் ருசி பார்க்கின்றார்கள். சீனாவில் சீனப்பெண் தமிழ் எழுதுகின்றார். கனடாவில் எம் அரசியல் வாதிகள் தமிழில் கதைப்பதற்கு ஆசைப்படுகிறார்கள். இவையெல்லாம் கணபதி ரவீந்திரன் போன்றோர் மொழி மீது கொண்ட அன்பினால் தான்.

கணபதி ரவீந்திரன் கலாபம் தொலைக்காட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து எனக்கு நன்கு தெரியும். கலாபம் தொலைக்காட்சியிலும் அவருடைய நாடகங்கள் ஒளிபரப்பப்பட்டது. அந்தக் கலைஞனுக்கு வயது ஆகிறது என்ற பொழுது என்னால் நம்பவே முடியவில்லை. காரணம் அவரது இளமைத் தோற்றமும் அவரின் உற்சாகமான செயல்களுமே. அவருடைய கலைத்திறனும் அவரும் பல்லாண்டு வாழ வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**கலாபம் தொலைக்காட்சி அதிபர்**
**சு. ஸ்ரீனிவாசன்**

## நல்ல நண்பன்



நல்ல நண்பன் கணபதி ரவீந்திரன்
நம்மிடை வாழ் நாடகக் கலைஞன்
நாடகப் பெருவிழாவை ஆண்டுதோறும்
நல்லபடி நடத்தியே முடிப்பவர்

பெருவிழா எடுத்து பெரிதுவக்கச் செய்திடுவார்
பெரியவரை பெரியார்களை கௌரவப்படுத்திடுவார்
பெருமையென்றால் என்ன என்பார்
பெயருக்காய் எதுவும் செய்திடவும் மாட்டார்

கவியினால் அரங்கை அதிர வைப்பார்
கற்றவரும் மற்றவரும் போற்றியே நிற்பர்
கருமுடி மாறா உந்தன் வயதினை
கணிக்கவும் எம்மால் முடியவுமில்லை

அத்தனையும் பெற்ற அன்புடையோனுக்கு
அறுபது அகவை அடைந்திடும் நாளில்
ஆண்டுகள் பலவும் வாழ்ந்திட வேண்டும்
ஆண்டவனை வேண்டி வாழ்த்தியே நிற்கிறோம்.

என்றும் அன்புடன்
**சாந்தா பஞ்சலிங்கம்**




HAPPY BIRTHDAY
60
நாடகத்தில்
நற்றமிழில்
கவிதை யாப்பில்
நகைச்சுவையில்
ஓவியத்தில்
பொற்புறக்க
மேடைதனில்
முழங்குவதில்
எழுத்தில் ஆற்றல்
மிக்கவனாய்
தொகுத்தளிக்கும்
கலையில்
தேசிய கலை வேந்தன்
ரவீந்திரற்கு
சிறப்புறவே 60 நல்லகவை - இன்று
கூடிய நாள்
பல வழமும் சேர உள்ளம்
குளிர்ந்திடவே வாழ்த்துகின்றோம்
வாழ்க நீடு.
Ravi Atchuthan
Director / Cinematographer
416-566-2904
LUCKY
LUCKY
EXCLUSIVE
Vision to Create Fun & Fashion
DIVISION OF RR DREAM WORKS INC.

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION – CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No: 001100556)

*International Coordinator:*
Mr. P. Kanagasabapathy

*Patrons:*
Mr. M. Karthigesu
Dr. Shun Sunder
Mr. S. Subramaniam
Mr. K. Thuraisingam
Mr. V. Ranjan
Mr. T. Iswarakumar
Mr. N. Jeganathan
Mr. V. Nantheeswarar

*President:*
Mr. K. Jeyandran
president@mahajanan.org
416-705-1493

*Vice President:*
Mr. S. Santhiralingam

*Secretary:*
Mr. Pavan Kandiah
secretary@mahajanan.org
416-458-1775

*Asst. Secretary:*
Mr. K. Balaskandan

*Treasurer:*
Mr. S. Sivagowripalan
treasurer@mahajanan.org
416-451-8427

*Asst. Treasurer:*
Ms. S. Balaramany

*Committee Members:*
Mr. V.T. Mahalingam
Mr. R. Ravindran
Dr. K. Ravindran
Mr. S. Selvaratnum
Mr. M. Sivakumaran
Mr. S. Sivathasan
Mr. K. Sutharsan
Mr. C. Santhirasekari
Mr. S. Radheepan
Mr. T. Vijayaseelan

*Hon. Member*
Mr. N. Santhinathan

# மணிவிழா வாழ்த்துச் செய்தி

மணிவிழாக் கொண்டாடும் திரு. கணபதி இரவீந்திரன் அவர்களை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வாழ்த்தி கௌரவிக்கின்றது.

திரு. கணபதி இரவீந்திரன் அவர்கள் எமது சங்கத்துடன் பல ஆண்டுகளாக நெருக்கமான உறவை பேணி வருபவர். மகாஜனாவின் முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளில் பல நாடகங்களை மேடையேற்றி பலராலும் பாராட்டப் பட்டார்.

திரு. கணபதி இரவீந்திரன் அவர்கள் ரொரன்ரோவில் மட்டுமல்ல மொன்றியலில் நடந்த எமது கல்லூரியின் நூறாவது ஆண்டு முத்தமிழ் விழாவிலும் பங்கு கொண்டு மொன்றியல் வாழ் மக்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.

திரு. கணபதி இரவீந்திரன் அவர்கள் பல ஆண்டுகளாக தான் சேவை செய்யும் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சேவைகளை வெளிக்கொண்டுவந்து கனடா வாழ் மகாஜனன்களின் மனதில் இடம் பிடித்துள்ளார்.

திரு. கணபதி இரவீந்திரனின் கலைச் சேவை எமது சங்கத்துக்கும் மற்றும் கனடிய தமிழ்ச் சமுதாயத்திற்கும் நீண்ட காலம் தொடர மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

திரு.க.ஜெயேந்திரன்
தலைவர்

104-1920 Ellesmere Road, Suite 203, Toronto, ON. , M1H 3G1, Canada
www.mahajanan.org, webmaster@mahajanan.org

**Dr. Paul Healthy Life Clinic**

**Paul Joseph,** B.H.M.S.(India), H.D.(Canada), R.Ac.
*(Bachelor of Homeopathic Medicine and Surgery)*
Former Professor, Qualified from
Tamil Nadu Dr. M.G.R. Medical University, Madras, India.



## கலகலக்கும் கணபதி

கணபதி தம்பதியின் கருவில் உருவாகி
கனேடியத் தமிழரின் கலையில்
கலைத்திலகமாய் நகைச்சுவை நாயகனாய்
கலகலக்கும் கணபதி ரவீந்திரா!

ஆண்டவன் கருணையால் அகவை அறுபது
ஆனாலும் நீ உருவத்தில் நாற்பது
ஆற்றலால் அகத்தின் உணர்வுகளில் முப்பது
ஆறுதலாய் அனைவருக்கும் அன்புக் குழந்தை.

ஊடகத்தில் உன்னதமாய் உன்பணி
ஊக்கமுடன் நேயருக்கு நோயகற்றும்
ஊக்கமருந்துதான் உன் பேச்சு - ஆம்
ஊமையாகிப்போது உள்ளத்தில் கவலைகள்.

நல்லூரின் நல்லம்மாள் கணபதிப்பிள்ளை
நல்லாசிரியர்களைப் பெற்றாராய் பெற்றதால்
நகைச்சுவைநல் நடிகராய் கவிஞராய்
நல்எழுத்தாளன் ஆன்மீகவாதி என்று எத்தனைமுகம்.

பலரை சிரித்து சிந்தித்து மகிழச் செய்யும்
பல பரிமாணங்கள் உனக்குள்ளிருப்பினும்
பலதுயர்கள் தாங்கி உள்வாங்கி
பலரை ஆற்றுப்படுத்தும் உளவியலாளன்.

அன்புடன் ஆரோக்கியமாய் இன்புறவே
ஈழமக்கள் உறவுகள் ஊருலகம் போற்றிட
எதிலும் ஏற்றமுடன் மேலும் ஐம்பதாண்டு
ஒருமனமாய் ஓம்கரன் துணையோடு
ஔடதம் நீங்கி அஃதே வாழ்க வளமுடன்.

**Clinic Address: 1193A Brimley Road, Unit 10, Scarborough, Ontario M1P 3G5**
**Tel: 416 438 3939 Cell: 416 986 4903 Fax: 416 438 3909**
e-mail:drjp63@yahoo.com

உ

**“ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்”**

**கனடா–புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்**

# Canada - Old Students' Association of Pungudutivu

96-80 Nashdene Road, Toronto Ontario, M1V 5E4

**Arun Kulasingam**
**President**
**(416)357-2847**
kulasingam33@yahoo.ca

**S.M.Thanapalan**
Secretary
**(647)290-5856**
smthana@hotmail.com

**Kathirgamanathan – Mahathmanathan**
Treasurer
**(647)465-3720**
**mahathman23@hotmail.com**



அறுபதாவது அகவையை நிறைவு செய்யும் தன்னிகரில்லாக் கலைஞன் “கலைவேந்தன்” கணபதி ரவீந்திரன் அவர்களை கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கமும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றது. கனடிய மண்ணில் தமிழர் கலை, பண்பாட்டை ஆழமாக வேருன்றச்செய்வதில் முன்னணி வகிக்கும் கலைஞர்களில் கணபதி ரவீந்திரன் அவர்கள் சிறப்பாகக் குறிப்பிடப் பட வேண்டியவராவார். மேடை நாடக நடிகராக அறிமுகமான அவர் சினிமா, வானொலி, தொலைக்காட்சி நாடகங்களை எழுதியும் இயக்கியும் தயாரித்தும் பெயர் பெற்றவர். சிறந்த வானொலி அறிவிப்பாளரான இவர் கீதவாணி, C.T.R, வானொலிகளின் அறிவிப்பாளராக இருந்து மக்களின் மனங்களை வென்றவர். தமிழ்வண் தொலைக்காட்சியில் வாராவாரம் இவரின் நாடகம் மக்கள் மத்தியில் மிகவும் பாரிய வரவேற்பை பெற்றுவருகின்றது. நடிகனாக, இயக்குனராக, தயாரிப்பாளனாக, அறிவிப்பாளனாக, சிறந்த மேடைப் பேச்சாளனாக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக வென பண்முகத் திறமை வாய்ந்த கலைஞனான இவர் ஏனைய கலைஞர்களை வளர்ப்பதிலும் அவர்களின் படைப்புக்களை வெளிக் கொண்டுவருவதிலும் போட்டி பொறாமைகளற்று ஆர்வமாக செயற்படுகின்ற நல்ல உள்ளத்தையும் கொண்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. முதியோர்களின் மகிழ்ச்சிக்காகவும் பல கலைப்படைப்புக்களை உருவாக்கி அவர்களின் பெருமதிப்பையும் பெற்றவர். கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் “பூவரசம் பொழுது” மேடைகளிலும் தோன்றி புங்குடுதீவு மக்களின் மனங்களையும் கவர்ந்ததோடு புங்குடுதீவு மக்களின் அன்பிற்குமுரியவர் என்பதை பல புங்குடுதீவு மக்களின் குடும்ப நிகழ்வுகளில் காணுவதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

புலம் பெயர் மக்களிடையே தமிழர் கலையையும் பண்பாட்டையும் வளர்க்கும் இவரின் கலைப்பயணம் தொடரவும் சிறந்த இந்த கலைஞன் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்துவதிலும் கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் பெருமையடைகின்றது.

வாழ்க வளமுடன்!

*அருண் குலசிங்கம்*
தலைவர்.

# எதுவரை நீ.....

அன்பன் கணபதியே
உன்னைத் தெரிந்தநாள் முதலாய்
நீ எதையோ தேடுவதாய்
உணர்கிறேன்
ஓயாத உன் வாயும்
அயராத உன் உழைப்பும்
நிறைவுபெறாத உன் நினைவுகளும்
எதையோ தேடிக்கொண்டிருக்கின்றன
மனிதன் என்பவனே
நிறைவாகாதவற்றால் நிறைந்தவனே
ஆனாலும் நீ சற்று வித்தியாசம் -
நிறைவுசெய்ய நினைப்பதோ தனித்துவமானது
உன் தேடலுக்குள்
உன் வயிற்றைக் காட்டிலும்
சமூகத்தின் குறைபாடுகள் நிறைந்திருக்கும்
நீ உருவாக்கும் சிரிப்புக்குள்
புதைந்திருக்கும் அர்த்தங்கள்
உன்னைப் புரிந்தவர்கு மட்டுமே புரியும்.
போலிப் புன்னகைக்கு உன்
புதையல் புலப்படாது
அறுபதைத் தொட்டிருக்கும்-உன்
எண்ணங்கள் அகிலத்தைத் தொடும்
அதுவரை நீ ஓயாதிரு,

சு. விவேகானந்தன்
புறொமார்

## In every life
## We have some trouble
## But when you Worry
## You make it DOUBLE.

கணபதி ரவீந்திரனே!

இதுதானே உனது கனதியான கலைவாழ்வின் ஒரே எதிர்பார்ப்பும், இலட்சியமும். நாடகம் ஒரு அலாதியான ஜனரஞ்சகக் கலை. நல்ல நடிகனுக்குரிய இயற்கையான திறன்கள் உனக்குள் உண்டு வெகு கலாதியாக.
அதனால் -
நாடக மேடைகளை மிக இலாவகமாக ஆளுமை செய்கிறாய். உனது குரலினுடைய அசைவுகள், ஏற்ற இறக்கங்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை. உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் உனது முகபாவங்களால் என்னை வெகுவாகக் கவர்ந்திருக்கிறாய்.

"வரணியூரான்" எஸ். எஸ். கணேசப்பிள்ளை, "முகத்தார்" எஸ். யேசுரட்ணம், "அப்புக்குட்டி" ராஜகோபால், "அண்ணைறைட்" கே. எஸ். பாலச்சந்திரன் வரிசையில் நீயும் என் மனதில் நிறைந்திருக்கிறாய்.

நீ மானுட நேயம் பாடுகின்ற கலைஞனுமாவாய். அறிவார்ந்த கலைஞன், அதி உன்னதமான கலைஞன். மனம்விட்டுப் பழகும் உனது இயல்பான போக்கு நட்டநடுச் சந்தியில் உன்னை சந்திப்போரையும் மகிழவைக்கிறது. புகழவைக்கிறது.

நீ வாழி.

மேடை நாடகங்கள். தொலைக்காட்சி நாடகங்கள். குறும் படங்கள், தனிநடிப்பு எல்லாமே உன் தனித்திறனை எடுத்துக் காட்டுகினறன. உனது பேச்சுக்கள் கேட்போரை வசீகரிக்கச் செய்கின்றன.

அரங்க நிகழ்வுகளையும் தொகுத்து வழங்குகிறாய். நல்ல பல கட்டுரைகளையும் இதழ்களில் எழுதி வைக்கிறாய்.

உனது சொல்லாண்மை வாழி.

நாடகக் கலைஞர்களை ஒன்றிணைக்கிறாய். "தமிழ் வண்" நேரடி ஒலிபரப்பில் முத்திரை பதிக்கிறாய். முதியவர் மனங்களை குளிர வைக்கிறாய். ரசிகர் முகங்களை மலர வைக்கிறாய்.

உன் வல்லாண்மை வாழி.

கணபதி ரவீந்திரன்!

உனது பன்முகப் பணிகளில் ஓய்வு. ஒழிச்சல் என்பதே இல்லை.

## எனவே

## DON'T WORRY
## BE HAPPY.

ஊனும் இல்லை, உறக்கமும் இல்லை.

மணிவிழாக் காணும் கலைஞர் அணியில் இணைந்திட்ட இணையற்ற கலைஞனே இந்த "தமிழ் மணி"யின் இதயபூர்வமான வேண்டுகோள் ஒன்று உண்டு இந்த நாளில்.

உன் உடலாரோக்கியத்தை இனியாவது முறையாகப் பேணி வா.
உனது அழகாண்மை வாழி.

உனக்காக நானும் சொல்வேன் - "Don't worry be happy"

வாழி நீ பல்லாண்டு.

வாயார வாழ்த்துகிறேன் என் இதய நல்லாள் சகிதம்.

உன் கலைப்பணி உச்சங்களை தொட்டுச் செல்லும். அவை எதிர்கால கலைப்பரம்பரையை செய்யட்டும் மேலாண்மை.

விதை வீரியமாக இருந்தால் நிலத்தை மீறி அது முளைத்தே தீரும் என்ற உண்மைக்கு முன்னுதாரணமானவன் நீயேயன்றோ!

வாழ்க வளமுடன் - உன் இனிய உறவுகளோடும், ரசிகர்களோடும்.



"கலாபூஷணம்" வி. என். மதிஅழகன்
ஒலிபரப்பாளர்
ஓய்வு நிலை பிரதிப்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை ஒலிபரப்புக்
கூட்டுத்தாபனம்

ரொறன்ரோ.
சித்திரை புத்தாண்டு நாள் - 2013.

ரவீந்திரனை வாழ்த்த வந்தோருக்குப் பிரத்தியேகமாக ஒன்றுரைப்பேன்.

Worry gives a small thing a big shadow.
Don't worry be happy.

## புங்குடுதீவு காட்டுப்புலம்பதி ஸ்ரீ அரசடி ஆதிவைரவர் ஆலயம் கனடா கிளை



தாயை நேசிப்பதில் இவன் ஒரு பாசமகன்

கலையை நேசிப்பதில் இவன் ஒரு தலைமகன்

ஊரை. உறவை .நேசிப்பதில் இவன் ஒரு தங்கமகன்

தமிழை நேசிப்பதில் இவன் ஒரு அழகிய தமிழ் மகன்

நாடகத்தில் இவனே வென்றான் சதுரங்கம்

திரைத்துறையில் இவன் ஒரு திரை அரங்கம்

நகைச்சுவையில் இவன் ஒரு கோகனூர் சுரங்கம்

வானொலியில் இவன் ஒரு நிரந்தர அங்கம்

பாசத்தில் காட்டுவதில் இவன் ஒரு தாய்

பழகிப்பார்தால் புரியும் இவன் ஒரு குழந்தை

ஓடிவந்து உதவுவதில் இவன் ஒரு சகோதரன்

உண்மையாய் இருப்பதில் இவன் தான் உற்ற நண்பன்

கலைத்துறையே இவன் தினம் தரிசிக்கும் கோவில்

கலைஞர்களே இவன் வணங்கும் சாமி

கனடா தமிழர்களின் கலைத்துறையில் இவனே முதல்வன்

ஈழத்தமிழர்களின் இதயங்களை கவர்ந்ததில் இவனே தலைவன்

அறுபதாவது அகவை காணும் அன்பு நண்பர் கறுப்பழகர்
நகைசுவை அரசர் கணபதி ரவீந்திரன் அவர்களை வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன்

நன்றி கதிர் மகாத்மன்

## கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் எமது கலைச்சொத்து

புலம்பெயர்ந்து வாழ்கின்ற எம்மை தனது கலைத்திறனால் மகிழவைத்துக் கொண்டிருக்கின்ற கணபதி ரவீந்திரன் இந்த மண்ணுக்கு கிடைத்த ஒரு கலைச்சொத்து. என்றும், எப்போதும், எங்கும் ஏதோ ஒரு வடிவத்தில் எம்மை மகிழ வைக்கின்ற அவரின் அளவற்ற ஆற்றல் மிகப்பெரியது. 'என் வாழ்க்கையே என் செய்தி' (My Life is My Message) என்பதற்கிணங்க வாழ்ந்துவரும் அவர் பன்முக ஆற்றல் கொண்டவர். இந்த மண்ணில் அவரது பெயரை தெரியாதவர்கள் சிலர் தான் இருப்பார்கள். தனது அறுபதாவது மணிவிழாவை காணவிருக்கின்ற அவர் நகைச்சுவை உலகில் அழுத்தமான முத்திரை பதித்து வருகிறார்.

நல்லம்மா கணபதிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாக பிறந்த இவர் நல்லூர் கச்சேரி பகுதியில் தனது இளமைக் காலத்தை கழித்தார். ''விளையும் பயிரை முளையிலே தெரியும்'' என்பதற்கிணங்க படிக்கின்ற போது படிப்பாற்றலும், நடிப்பாற்றலும் அவருடன் கூடவே வந்தது. செங்குந்தா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த வேளையில் ஆசிரியர்களையே அசத்திவிடும் ஒரு கலைஞனாக உருவானார். அவரது சிறிய வயதில் நாடகங்கள் பலவற்றில் பங்களிப்பு செய்தமை தெரியவருகிறது. நல்லூரில் வாழ்ந்தமையால் சுற்றியுள்ள கிராம மக்களுக்கும், பாடசாலைகளுக்கும் அவரது நடிப்புத்திறன் தெரியவந்தது.

தொழில் ரீதியாக ஈழநாடு பத்திரிகையில் நல்லூர் நிருபராக 14 வருடங்கள் மட்டில் கடமை புரிந்தனர். இதனால் பல எழுத்தாளரது அறிமுகம் அவருக்கு கிடைத்தது. இதனால் அவரது எழுத்துத்துறை மட்டுமன்றி பல மேடைகளில் நடிப்பு ஆற்றலும் மிளிர்ந்தன. கல்வியங்காடு, அரியாலை போன்ற இடங்களில் உள்ள பல நாடக மேடைகளில் அவர் தோன்றியுள்ளார். 'சாம்ராட் அசோகன் முதல் உயிர் கொடுத்த உத்தமி' வரை பல நாடகங்களில் பிரதான பங்கினை ஏற்று நடித்தார். பெண்வேடம் போடுவதிலும் அவர் பின்னிற்கவில்லை. இடையே நான்கு வருடங்கள் உதவி ஆசிரியராக பணிபுரிந்த தகைமையும் அவருக்கு உண்டு. அரியாலையில் சுதேசதிருநாள் 60வது திருநாள் போட்டியில் சிறுகதை ஒன்றினை எழுதி சிறந்த பரிசினையும் பெற்றுக்கொண்டார். எனவே, அவர் சிறந்த நடிகராக, எழுத்தாளராக, ஆசிரியராக, இயக்குனராக, ஓவியராக பல்வேறு பரிமாணங்களுடனேயே கனடாவுக்கு புலம் பெயர்ந்தார். இடையே சில காலங்கள் மத்திய கிழக்கு நாடொன்றில் வாழ்ந்திருந்தாலும் அவரது முழுமையான கலைப்பணி இந்த மண்ணிலேயே இடம்பெற்றது.

கனடாவில் சிறந்த கலைஞராக வந்த இவருக்கு டாக்டர் பிகராடோவினால் தயாரிக்கப்பட்ட ''ஓட்டை'' என்ற நாடகத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. இதிலிருந்து பிரபலமான இவர் தனது சொந்த எண்ணத்தில் ''சிதம்பர சக்கரம்'' என்ற நாடகத்தினை மேடையேற்றினார். மதுபோதையுடன் சபையிலிருந்து ''உங்களுக்கு என்ன பிரச்சனை'' என்ற கேள்வியோடு மேடையில் ஏறினால் போதும் எல்லோரும் மகிழ்ச்சிக்கடலில் மிதப்பார்கள். எந்த எழுத்துப் பிரதியுமின்றி அவரது மூளை மிகவும் தீவிர ஆற்றலுடன் நகைச்சுவைகளைத் தந்து கொண்டேயிருக்கும். அங்க அசைவு, பார்வை, நாடக நகர்வு, இடமறிந்து செயல்படுதல் போன்ற சுவைகளை மிகவும்

துல்லியமாக காட்டி விடுவார். ஒரு நாடக சகாப்தத்தினை தோற்றி வைத்ததும் இவரே. 175 தடவைகளுக்கு மேல் ரொரன்றோ, மார்க்கம், மற்றும் சுற்றிவர உள்ள பகுதிகளின் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், ஊர்ச்சங்கங்கள் என்பவற்றில் இவரது நாடகப் பங்களிப்பு மிக அதிகம். அவரது கலையுலக தாரகையாக ரூபி யோகதாசனும் இணைந்த வேளையில் மேலும் வளர்ச்சி பெற்ற கலைஞராக திகழ்ந்தார்.

இவரது நாடகப் பங்களிப்புகளுக்கு அப்பால் திரைப்படத் துறையிலும் காலடி பதித்தார். கனவுகள், மனசு, உறவுகள், அதிகாலை 24, கனடியன், கதிரொளி போன்ற மனதை விட்டகலாத திரைப்படங்களை இம்மண்ணுக்கு வழங்கியுள்ளார். புலம் பெயர்ந்தோர் மத்தியில் பல திரைப்படங்களை வெளிக்கொணர்ந்த பெருமையும் அவருக்குண்டு. எந்த தொண்டுக்கும் சாயம் பூசக் கற்றுக்கொண்ட நம் சமூகத்தில் தமிழ்மொழி மூலமான பல்வேறு துறைகளையும் மீட்டவர் இவர். இவரது கவிதையாற்றலும் மிகவும் சிறந்ததொன்று. பல பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் தனது படைப்புக்களை காலத்துக்கு காலம் தந்தார். இந்த வேளையில் தனது தமிழ் அறிவினை மேலும் வளர்க்க வேண்டி பாரிய வேலைப்பளுவுக்கிடையே இங்கு செயல்படுகின்ற அண்ணாமலை பல்கலைக்கழக பட்டதாரி வகுப்பில் சேர்ந்து ஒரு கலைப்பட்டதாரியானார். 2002ல் நிறுவப்பட்ட R.R. Creations மூலமாக பல திரைப்படங்களை வெளியிட்டதுடன் 'கனடிய தமிழ் கலைஞர் சங்கத்தினையும்' உருவாக்கினார். இங்குள்ள வர்த்தகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், பூசகர்கள் ஒருவரையும் விட்டு வைக்கவில்லை. எல்லோருடனும் மிகவும் சுலபமாக தொடர்பு கொண்டு பல நாடக விழாக்களை வருடாவருடம் மேடையேற்றியதுடன் அதன் பிரதிகளையும் வீடியோ மூலம் வெளிக்கொணர்ந்தார்.

இவரது வானொலியூடான சேவை மிகப்பெரியதொன்று. இங்கு தற்போது நடைபெறுகின்ற கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் (CTBC), கனேடிய தமிழ் வானொலி (CTR), கீதவாணி, உலகத்தமிழ் வானொலி (GTR) போன்றவற்றில் பலவிதமான பணிகளை ஆற்றியுள்ளார். குங்குமச்சிமிழ், தமிழ்க்குடில், சிறுவர் பூங்கா போன்ற தலைப்புகளில் இங்குள்ள பாடசாலைப் பிள்ளைகளையும் எழுச்சி பெறச் செய்தார். இங்குள்ள எமது இளங்கலைஞர்களை உருவாக்கிய பெருமை அவருக்குண்டு. நீண்ட காலமாக இவரது உற்சாகத்தில் உருவான வராகி, மயூரன், தனஞ்செயன் போன்ற நூற்றுக்கணக்கான பாடகர்களை உருவாக்கினார். கீதவாணியில் "ஒரு ஓவியம் காவியமாகிறது" என்ற நாடகத்தை 16 வாரம் தொடர்ந்து நடத்திய பெருமை அவருக்குண்டு.

நிகழ்ச்சி தொகுப்பாளராக அவர் செய்த சேவையும் குறிப்பிடப்பட வேண்டியதொன்று. கணீரென்ற குரலால் தொடர்ந்து பேசக்கூடிய ஆற்றல் அவருக்கு இருந்தமையால் பலரும் விரும்பி அழைப்பதுண்டு. இங்குள்ள பழைய மாணவர் சங்கங்கள் பலவற்றில் பல கலைநிகழ்வுகளை நடத்திய வேளையில் உரும்பிராய் இந்துக்கல்லூரி பொங்கல்விழா குழுவினரும் கௌரவிக்க விரும்பிய மெகா பாட்டி ஹோல் (Mega Party Hall) உரிமையாளர் ஜெகன் அவர்கள் என்னையழைத்து அவருக்கு பொருத்தமான பட்டம் சூட்டுவது பற்றி என்னுடன் ஆலோசித்தார். அப்பொழுது எந்தவிதமான சலனமுமின்றி எனது எண்ணத்தில் உதயமானதே "கலைவேந்தன்" என்பதாகும். கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் என்னும் போது நல்லதொரு கவர்ச்சித் தொனியுமானது. உண்மையான உழைப்பும், திறனும் கொண்ட அவருக்கு இப்பட்டம் மிகவும் பொருந்தி விட்டது.

இதே போன்று "கலைக்குரிசில்" என்ற பட்டமும் வழங்கப்பட்டுள்ளது. கலையின்றி வாழ்வு இல்லாத அவர் இது பற்றி அலட்டிக் கொள்வதில்லை. "நேர்மையான கருமமே உண்மையான கடவுள்" என்பதனை நம்பினார். தனது தாயைப் பணிந்தே பேசத்தொடங்கினார். இன்றும் அவர் பணி தொடர்கின்றது.

தொலைக்காட்சியில் தோன்றுவது அவரது அடுத்த பரிமாணம். TVI யினரின் வைத்திலிங்கம் நிகழ்வு – அவரது ஆரம்ப நிகழ்வின் பங்களிப்பு ஆயிற்று. கலைஞர் பாலச்சந்திரனுடன் இணைந்து பலகாலம் நடித்து வந்தார். தொடர்ந்து தமிழ் வண் ஒளிபரப்பு மூலம் "இதுதான்டா இம்சை" என்ற நகைச்சுவை நாடகத்தினை தொடர்ந்து நடத்தி வருகின்றார். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் துணையாவது போன்று கணபதி ரவீந்திரனின் சகல முன்னேற்றத்திற்கும் ரூபி யோகதாசன் உதவி வருகின்றார். குடும்பமாக இணைந்து இவர்கள் நகைச்சுவை காட்சிகளில் தற்போதைய தமிழர் பிரச்சனைகள், குடும்ப நிலவரங்கள், இளையோர் படும் இன்னல்கள், முதியோர்களின் அவலம் எல்லாமே வரும். அற்புதமான இந்த தலைப்பு மூலம் இவர்களது நடிப்புத்திறன் பலரது உள்ளத்தினையும் மாற்றி வருகிறது.

'சிந்தனைப் பூக்கள்'
**எஸ். பத்மநாதன்**

## கணபதி ரவீந்திரன் ௬௦வது பிறந்தநாள் வாழ்த்து

வான்எழு மதியே போலும்
வளமுறு தமிழே போலும்
கானுறு தருவைப் போலும்
கம்பன் தீந்தமிழே போலும்
எழுகின்ற பரிதி போலும்
எழுக உன் நகைச் சுவையே
இனிதே அறுபதாண்டு இன்று
ஆயது! நீ வாழ்க பல்லாண்டு!

நகைச்சுவை, நாடகம், கவிதை
பாட்டிலே தமிழன் வாழ்வை
படைத்தவன் நீயேயன்றோ!
நடையுடன் உடையும் பண்பு
வார்த்தையே தேனினிக்கும்
என்றுமே நிலைத்து வாழும்
இனிய எம் தமிழே போல
இனிதே பல்லாண்டு வாழ்க நீ வாழ்க!

நட்புடன்,
**திரு. அ. நடராசன்,**
**திருமதி.வசந்தா நடராசன்.**



## வாழ்த்து



அறுபதில் வந்து நீ ஆழக்கால் ஊன்றினும்
இருபது வயதுதான் உனக்கென நினைத்திடும்
துறுதுறு மனிதா தூயசொல் உனதாய்
பெறுகநல் வளமே பேறுகள் பலவே.

கலைக்கு நீ வேந்தன் கணபதிக்கு இரவீந்திரன்
விலையில்லா நகைப்புக்கு நீயோர் சக்கரவர்த்தி
அலையாகத் துன்ப் ஆழிதான் திரண்டாலும்
தொலையாத உன்சிரிப்பு சோகத்தை மிரட்டுமே.

இம் என்று சொன்னவுடன் இயற்றிடுவாய் நாடகம்
அம் என்று சொன்னவுடன் ஆயிரமாய் சிந்தனைகள்
செம்மையுடன் கலைவளர்க்கும் செல்வனே நின்
இம்மையிலும் மறுமையிலும் கலை பெற்றபேறு இது.

கவிதை நாடகம் சினிமா வானொலி பத்திரிகை
புதுமை பெற்றது உன் தனித் திறமையால்
நதியாய் ஓடும் உன் சொல்வளச் சிறப்பிலே
கதியாய்க் கிடந்தோரில் நாமும்தான் ஓரிருவர்

மணிவிழா மன்னவனே மணிக்குயில் வண்ணனே
தேன்மொழித் தோழனே நீடு நீ வாழ்கவே
கனவிழாக் காணவே நீ களிப்புடன் திகழவே
மன மகிழ்வோடு நாம் வாழ்த்தியே நிற்கிறோம்.

**மரபுக்கலை வேந்தன் திரு. பொன். அருந்தவநாதன்**
**சிந்துநடைச் செல்வி திருமதி. பூங்கொடி அருந்தவநாதன்**

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
**INTERNATIONLA MOVEMENT FOR TAMIL CULTURE**

Non-Profit Organization - Canadian Government - Letters Plant - File NO. 377 156-1
நிர்வாகத் தலைமைக் காரியாலயம்
Central Administration Head Office

[illegible]

## ௬0வது பிறந்தநாள் மணிவிழா வாழ்த்துச்செய்தி



தாய் பெற்று அறுபது ஆண்டுகள் இன்று உனக்கு
கலைத்தாய் உனைப் பெற்று முப்பது ஆண்டுகள்
காண்போரை உன் புன்சிரிப்பு கவர்ந்திடும்
பல்கலையும் கற்ற கலைஞனே வாழ்க பல்லாண்டு!

உன்னை நானும் என்னை நீயும்
எதிர்பாராமல் கடந்த நாளிலிருந்து
தொடங்கிற்று உன்மீது அன்பு எனக்கு
நான் காத்திருப்பது உன் நகைச்சுவைக்காக

காலத்திற்குள் அழியாத கலைஞன் இவன்
காலத்திலும் நாம் வாழ்ந்தோம் என்ற பெருமை
எங்கிருந்தாலும் வாழ்க வளர்க என்று
இனிய தமிழ் நம் அண்ணர் சொன்னார்

பொங்குதமிழ் கலையுலகில் உனைப் போன்று
புதுமையுடன் புரட்சி செய்த கலைஞன் இங்கில்லை
உன் அங்கம் எல்லாமே ஆட்டுடனும் நடித்திட்டு
அற்புதக் கலைஞன் நீ எங்கள் அன்பின்
தமிழ்க்கலைஞனே நிவீர் வாழ்க பல்லாண்டு
வளமுடன் என வாழ்த்தி நிற்கின்றோம்

**V.K.T.S தவம் குடும்பத்தினர்**

# கலை வேந்தன் பிறந்தநாள்

கலைவேந்தன்
கணரவி மாமா
பிறந்தநாள் வாழ்த்து
பாடுவோம் சேர்ந்து
கணபதி துணை வேண்டி....

அகவை அறுபது
மகிழ்வை தருகுது
முதுமை எய்விலும்
இளமை திரும்புது
இன்றிவர் பிறந்தநாள்
இணைந்தே வாழ்த்துகிறோம்...

வடிவேல் அழகா!
நடிகன் அல்ல – சேவற்
கொடியோன் அண்ணா
கொடிபோற் படர்
அன்பின் இயல்பான்

மொழியில் நேசம்
இனத்தில் பாசம்
மனத்தில் அன்பு
குணத்தில் உவக்கும்
கொள்கை மனிதன்
இன்றிவர் பிறந்தநாள்
இணைந்தே வாழ்த்துவோம்...

இளையோர் கலைகளை
கற்றிட வளர்த்திட
தனையோர் ஊடகமாய்
தாங்கி நடக்கின்ற
சலிக்கா மனிதன்
கண ரவி மாமா இவரே.

கனடா தமிழரின்
நடிப்பின் சிகரமாய்
சிரித்தே உடலை
நோகச் செய்யும்
செய்யுள் சரமாய்
விரித்தே வடிக்கும்
நடிப்பின் உயர்வே
கலைஞன் இவரே...
வாழ்க... வாழ்கவே...

இன்னும்...
எடுத்தே தொடுத்திடு
உன்னுட் கிடக்கை
தமிழ் மொழியை நன்கே
படித்திடா விடினும் - நீ
வடித்திடும் கலையில்
குடிக்கிறோம்... பிடிக்கிறோம்
படிக்கிறோம்
வாழ்க வளமுடன்

அன்புடன்
**ஸ்ரீகுமார் சகோதரிகள்**
**அனா, சௌமி**



# ஜனரஞ்சக கலைஞன்

நண்பர் கணபதி ரவீந்திரன் அவர்கள் 2013ல் மணிவிழா காண்கிறார் என்ற செய்திகேட்டு மிக்க மகிழிவுற்றேன். அத்துடன் வியப்புமடைந்தேன். அண்மையில்தான் அவர் ஒரு நாடகத்தில் எனது மகனாக நடித்தார். என்னைப்போன்று இவரது பரம ரசிகர்களான முது தமிழர்களும் பிரமிப்படைவார்கள்!

ரவீந்திரன் ஜனரஞ்சக கலைஞனாக தமிழ் கலை அரங்கில் தன்னை ஆணித்தரமாக அடையாளப்படுத்தி சதாப்தங்களாக தக்க வைத்துள்ளார். திரைப்படம், மேடைநாடகம், வானொலி, ரி.வி. நாடகங்களில் இவரது முயற்சிகளைப்பற்றியும் வெற்றி தோல்விகளைப்பற்றியும் நீண்ட ஆய்வு செய்யக்கூடிய அளவிற்கு பதிவுகள் உண்டு.

சிறு பிள்ளைபோன்ற பணிவு, பலருடன் பண்புடனும் பிரியத்துடனும் பழகும் தன்மைகள் இவர்பால் என்னை ஈர்த்தவைகள். தனது கலை முயற்சிகளில் எனது கருத்தை ஒழிவு மறைவின்றி அவருக்கு எடுத்துக்கூறுவதற்கு நிபந்தனையற்ற வாய்ப்பை ரவீந்திரன் எனக்கு அளித்துள்ளமையை எண்ணிப்பார்க்கிறேன். ரவீந்திரனின் கலை வாழ்வின் வெற்றிக்கு பிரதான காரணமாக அமைவது அவரது உறுதியான மனநிலை. ஆங்கிலத்தில் ஒரு கூற்று, “ Let the dog bark; but the caravan will move on” – நாய்கள் குலைக்கட்டும்: ஊர்வலம் தொடரும் என்பதைப்போன்று ரவீந்திரன் எண்ணியதை எண்ணித் துணிந்த பின் எந்த சக்தியும் அவரை தடுத்து நிறுத்த முடியாது என்பதற்கு அவரது சாதனைகள் சாட்சிகளாகும்.

நண்பர் கணபதி ரவீந்திரன் அவர்கள் நீண்ட ஆயுளுடன், மன சாந்தியுடன், நிறைவுடன் பல காலம் வாழ்ந்து தொடர்ந்து கலை பணி ஆற்றவேண்டுமென அவரது 60வது பிறந்த நாளில் நான் மனமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

**மனுவல் ஜேசுதாசன்.**

## நல்லதொரு கலைஞனுக்கு வாழ்த்துக்கள்

கணபதி இரவீந்திரன் பல திறமைகள் வாய்க்கப்பெற்ற ஒரு கலைஞர். மேடை, திரைப்பட, தொலைக்காட்சி நடிகராக, நகைச்சுவையாளராக, கவிஞராக, பேச்சாளராக, வானொலி தொலைக்காட்சித் தயாரிப்பாளராக அவருக்குப் பல முகங்கள்.

கணபதி இரவீந்திரனில் எனக்கு மிகவும் பிடித்தது, அவர் சாதாரணமாக உரையாடும்போதே வெளிப்படும் நகைச்சுவை உணர்வு. அவர் இருக்கும் இடம் எப்போதுமே கலகலப்பாக இருக்கும்.

அவர் சக மனிதர்களிடம் காட்டும் பணிவும் மரியாதையும் அவருக்குரித்தான ஒரு பலமாகும்.

கனடாவில் பல வருடங்களாகக் கலைத்துறைக்கு கணபதி இரவீந்திரன் ஆற்றிவரும் சேவை மேலும் தொடர்ந்து, பல உச்சங்களை அடையவேண்டும் என்று, வாழ்க்கையின் முக்கிய தருணத்தை எய்தியிருக்கும் இந்த அறுபதாவது ஆண்டிலே வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

P.**விக்னேஸ்வரன்**
வானொலி, தொலைக்காட்சி ஊடகவியலாளர்

# தமிழர் தம் கலையுறவோடும் கலந்திருக்கும் கணபதி இரவீந்திரன்



இன்று மணிவிழாக் காணும் கணபதி இரவீந்திரன் புலம் பெயர்ந்த மண்ணில் ஆற்றிவரும் கலைத் தொண்டு மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். தாய் மண்ணிலே, சிறுவயதிலிருந்தே மிகவும் கலை ஆர்வமுள்ளவராகத் திகழ்ந்தவர். பத்திரிகைகளோடு எழுத்துத் துறையில் தொடர்புடையவராக மட்டுமல்ல, நேரம் கிடைத்த போதெல்லாம் நடிப்புத் துறையிலும் தனது ஆர்வத்தைக் காட்டினார்.

அவரது கடுமையான உழைப்பும், விடாமுயற்சியும் ஒருநாள் கலையுலகம் அவர் பக்கம் திரும்பிப் பார்க்கும் என்பதை உதயன் ஆண்டு விழாவில் அவரது நாடகம் மேடை ஏறியபோது புரிந்து கொண்டேன். அந்த நாடகத்தில் அவர் ஒரு குடிகாரனாக நடித்திருந்தார். அவரைப் பாராட்டி விருது கொடுக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. சொன்னால் நம்பமாட்டீர்கள், மேடையில் அவருக்கு அருகே சென்று மூச்சை உள்வாங்கிப் பார்த்தேன், உண்மையிலேயே குடித்திருக்கிறாரோ என்ற சந்தேகம் எனக்கிருந்தது, ஆனால் எந்தவித மதுவாடையும் அவரிடமிருந்து வரவில்லை. அந்த அளவிற்கு அவரது நடிப்பு என்னைக் கவர்ந்திருந்தது. அதன் பின் அவரது ஆர்.ஆர் கிரியேஷன் என்ற நாடகக் குழுவின் பல நாடகங்கள், திரைப்படங்கள் பார்த்திருக்கிறேன். எடுத்துக் கொண்ட பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பதில் வல்லவர் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

இவரது மேடை நாடகங்களில் இவருக்கு இணையாக நடிக்கும் ரூபி யோகதாசனின் பங்களிப்பும் இவரது புகழுக்கு மேருகூட்டியது என்றால் மிகையாகாது. நகைச்சுவை நாடகங்களில் பார்வையாளர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பதில் இருவரும் திறமைசாலிகள். எந்த ஒரு முன் ஒத்திகையும் இல்லாமலே மேடை ஏறி இரசிகர்களைத் தங்கள் பக்கம் இழுக்க வைப்பதில் கைதேர்ந்தவர்கள். நாடகங்களில் மட்டுமல்ல, கனடிய திரைப்படங்களும் இவர்களுக்குப் புகழ் சேர்த்துக் கொடுத்ததையும் மறக்க முடியாது. மகாஜனாக் கல்லூரி முத்தமிழ் விழாக்களில் அவர் ஆற்றும் பங்கு பாராட்டுக்குரியது. மகாஜனாக் கல்லூரி நூற்றாண்டுத் தொடக்க விழாவிற்குச் சாந்திநாதனின் நெறியாள்கையில் எனது கதை வசனத்தில் எழுதிய மனசுக்கு மனசு என்ற மேடை நாடகத்தைத் திறம்பட நடித்துப் பலரின் பாராட்டையும் பெற்றுத்தந்ததை இன்றும் மறக்க முடியாது.

இன்று மணிவிழாக்காணும், தமிழோடும் தமிழர் தம் கலையுறவோடும் கலந்திருக்கும் கணபதி இரவீந்திரனை மனதார வாழ்த்தி, அவரது கலைப்பணி இந்தமண்ணில் ஆரோக்கியமாகத் தொடரவேண்டும் என்றுகூறி, எனது குடும்பத்தின் சார்பிலும் வாழ்த்துக்கூறி, இன்னும் பல்லாண்டு கலையுலகில் இனிதே நடைபயிலப் பாராட்டி வாழ்த்துகின்றேன். ஆரோக்கியமாய் வாழ்க வளமுடன்!

அன்புடன்,
**குரு அரவிந்தன்.**

## வாழ்த்துச் செய்தி

வயதொன்று வந்தால் வாழ்த்து வரும்!
வயதென்று வந்தால் வாழ்த்தும் வரும்!
வயதொன்றும் பெரிதல்ல!
வயதென்றும் பெரிதல்ல!
வாழ்க்கைக்கு வயது இல்லை!
வயதுக்கு வாழ்க்கையும் இல்லை!
வயதுக்கேற்ற வாழ்க்கையும் இல்லை!
வாழ்க்கைக்கேற்ற வயதும் இல்லை!
மேலே எழுதப்பட்டவை ஒன்றும் கவிதையில்லை!
கணபதி ரவீந்திரன் என்ற பலருக்காக
என்னால் எழுதப்பட்டவை,
கணபதி ரவீந்திரன் ஒரு கலைஞர் இல்லை!
கணபதி ரவீந்திரன் ஒரு நடிகர் இல்லை!
கணபதி ரவீந்திரன் ஒரு இயக்குனர் இல்லை!
கணபதி ரவீந்திரன் ஒரு ஒலிபரப்பாளர் இல்லை!
கணபதி ரவீந்திரன் ஒரு தயாரிப்பாளர் இல்லை!
கணபதி ரவீந்திரன் ஒரு சமூகசிந்தனையாளர் இல்லை!
கணபதி ரவீந்திரன் ஒரு பேச்சாளர் இல்லை!
கணபதி ரவீந்திரன் ஒருநகைச்சுவைப்பேச்சாளரும் இல்லை!
கணபதி ரவீந்திரன் ஒரு கவிஞர் இல்லை!
இறுதியாக சொல்ல விரும்புவது....
கணபதி ரவீந்திரன் ஒன்றும் ஒன்றுக்குள்
அகப்படும் ஒன்று அல்ல......
எல்லோருக்கும் அகப்படாத.....
எல்லாம் சேர்ந்த எல்லோருக்கும் அகப்படுகின்ற
ஓர் அற்புதமான ஆத்மா!
எல்லோருக்கும் வாழ்த்துவது போல் அல்லாமல்
இவருக்கென்று இந்த சமூகத்தில் ஓர் வாழ்த்தும்
ஓர் வாழ்க்கையும் உண்டு,

வளமுடன் வாழ்க நலமுடன் வாழ்க....

**இளயபாரதி க-த-ஒ-கூ.**

## "கலைவேந்தன்" கணபதி-ரவீந்திரா
## காண்பாய்நீ நூறகவையும் வாழ்ந்து.

கலைபல அறிந்தநல் கலைவேந்தன்
கணபதி மகன் திரு ரவி இந்திரன் - வான்
அலைகளில் தேன்மொழி தனை தூவி
கலகலவென பொழியும்நல் கலா வீரன்
சலசலவென வாய்மொழி தமிழ் விளையாடும்
சாம்பவான் தானெனும் தகவோடும்
கவிதைகள் தருகிற கவின் கார்மேகம்!
கனிநல மனதுள நன்கன வுகளோடும்
களநலம் போற்றியும் பல்கவி பாடும்
கனரக உவமைகள் தினம் கோர்த்து
கணீரெனும் குரல்மணிக் கதைகூறும்
நகைச்சுவை நயம்தரு நடையோடும்
நாடகம் படைப்பதில் நவரச மன்னன்!
குடிமகன் போல் நடை நிழல் தனைக் காட்டி
கடிவிழும் நிடம்பெறும் கலை வண்ணம்!
நனிதிணை ரூபிநன் நடைகொஞ்சும்
நடிகமணி நிகர்நா கலைத் தமிழ்வாணன்!
கலைவழி படித்துவல் கனடாவில் கனதியாய்
காட்டினான் காணொளிகள் பல சாட்சி
இங்குயர் பல்கலை வானலை தொலைக் காட்சி
ஒலிவாங்கியுள் உயிர்பெறு தொகுப்பாளன்
திரைப்படம் அருளியும் குறுந்திரை வானில்
தீரனாய் தளிர்த்த நல் சொல்லாளன்
இளங்கலை அவைவழி அளப்பலமேவி
அரும்பணி ஆற்றுநல் உளப் பணியாளன்
ஊடகம் ஊடற உயர்ந்தபேர் திரனாளன்!
உயர்கவே இன்னும் மின்னும் உறுதுணையோடு!
அறுபது அகவை என்ன? இப்புவி வாழ்வில்!
இருபதுபோல் என்றென்றும் இவன் வாழ்வான்!
இவன்புதுக் கலைமாணிக் கிணையாளன்!
இனிதுற இவன்வாழ்ந்தால் இன்கலைவாழும்
என்பதாலென் மனமுனைத் தினம் தினம்வாழ்த்தும்
பைந்தமிழ் பாங்குடன் பலகலை இணைந்து
பல்லோரும் வாழ்த்தப் பணிந்து!
பாடினேன் வாழ்த்தினேன் பரிந்து!
பல்லாண்டுகள் வாழி நீ சிறந்து!

**சிவா சின்னத்தம்பி**
22-04-2013

# கலையால் கலைக்காக கலையோடு வாழ்பவர்

## கணபதி ரவீந்திரன்

அன்று ஒரு விவாத அரங்கிற்கு நானும் கவிநாயகர் கந்தவனமும் சென்றிருந்தோம் அங்கு அழகான ஒரு தேசிய உடை அது பளபளவென வெண்ணிறத்தில் மினுங்கிக் கொண்டிருந்தது. ஆனால் உள்ளே கறுப்பு நிறத்தில் ஒரு உள்ளங்கியைப் போட்டிருந்தார் ரவீந்திரநாதன். எங்களிடம் வந்தபோது கறுப்பு உள்ளங்கியைக் கழட்டி விடலாமே என்றேன். அது எப்படி உள்ளுக்கு ஒன்றும் இல்லாமல் வெறும் தேசிய உடையை அணிவது. எனது உடல் தெரியுமே என்றார். அவரை அந்தத் தர்மசங்கடமான நிலையில் இருந்து காப்பாற்றுவதற்காக கவிநாயகர் அவர்கள் உடனே அது கறுப்புத்தானே வித்தியாசம் தெரியாது என்றார். "என்னைக் கறுப்பன் என்று சொல்லுறியளோ" என்று அவரு வெள்ளை வெளேரெனத் தெரியும் பற்களைக் காட்டிச் சிரித்தார். அவரது சிரிப்பின் அழகிற்கு அவரது தோல் அழகும் ஒரு காரணம் தானோ என்று எண்ணத் தோன்றும். எனினும் அவரது நளினம், கதை, நடை, சிரிப்பு, நடிப்பு எல்லாமே அவருக்குப் பெரும் தொகையான ரசிகர்களை, அன்பர்களை, அபிமானிகளைப் பெற்றுத் தந்துள்ளது எனலாம்.

ஒருவன் எதனையும் இலகுவாகத் தேடிக்கொள்ளலாம் ஆனால் மக்களின் ஆதரவு, நட்பு, மனிதநேயம் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாது. அவ்வளவுக்கு மக்களோடு இனிமையாக, எளிமையாக, பணிவாகப் பழகும் பாங்கு கணபதி ரவீந்திருனுக்கு ஒரு தனிக்கலை என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவிற்கு பெரியவர்கள், சிறிவயர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரோடும் பழகுவது மட்டுமன்றி அனைவரும் அறிந்து வைத்திருக்கத்தக்க ஒரு கலைஞனாக வலம்வரும் திறன் கணபதி ரவீந்திரனை மக்கள் மத்தியிலே பேசப்படவைத்துள்ளது.

கலையை வளர்க்க வேண்டும் கலை வளர வேண்டும், கலைஞர்கள் வளர வேண்டும் என்னும் உயரிய நோக்கம் கணபதி ரவீந்திரனிடம் இருப்பதனை அவரோடு நட்பாகப் பழகும் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அறிந்தாற்றிச் செய்கிற்பார்க்கு அல்லால் வினைதான்
சிறந்தானென் எவற்பாற் றன்று

என்னும் வள்ளுவனார் அறிவுறுத்தும் கூற்றுக்கமைய செயல் என்பது அதனை நன்கு உணர்ந்து செய்பவனிடந்தான் காணமுடியும் என்பது போன்று கணபதி ரவீந்திரன் தான் எடுத்துக்கொள்ளும் பாத்திரமாகவே மாறி விடுகின்ற அல்லது அதில் ஊறி விடுகின்ற பாங்கு அவரை ஒரு நல்ல குணசித்திர நடிகராக ஆக்கியிருக்கின்றது.

நாடகம் என்பது நடிகனால் ஒரு மேடையிலோ அல்லது தொலைக்காட்சியிலோ அல்லது வானொலியிலோ நடித்துக் காட்டப்படுவது என்னும் பொருளை உடையதாக உள்ளது. மேடை நாடகங்கள், தொலைக்காட்சி என்பனவற்றிற்குப் பார்வையாளர்களை இலக்காகவைத்து நடித்துக் காட்டப்படுவது எனக்கொள்ளலாம் ஆனால் வானொலி நாடகங்கள் சற்று வேறுபட்டவையாக ஒலியால் தங்கள் உரையாடல்களால் ரசிகர்களை இலக்காக வைத்து நடிக்கப்படுவது. கனடிய மண்ணில் ரவீந்திரநாதன் மேடைகளில் தோன்றிப் பார்வையாளர்களை வயிறு குலங்கவும், சிந்திக்கவும் வைக்கின்ற ஒரு கலைஞன் மட்டுமல்ல தொலைக்காட்சி, வானொலி என்பனவற்றில் அவரது நகைச்சுவைகளையும், அறிவார்ந்த ஆலோசனைகளையும், படிப்பினைகளையும், கருத்துக்களையும் இலகுவாக மக்களிடம் சென்றடைய வைக்கும் நகைச்சுவை கலந்த அவரது நடிப்பால் அவர் பெருந்தொகையான ரசிகர்களைத் தன் பக்கம் கவர்ந்துள்ளார் என்பதில் ஐயமில்லை.

புராண, சரித்திர, சமூக சீர்திருத்த, நகைச்சுவை பாங்கான நாடகங்களில் பல்வேறு வேடங்களை ஏற்று நடித்து வரும் நல்லதொரு கலைஞனாக ரவீந்திரநாதன் விளங்குகின்றார். அது மட்டுமன்றி அவர் தானே இயக்கி நடித்து வெளியிட்ட படங்களும் வெளியானதோடு மட்டுமன்றி கனடிய மண்ணில் உருவாக்கப்பட்ட சில படங்களிலும் அவரது பங்களிப்பு இடம் பெற்றுள்ளமை யாவரும் அறிந்ததே.

நாடகத்துறை எப்போது ஆரம்பமானது என்பது கேள்விக் குறியானதே. நாகரீகத்தின் தொட்டில் என வர்ணிக்கப்படும் கிரேக்கத்தில் தான் மேற்குலகின் பண்டைய நாடகத்துறை ஆரம்பமானதெனக் கொள்ளப்படுகின்றது. கி.மு. 500 ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு நிறுவன ரீதியான நாட அமைப்பு இடம் பெற்றமைக்கான ஆதாரங்களை நாடகவியலாளர்களும் வரலாற்றியலாளர்களும் எடுத்தக் கையாண்டுள்ளனர். பல்வேறு நாடக நடிகர்களின் பெயர்களையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழர் நாடகக் கலையின் வரலாற்றைப் பற்றிய ஆதாரங்கள் முதற்சங்க நூலான அகத்தியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி குணநூல், கூத்தநூல், சயந்தம் நூல் என்பனவும் நாடகம் பற்றிக் குறிப்பிடுகின்றன. அபிநயரால் எழுதப்பட்ட அபிநயத்திலும் நாடவழக்கு பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன என்பது அறிஞர் பெருமக்களது கூற்றாகும். தொல்காப்பியம், சிலப்பதிகாரம் என்பன நாடகம் பற்றிய குறிப்புக்களைத் தந்துள்ளன.

காலத்தால் மூத்த தமிழில் நாடக வழக்கு விரவியிருத்தல் பன்னெடுங் காலத்திற்கு முந்தியவை எனப்படுகின்ற, இன்று தமிழன் குறிப்பாக திராவிட இனம் 70,000 ஆண்டுகளுக்கு முன்னரே இடம் விட்டு இடம் பெயர்ந்தனர் என ஆய்வாளர்களின் கூற்றின் படி தமிழின் தொன்மை மிக்கதொரு இனமாகக் கருதப்படுவதால் அவர்களின் நாகரிக பண்பாட்டு வளர்ச்சியில் நாடகம் சிறப்பிடம் வகித்திருத்தல் வேண்டும்.

மோனத்து இரந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பறிந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே
இசையில் பிறந்தது ஆட்டத்து இயல்பே
ஆட்டம் பிறந்தது கூத்தினது இயல்பே
கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே

எனக் கூத்தநூல் நாடகத்தின் தோற்றத்தை வருமுறைப் படுத்துகின்றது. இறைவனின் உடுக்கின் ஓசையில் இருந்து நாடகம் உருவாகியிருத்தல் வேண்டும் என்பது இசைமரபு சார்ந்து கூத்துக்களும் அதனைத் தொடர்ந்து உரையாடல் வடிவிலான நாடக முறைகளும் தோன்றியிருத்தல் வேண்டும் எனக் கொள்ளக்கிடக்கின்றது. தொல்காப்பியர் காலத்தில் நாடகம் என்ற வடிவத்திற்கு வளர்ச்சி பெற்று வந்திருத்தல் வேண்டும் எனக் கொள்ளப்படுவதலால் தமிழின் நாடக வரலாறு பன்னெடுங்கால வரலாற்றைக் கொண்டது என்பது வெளிப்படை.

பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும், தங்கள் கருத்துக்களை மக்களிடம் இலகுவாக எடுத்துச் செல்லவும் நாடகங்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது. நாடகத்தால் பல்வேறு கருத்துக்களையும் சுவைகளையும் மக்கள் மத்தியல் எடுத்துக் செல்ல நடிகர்கள் அல்லது நாடகர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர். கூத்தாடிகள் என அழைக்கப்பட்டு வந்தமை கூத்து மரபில் நின்றும் தோற்றம் பெற்ற தெனினும் இன்று நடிகன் அல்லது நடிகை என்னும் சொல் முதன்மை பெற்றமைக்கு நாடகப் பாணியும் திரையுலகமும் முக்கிய ஏதுக்களாகின்றன.

நடிப்பு என்பது பல்வேறு சுவைகளையும் உள்வாங்கி அவற்றை வெளிக்காட்டுவதன் மூலமே செய்துகாட்ட முடியும், நடிப்பாற்றின் வெளிப்பாடு பற்றித் தொல்காப்பியம் பின்வருமாறு வகுத்துக் காட்டுகின்றது.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா லெல்லாம் மெய்பாடன்பர்”

இந்த வகையான எட்டு மெய்பாட்டையும் ஒரு நடிகனிடமோ நடிகையிடமோ காண முடிவதில்லை. சிலர் சிலவற்றில் திறமை மிக்கவர்களாக இருப்பர். சிலரால் நகைச்சுவையாக நடிக்க முடியாது, சிலரால் சோகமாக நடிக்க முடியாது. வெகுளி, மெய் சிலிர்த்தல், நடுக்ம், இன்பம், துன்பம், மயக்கம், காமம், குரோதம், காதல், வைராகக்கியம், பயம், ஆச்சரியம், என்பனபோன்ற 32 சுவைகளைக் குறிப்பிடுகின்றனர் நாடக வல்லுநர்கள். இவற்றை ஒரு நடிகன் தத்ரூபமாகச் செய்து காட்டுதல் மிகவும் கடினமானது. மக்கள் முன்னால் நேரடியாகவே நடித்துக் காட்டும் மேடை நாடகத்தில் இவற்றைக் கையாளுதல் மிகவம் அவசியமானதாக உள்ளது. அதனை எம் மத்தியில் வாழ்ந்து வருகின்ற கணபதி ரவீந்திரன் மிகச் சிறப்பாக செய்துகாட்டும் பாங்கு அவரை ஒரு உண்மையான நடிகன் என்ற தரத்திற்கு உயர்த்தியுள்ளது.

இதனைச் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றார்:

நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோலளவு இருப்பத்து நல்விர லாக
எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோல் உயரத்து உறுப்பின தாகி
உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோ லாக
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்
தோன்றிய அரங்கில்

—(சிலப்பதிகாரம் - அரங்கேற்றுக்காதை 99-106-வது வரிகள்)

மேடையலங்காரம், அதன் அளவு, மேடைக்கான திரைகள் (எளினி), உயரம், வெளியேறுவதற்கான வாயில்கள், பாடகர்களுக்கான அரங்குகள் என இளங்கோ அடிகள் தமிழரனி நாடகமரபினையும் அதன் மேடையின் தன்மையையும் மிகத்துல்லியமாக எடுத்துக் காட்டுவது பண்டைத் தமிழர் நாடக மரபில் எத்துணை சிறப்புற பங்காற்றியுள்ளனர் என்பது தெளிவு. இன்று நாடக மரபுகள் நவீன தொழில் நுட்பங்களின் வாயிலாக திரையுலகில் கால் பதித்து நவீன முறைக்கு எடுத்துச் சென்றுள்ளமை நாடக, கூத்து முறைமைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன.

கூத்துப்பற்றிக் குறிப்பிடும் இளங்கோவடிகள் இருவையான கூத்துக்கள் அக்காலத்தல் இடம் பெற்றமைக்கான சான்றைக் காட்டுகின்றார். அந்த இருவகைக் கூத்துக்குமான வரையறைகள் எவை, அவை எப்படியாக பழக்கப்பட வேண்டும், மேடை யேற்றப்பட வேண்டும் என்பதனை அவர் எடுத்துக் காட்டுகின்றார்.

"இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து
பல வகைக் கூத்தும் விலக்கினில் புணர்ந்து
பதினோர் ஆடலும், பாட்டும், கொட்டும்,
விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்து - ஆங்கு
ஆடலும் பாடலும், பாணியும், தூக்கும்,
கூடிய நெறியின் கொளுத்தும் காலை-
பிண்டியும், பிணையலும், எழில் கையும், தொழில்கையும்,
கொண்டவகை அறிந்து, கூத்து வரு காலை
கூடை செய்த கை வாரத்துக் களைதலும்
பிண்டி செய்த கை ஆடலில் களைதலும்,
ஆடல் செய்த கை பிண்டியில் களைதலும்,
குரவையும் வரியும் விரவல செலுத்தி
ஆடற்கு அமைந்த ஆசான் - தன்னோடும்"

—(சிலப்பதிகாரம் - அரங்கேற்றுக்காதை -12 -25 வரிகள்)

எனக் குறிப்பிடுவதிலிருந்து ஆடங்கு அமைந்த ஆசான் அதாவது அண்ணாவி அல்லது குரு எல்லாம் கற்றறிந்து மேதையாக இருந்தால்தான் நாடகமோ அன்றிக் கூத்தோ சிறப்புடையதாக அமையும். இருவகைக் கூத்து என்பது அகக்கூத்து புறக்கூத்து என வரையறை செய்வர். அகக்கூத்து அரசர்களுக்காக ஆடப்படுவது. மற்றயது புறக்கூத்து சாதாரணமக்களுக்காக ஆடப்படுவது. அது பொதுவான கூத்து எனப்படும். இந்தப் பொதுவான கூத்து இன்று சாதாரணமக்களின் வாழ்வியல் தொடர்பான சம்பவங்களை அடியொற்றியதாக அமைகின்றமை பெரும்பாலும் இன்றைய மேடைநாடகங்களில் இடம்பெறுவதனைக் காணலாம். ஆவ்விதம் இடம்பெறும் நாடகங்களையே இன்று உலகெங்கும் நாம் பொதுவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

நாடக வளக்கில் விநோதக் கூத்து அல்லது நகைச்சுவை கலந்து இன்பமாக பார்வையாளர்களை வைத்திருப்பதாக ஆடப்படும் நல்லது நடிக்கபடும் கூத்துக்கள், நாடகங்களை பல்வேறு வகையினவாகப் பகுத்துப்பார்ப்பது வழக்கம். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பின்வருமாறு கூத்துக்கலையை வகுத்துத் காட்டுகின்றார்:

கரவைக் கூத்து - ஒன்பது கலைஞர்கள் காதல் அல்லது வெற்றிப்பாக்கள் பாடி கை கோத்து ஆடும் கூத்தாகும்.

கழாய்க்கூத்து - கலைநடனம் என அழைக்கப்படும் கூத்து.

குடக்கூத்து - கரகம் என அழைக்கப்படும் குடக்கூத்து.

கரணம் - பாய்ந்து ஆடப்படும் கூத்து.

பார்வைக்கூத்து - கண்களினால் நோக்கப்படும் கூத்து.

வசைக்கூத்து - நகைச்சுவை உணர்வுகளினை மையமாகக் கொண்ட கூத்தாகும்.

சாமியாட்டம் அல்லது "வெறியாட்டம்"

எனப் பலவகை நாடக உத்திகளையும் வேறுபாடுகளையும் பண்டைய தமிழகம் கொண்டிருந்தமையை அறிய முடிகின்றது. அத்தகைய கூத்து முறைகள் அருகி விட்டாலும் இன்று அவை இன்னோர் வடிவில் மாற்றங்கண்டு மேடைகளை அலங்கரிப்பதைக் காண்கின்றோம். இந்த மேடை நாடகங்களுள் நகைச்சுவை கலந்த நாடகங்கள் மக்களின் வரவேற்பைப் பெறுவதனைக் காணலாம். அந்த வகையில் இன்று பல்வேறு நாடகங்கள் திரையுலக நடைமுறைகளில் இருந்து வேறுபட்டு ஜனரஞ்சகமான முறையில் நடித்துக் காட்டுப்படும் போது மக்களின் ஆதரவை மட்டுமன்றி அவர்களிடத்துத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் இன்றைய கதாநாயகன் கலைஞன் கணபதி ரவீந்தரநாதன் தனக்கே உரிய ஒரு பாணியில் நாடகத்தை இயக்கியும் நடடித்தும் பெரு வெற்றி கண்டு வருகின்றார். அவருக்குத் துணையாக நாடகத்துறையில் ஈடுகொடுத்து நடிக்கும் ஒரு நடிகையாக திருமதி ரூபி யோகதாசனுனும் பாராட்டப்பட வேண்டியவர். பல்துறை வித்தகராக கவிதை, பேச்சு, விவாதம் போன்றவற்றிலும் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்திவரும் திறன்மிக்க ஒரு கலைஞனைப் பாராட்ட வேண்டியது மதிக்கப்படே வண்டியது.

மணிவிழாக் காணும் கலைஞன் கணபதி ரவீந்திரன் தொடர்ந்தும் நாடகத்துறையில் தன்னாலான பணிகளைத் தொடர வேண்டும் என வாழ்துகின்றேன்.

நன்றி
**த.சிவபாலு**

## ஜெக சுஜந்தனிடமிருந்து வாழ்த்துச் செய்தி

கலைத்தாய் பெற்றெடுத்த கலைவேந்தன், கலைஞர்கட்கு ஓர் கலங்கரை விளக்கமாய் பல்லாண்டு காலம் பல்கோடி பெற்று தாழாத கீர்தியுடனும் குன்றாத வளமுடனும் வாழ வாழ்த்துகின்றோம்!

இப்படிக்கு
**அன்பு நண்பன் ஜெக சுஜந்தன்,**
**என்றென்றும் அன்புடன் வஞ்சிதா சுஜந்தன்.**



# தோள் தந்தான் தோழமைக்கு தோளே தந்தான்

**கலாராஜன்**

நான் சொல்வதெல்லாம் உண்மை
உண்மையை தவிர வேறொன்றும் இல்லை

அன்பிற்கு இன்று அகவை அறுபது
நல்ல தமிழ்ப் பண்புடைய மனிதம் இன்று
அகவை அறுபது காண்கிறது
நீலமேகத்தை கார்முடிக்கொண்டால்தான் மழை
ஆண் அழகன் இவன்போல் முன்னமும் இல்லை
இனிப் பிறப்பாரோ என திண்ணமும் இல்லை என்று
இறுமாப்பாய் கவிசெய்த கம்பகாவிய நாயகன்
இராமனும் கார்மேக வண்ணனே
அதுபோல் கறுப்பு நிறத்தில் கலையாளப் பிறந்த
கலை வேந்தன் கணபதி ரவீந்திரனுக்கு அகவை அறுபது
அறுபதா! இருபதா! இளமை இவனிடம் மட்டும்
இணைபிரியாது நிலைத்ததா! என
வெற்று வயதிற்கு முற்றுத் தரிப்பு வைத்த
இளந்தமிழனுக்கு வயது அறுபது.

இந்தநாள் புனிதமானது!
நல்லார் ஒருவர் பொருட்டே எல்லோர்க்கும் மழை என்றால்
இன்னும் மழை பெய்ய காரணன் இவனே அதனால்
இவன் பிறந்த இந்தநாள் புனிதமானது!

மனிதம் தொலைந்த உலகம்
விலங்கினும் கொடியதாய் மாறியது மனிதம்
தொலைந்த மனிதத்தின் தடயம் கண்டோம்!
மனிதத்தின் மதிப்பெண் இவனே என்போம்! அதனால்
இவன் பிறந்த இந்தநாள் புனிதமானது!

நாற்றம் வீசும் சாக்கடையிலும், உப்புக் கடலிலும் பருகியநீரை
சுத்தமான மழைநீராக கொப்பளிக்கும் சூரிய சூத்திரம்போல்
சமூகச் சாலையை அழுக்காக்கிக் கொண்டிருக்கும்
சீர்கேடுகளை உள்வாங்கி நல்ல கலைப் படைப்புகளை தந்த
மனிதப் பகலவன் இவனே! உண்மைஇது வீண் புகழ்ச்சி இல்லை!

அறிவு,....இது இருப்பதனால்தான் மனிதன்
மனிதரெல்லாம் அறிஞர் என்றால் பொருட் குற்றம் ஆகாது

தரத்தில் உயர்வாக்க தங்கம் புடம் போடப்படுகிறது
அழகு மேம்படுத்த வைரம் பட்டை தீட்டப்படுகிறது
அப்படித்தான் மனிதனைப் புனிதனாக்க
அறிவுக்கு, அறிவின் அருமையை போதிக்கும்
ஞானகுருவை மனிதர் நாடுகிறார்கள்.
கலைப் பணியின் சகல பரிமாணங்களையும் தொட்டவன்
மேடை நாடகங்கள் முதல் சினிமாப் படம்வரை
தயாரித்து இயக்கியவன்
நகைச்சவையை மிகச்சுவையாய் தரும் வல்லமை உள்ளவன்
முற்போக்கு சிந்தனையுள்ள கவிதை கட்டுரைகள் பல தந்தவன்
பத்திரிகை வானொலி தொலைக்காட்சி இதுபோன்ற
ஊடகங்கள் வளி நுளைந்து
மக்கள் மனங்களொடு ஊடிக் கொண்டவன்
இவன் சமூகம் இல்லாத சமூக நிகழ்ச்சிகளே இல்லை
அந்த நிரையினில் பார்த்தால் கணபதி ரவீந்திரன் அவர்களை
நல்ல அறிஞன் என்பதில் குறையேதும் இல்லை.

உண்மையில் இவனே! நல்ல நட்பின் இலக்கணம் என்பேன்
"பனைத் துணை அனையர் நண்பர்" என்று நாலடியார் சொன்னது
தன்னை முழுதாய் சமூகப் பணிக்கு தந்தவன் இவனே!

முகம்நக நட்பது மட்டன்றி நட்பில் பிழைவரும்போது
இடித்துரைத்து நட்பை காக்கும் திறம் உடைய நண்பரிடமே
நட்பின் வீற்றீருக்கை என்று வள்ளுவம் சொல்கிறது

இன்னார் இவன் என் குலமோ! என அறியாதொருவனுடன்
அரசகுலத்தார் கூடுதல் இழிவென்று
நட்பை பழித்தது கண்டு அரசுரிமை கொடுத்து
அங்கதேசத்து மன்னன் இவனென்று நட்பிற்கு பெருமை தந்த
துரியோதன்ன கர்ணண் நட்பை பெரிதென விளம்பும் இலக்கிய நட்பு

இரந்து சென்ற குசேலரை குபேரனாக்கிய கண்ணனின் நட்பைப்போல்
நானும் ஒருநாள் நட்பின் துணை நாடிச் சென்றேன்
தோள் தந்தான் தோழமைக்கு தன் தோளே தந்தான்.
என் இன்னாள் இனிக்க இவன் நட்பே காரணம்
வாழ்வு தந்தானை வாழ்த்தும் வாய்ப்பினைத் தந்த இறைவனுக்கு நன்றி
என் உயிர் நண்பா வாழ்க நீ பல்லாண்டு!

# அகவை அறுபதை காணும்
# அண்ணன் கணபதி ரவீந்திரனை
# வாழ்த்தி வழங்கிய பாமாலை

முக நக நட்பது நற்பன்று –நெஞ்சத்து
அக நக நட்பது நட்பு.



பாருக்குள் நல்லதொரு கலையை
பண்போடு படைத்திடும் பல்கலை வேந்தனே
நாடகப் பெருவிழா காணும் - நடிகனே
நாடி வந்த நாட்டினிலே நல்லபடி கலைவளர்த்தாய்
தலையிலே கொண்ட தகமை கலையிலே வந்ததோ......
தகலோன் என பலவேடங்கள் தந்திடும் கணபதியே
புதுப்புது வேடங்கள் புத்துயிர் பெற்றிட
புங்கலம் கொடுத்து புதுமைகள் படைத்திட
புன்முறுவல் என்நாளும் பூத்திடும் கணபதியே
புகழுடன் நீ வாழ வாழ்த்துகிறோம்
கள்ளமில்லா சிரிப்போடு கபடமற்ற நெஞ்சோடு
கண்ணியமாய் நண்பர் உள்ளம் ஆள்பவரே
இலைமறை காயாக எல்லோர்க்கும் உதவும்
இனிய குணம் கொண்ட இளவலே – கணபதியே
புடபடவென பலவகை தொண்டுகள் செய்து
பாரே போற்றிட பல்லாண்டு வாழியவே.

அன்பொடு வாழ்த்துவது
**கா. காந்தரூபன் கு டும்பம்**

## 4.05.2013ம் திகதி பாபா விருந்துபசார மண்டபத்திலே மணிவிழாக் காணும் கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களை வாழ்த்தி வழங்கிய பாமாலை



முந்தும் அவையெலாம் முத்தமிழ் சிந்திடும்
பைந்தமிழ் வேந்தனே பாவலனே- செந்தமிழ்போல்
என்றும் இளமையாய் இன்பமொடு வாழ்ந்திடவே
அன்பொடு வாழ்த்தினோம் ஆர்த்து!
மணிவிழாக் காணும் மன்மதா ரவீந்திரா
பணிபல புரிந்திடும் பகிடியின் சிகரமே
அணிதிரள் அன்பர் ஆசிகள் பெருகியே
பிணிக ளின்றியே பல்ல(ா)ண்டு வாழ்கவே!
செல்லும் சபையெலாம் சிரிப்பொலி சேர்த்திடும் சிறப்பியே கணபதி!
சொல்லின் உறுதியும் சோர்விலாச் செந்தமிழ் ஞானமும் வளமும்
அல்லும் பகலும் அயராது அன்னைத் தமிழ்காக்கும் கலைவேந்தே!
வல்லவனே! வளத்தொடு வாழ்வாங்கு வாழி வானரும் போற்றவே!
வானிலே சிறப்பாய் வளமொடு வண்தமிழ் மேடையில் திகழ்வாய்
தேனெனத் தெளிந்தநற் தெள்ளு தமிழ்ச்சுவை மழையெனப் பொழிவாய்
கானமும் கதைகளும் களிப்புறு காட்சியும் தந்திடும் நடிகனே
நானிலம் போற்ற வாழ்க நலமொடு கணபதி ரவீந்திரா!
கரும்பென இனித்து வாழ்க! கணபதி நீடு வாழ்க!
விருதுகள் பல்கிப் பெருகி வளமொடு வாழ்வை வாழ்க!
திரும்பிடும் திசைகள் தோறும் தேடிய நட்பு மலிந்து
விரும்பிய யாவும் பெற்று வேந்தனே வாழ்க வாழ்க!
உள்ளமும் உடலும் என்றும் உறுதியாய் நிலைத்து வாழ்க!
தெள்ளு தமிழ் ஞானம் தெவிட்டாது இனித்து வாழ்க!
பிள்ளைகள் பேரர் பூட்டர் பந்தம் சூழ வாழ்க!
வள்ளலார் வரசித் தியானடி வேண்டினேன் வாழி நீடே!

**ஞானகணேசன் தம்பிஐயா**

Dear Raveenthiran,



Congratulations on your $50^{th}$ Birthday.
Each birthday is a stepping stone;
Each year, an opportunity
To grow, discover,
And become all God
Intended us to be!
I am praying that each new day
Of the year ahead
Will be blessed
With wonderful things
To look forward to!

## Happy Birthday

Best wishes
**Sylvia**

Kanapathy Raveendran is a multi talented personality; an Actor-Producer-Director, Humorist, excellent speaker, devoted social worker and above all a humanitarian.
His involvement in the social activities of the Tamil community is well recognized .
Arising from his attachment to his mother, he is sentimental towards serving the seniors in our community.
Malvern Tamil Seniors is one of those numerous institutions that had the privilege of his association and assistance. The contribution he made is appreciated.
Gifted he is with the knack of befriending and maintaining long standing friendship with people.
We wish him Health, Wealth and Happiness. May God bless him with many more years of active participation in the social activities to our community.

**Best Wishes from Malvern Tamil Seniors**

## வாழ்க பல்லாண்டு!

மனங்கவர் பேச்சும் மயக்கும் சிரிப்பும்
உனதுநல் சொத்தெனக் கொண்டாய் - இனத்தின்
வாழ்வை உயர்வினை உள்ளத் திருத்தி
வாழ்வாங்கு நீண்டுநீ வாழ்.

கலைக்காய் வாழும் கணபதி ரவீந்திரக்
கலைஞன் கடந்தோன் காட்டிய வழியில்
குலையாப் புகழைக் குவலயம் நிறுத்தி
நிலைபுகழ் உலகில் நிலைத்து வரழ்கவே!

**கனி விமலநாதன்**

## மட்டில் மகிழ்வொடு நீடு வாழ்க!

கனிவுப் பேச்சுக் கருணை உளத்தோன்
இனிய தமிழை இன்சுவை நகைக்குள்
இட்டுத் தெளித்து இகத்தோர்க் களிப்போன்
மட்டில் மகிழ்வொடு வாழ்க நீடு!

நாடகப் பெருவிழா நடத்தி அத்துறை
வாட விடாது வளர்திடு வோனே
பாடல் புனைந்தும் பலவாய் எழுதியும்
கூடல் தமிழைக் குளிர்விப் போனே

கரும்பென இனித்திடு கன்னித் தமிழை
கருத்தாய் ஒளிஒலிக் களங்களில் ஏற்றி
விருப்பாய் ஏற்கும் வடிவங் கொடுத்து
வருத்தந் தீர்க்கும் வல்லோன் வாழ்கவே!

**மீரா இராசையா**

## வாழ்த்துகிறேன்

கலைகளின் அரசனே
கணபதி ரவீந்திரரே
ஐம்பதாவது அகவை காணும் உம்மை
அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

தாய்மீது அன்பு கொண்டவரே
கலைக்காக உம்மை தந்தவரே
ஈழதமிழன் என்று சொல்வதிலே
தன்னிறைவு அடைபவரே.

இதுதான்டா இம்சை மூலம்
இல்லம் தேடி வருபவரே
வயிறு குலுங்க சிரிக்க வைத்து
வாழ்கைக்கு நல்ல அறிவுரை தருபவரே

வளரும் கலைஞர்களின் ஏணிப்படி நீங்கள்
வளர்ந்த கலைஞர்களுள் முன்மாதிரி
நீங்கள் கறுப்பு கமலகாசன் - மட்டுமல்ல
கனடாவின் சிவாஜி கணேசன்.

கலைமகளின் செல்லப்பிள்ளை
கலைக்காக வாழும் உங்கள்
கலை எம்மை ஆளவேண்டும்
பல்லாண்டு பல்லாண்டு காலம்
நீங்கள் நலமுடனே வாழவேண்டும்.

என்றும் அன்புடன்
**பிரேமநாத் இரகுநாதன்**

# கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் ஓர் சகலகலா வல்லவன்

கணபதி ரவீந்திரன் தமிழ் சமூகத்திற்கு கிடைத்த மதிப்பிடற்கரிய ஓர் பொக்கிசம். தன்னலம் கருதாத தார்மீகர். பிஞ்சிற் பழுத்த பலா. ஆழ்கடல் முத்துப் போன்றவர். சில சமயங்களில் பகுத்தறிவுவாதி. இரக்கம் அவரது சுபாவம். சகலகலா வல்லுனர். தூரிகை கொண்டு வரைதலில், நாடக இயக்கத்தில், நடிப்பில், நகைச்சுவையில், பேச்சுத்திறனில் பல்லோர் பணிந்தேத்தும் ஜாம்பவான். எனது மாணவன் கூட என்பதில் வெற்றிப் புன்னகை என்னிடமும் தான்.

ஒரு சமுதாயத்தை வளம்படுத்த முனைபவர் அதன் பலத்தை அறிந்திருப்பது மட்டுமன்றி அதன் பலவீனத்தையும் அறிந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் பலவீனத்தைக் களையும் வழிகளையும் காணலாம். கணபதி ரவீந்திரன் சமூக பலவீனத்தை நீக்குவதில் தன் பலத்தைக் கையாள்பவர். சமூக நீதிக்காக போராடுபவர். கள்ளங்கபடமற்ற நெஞ்சுடன் இதயங்களை தன்பால் ஈர்த்துக் கொள்பவர். ரவியின் திறமைகளை பல வகைளில் நிறுத்திக் காண்பது மிகவும் பொருத்தமானது.

**மொழியாளுமை:**

ரவீந்திரனின் பெயரை கணபதி என்றுதான் பலரும் பிள்ளையார் சுழி போட்டு அழைப்பது வழக்கம். அதிலும் கூட அவர் தந்தைக்கு:

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி

இவன் தந்தைக்கு என்னோற்றான்" என்ற வள்ளுவர் குறளைக் காட்டி பலரும் தன் தந்தையை அழைப்பதைக் கேட்டு ஆனந்தமடைவார். பேச்சில் இனிமையும் நளினமும் பரிவும் பாசமும் கலந்திருக்கும். கலைமாணிப் பாடம் படித்த சமயத்தில் கட்டுரை எழுத காலமெடுத்தாலும் வாய்ச் சாதுர்யத்தால் தமிழில் புலமைமிக்க மாணவராக பல விடயதானங்களை பொழிந்து முதல் மாணாக்கர் கூட்டத்தவரில் ஒருவராகத் திகழ்ந்தார். அவர் ஒரு திகடசக்கரம். கவிதை அழகாகப் புனையும் ரவீந்திரன் வளம் சேர்க்கும் சொற்பயன்பாடு, பொருள் பொதிந்த அனுபவம், முதிர்ந்த கவிதைகள், காலத்தால் அழியாத பொருட்செறிவு கொண்ட கவிதைகள் அவை. ஏராளமான நாட்டார் பாடல்கள், நொடிகள், பழந்தமிழ் கவிதா, அனுபவங்கள் எல்லாம் ஒருங்கிணைந்த அனுபவத்துடன் நவீன சினிமாப்பாடல்கள், நாட்டார் களைகளின் கூத்துக்கள் முதலியவற்றின் ஆழ்ந்த அனுபவத்தின் ஊடாக தன் மொழி வளத்தை தேவைக்கு ஏற்றவகையில் கையாள்வதற்குக் கற்றுக் கொண்டவர். பட்டிமன்றம், சினிமா, நாடகம், வெகுசன தொடர்புச் சாதனம் ஆகியவற்றில் வெவ்வேறு வகையான மொழித்திறனைக் கொண்டு வருபவர். இதனால் கணபதி பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் மக்கள் அலைமோதுவதுடன் களிப்பும் உறுவர். அவருடன் சேர்ந்து நடித்தவர்கள் பலரின் மொழிப்பாவனையில் அர்த்தமின்மை காணும் போது பகிடியாகவே பேசிச் சுட்டிக்காட்டி அவரை உணரவைத்து விடுவர். மொழியை மனனம் செய்வதன் மூலம் பலவற்றின் பயன்படுதலுக்கு கருவியாகலாம் என்பதை உணர்ந்து பழம் தமிழ் இலக்கியங்களில் பல பாடல் வரிகளை மனனம் செய்துள்ளார்.

வெகுஜன சாதனங்களைப் பன்னெடுங் காலமாகப் பயன்படுத்தி வெற்றி கண்டவர். எண்ணித் துணிந்து கருமம் ஆற்றுபவர். "கீதவாணி" என்றால் கணபதி ரவீந்திரன் எப்பொழுது வருவார் என ஆவல் ததும்ப எதிர்பார்த்திருப்பார் மக்கள். GMRஇல் கணபதி ரவீந்திரன் தொடர்ந்து கொண்டிருப்பதை அறிந்து அங்கும் படை எடுத்து விட்டனர். கணீர் என்ற குரலில் மக்களுடன் அன்பாக அளவளாவுவார்.

### சித்தம் நிறைவு பெறச் செய்த சித்தர் வழியில்:

வெள்ளைச் சாமி எனப்படும் கல்வியங்காட்டுச் சித்தருடன் கணபதி ரவீந்திரனுக்கு நெருங்கிய ஈடுபாடு இருந்தது. இதன் காரணமாக ரவி ''சித்து'' என்பதன் அர்த்தத்தை ''எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ளும் தன்மை'' என்பதை உள்வாங்கி இருக்கின்றார். கல்வியங்காட்டுச் சுவாமியிடம் மௌனத்தின் பொருளையும், மற்றவர் ஏளனத்தையும் இழித்துப் பேசலையும் பொருட்படுத்தாமையைக் கற்றுணர்ந்து தாம் கண்ட அனுபவங்களை அமைதியாகக் கிரகித்து தாம் மன நிறைவுடனும் ஆத்ம திருப்தியுடனும் வாழ்பவர். ''சித்தர்கள்'' என்றால் சித்தி பெற்றவர்கள் என்பதும் அர்த்தமாகும். வாழும்போதே வீடு, பேறு அடைந்தவர்கள் என்ற பொருளும் உண்டு. இந்த மரபினைக் கொண்ட சித்தர் மரபுகளைக் கைக்கொண்டு அவர்களின் நல்லெண்ணக் கருக்களை மனத்தில் இருத்தி அவற்றை வாழ்வில் சாதுவாகக் கடைப்பிடிக்க முயன்றவர். கல்வியங்காட்டுச் சாமியிடம் காணப்பட்ட சாதி பேதம், உயர்வு தாழ்வு வித்தியாசமின்றிச் ''சமத்துவம்'' பற்றி அறிந்து அச்சமத்துவத்தை தன்னுடைய வாழ்வில் இணைத்து வாழ்ந்து காட்டியவர். பாரதி கூட யோகர் சுவாமியை

''... குவலயத்தின் விழ் போன்ற யாழ்ப்பாணத்தான்
தேவிபத மறவாத தீரஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாவான்
பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி'' எனப் புதுவையில் கண்டு தரிசித்து ''பாரதியார் பாடல்களில்'' எழுதியுள்ளார். இந்தப் பாரம்பரியத்தின் தொடர்பில் வந்த ''கல்வியங்காட்டுச் சாமியிடம் சித்தம் குடிபுகுந்த கணபதி ரவீந்திரனிடம் ''சித்தமலம்'' ஆட்கொண்ட போக்கை அவர் சமூகத்திற்குச் செய்யும் செயற்பாடுகளிலிருந்து அறிய முடிகின்றது.

### நல்லது செய்யும் நாடகர்:

கணபதி ரவீந்திரனிடம் நாடகம் நடிக்கும் திறன் வெகுவாகப் பாராட்டப்படக் கூடியது. சிறுவயதிலிருந்தே நாடகராக, போலச் செய்தல் மூலம் செய்து பின்பு பாடசாலை நாடகங்கள் ஊடாக தனது திறமைகளை வெளிப்படுத்தியவர். கனடாவில் கணபதி ரவீந்திரனின் நாடகம் என்றால் ரொறன்றோ நகரம் திரண்டு வரும். முதியோர்கள் கூட பஸ் பிடித்து வந்துவிடுவர். மக்களைச் சிந்திக்க வைக்கும் அதே நேரத்தில் அவர்களுக்கு மகிழ்வை ஊட்டுவது மிகவும் அவசியம் என்பதை நன்கு உணர்ந்த கணபதி கேளிக்கையான நாடகங்களையும் இயற்றி மேடை ஏற்றுவார். பிறரின் நாடக மேடைகளிலும், குறிப்பாக முதியோர் நிகழ்வுகளில் நாடகம் போடுவது மரபு. சமூக விழிப்புணர்வு உள்ள ரூபியுடன் பல மேடைகளில் முதியோர் பற்றிச் சமூக விழிப்பூட்டல் நாடகங்கள் நடித்துப் பாராட்டையும், பரிசில்களையும் தட்டிச் சென்றவர்கள். ஹாஸ்யமாகப் பேசி மக்களை மகிழ்விப்பதுடன் கருத்துக்களாலும் கவர வைப்பார்கள். தமிழ்கலை தொழில்நுட்பக் கல்லூரியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டதாரி வகுப்பில் எனது மாணவனாக இருந்த சமயத்தில் ''மனவிலங்கு'' என்ற நாடகத்தை நான் இயக்கி மேடை ஏற்றிய போது கணபதி பிரதான நடிகராக நடித்தார். அப்போது மேடையில் நாம் அடுத்த நிகழ்ச்சி செய்ய வேண்டுமென அழைக்கப்பட்ட போது கணபதியைக் காணவில்லை. மாணவர்கள் கூறினார்கள் ''அவர் இன்னொரு நிகழ்வுக்கு போய் விட்டார். உங்களிடம் சொல்லத் தயங்கி எம்மிடம் சொல்லிப் போனார். நாடக நேரத்திற்கு வந்து விடுவதாக உங்களிடம் கூறும்படி'' என்றனர். குறிப்பிட்ட நேரம் வராது தாமதமாகவே வந்தார். இது

கணபதியை அறிந்தோர்க்கு தெரிந்த விடயம். அவர் பல தோணிகளில் ஒரே நேரத்தில் கால் வைக்கும் திறமையும் உள்ளவர். தொலைக்காட்சிகளில் பலவித நாடகங்களில் அவரைக் காண்போம். விளம்பரங்களிலும் நடிப்பார். தமிழ் வண் தொலைக்காட்சியில் சமூக அநியாயங்களை "இதுதான்டா இம்சை" என்ற தொடரில் ரூபியுடனும் வேறு சிலருடனும் எடுத்துக்காட்டி வருகிறார்.

மரபுக் கூத்துக்களிலும் கணபதி பங்கேற்று வருவது குறிப்பிடத்தக்கது. கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகங்கள் பற்றிய சீரிய அறிவைக் கொண்டு "நடிப்பிலே மிக முக்கியமான தென்னவென்றால் ஒருவர் பேசும் போது மற்றவர்களுக்கு ஏற்படும் உணர்ச்சியை முகபாவத்தாலும் அங்க அசைவுகளாலும் துலக்கிக் காட்டுவதே. இது இல்லாவிட்டால் நடிப்பே இல்லை" என கலையரசின் கருத்தை உள்வாங்கி நடித்தவர்.

யாழ்ப்பாணத்தில் சாம்ராட் அசோகன், உயிர்கொடுத்த உத்தமன், கைதி, தங்கப்பதக்கம் போன்ற நாடகங்களில் நடித்தவர். பழைய மாணவர் சங்கத்திற்காக மேடையேற்றிய "சிதம்பர சக்கரம்" எண்ணற்ற மேடைகளைக் கண்டது.

**வெகுசன தொடர்பு இலக்கிய ஆர்வம்:**

ரவீந்திரன் ஈழநாட்டில் பத்திரிகை ஆசிரியராக உதவிகள் புரிந்தவர். பரபரப்பான விடயங்களை உடனுக்குடன் ஈழநாட்டில் பிரசுரமாக விரைந்து உதவி செய்தவர். ஐரோப்பிய பயண அனுபவங்கள் பற்றி உதயன் பத்திரிகையில் 44 வாரங்கள் எழுதிப் பலரையும் ஐரோப்பாவின் அழகைத் தரிசிக்க வைத்தவர். கலாதரன் ஆசிரியராக இருந்த "ஆயுத எழுத்து" என்ற பத்திரிகையில் "இது பெரிய கூத்து" என்ற சமூக அட்டூளியங்களை விமர்சனக் கண்ணோட்டத்தில் எழுதியவர். கீதவாணியில் கணபதி ரவீந்திரன் வேலை செய்யும் போது என்னைப் போன்ற பலரை நேர்முகம் கண்டவர். பட்டி மன்றத்திற்காக பல கிராமங்களைத் தர்சனம் செய்தவர். மொன்றியல் மக்களும் ரவீந்தரனால் ஈர்க்கப்பட்டனர். 14 வயதிலேயே ஈழநாட்டில் சேர்ந்து 17 வயதிலேயே ஆசிரியருக்கு உதவிகள் செய்து பத்திரிகைத துறையில் ஆழ்ந்த தடம் பதித்தவர். பெற்றோர் இருவரையும் ஆசிரியராகப் பெற்ற நன்மையால் தமிழிலும், தான் எடுத்த விடயங்களிலும் வித்தகத் தன்மையுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ முடிந்தது. சாதனைகள் படைக்க முடிந்தது. கலை, ஓவியத் துறைகளில் வல்லமையுள்ள கணபதி செங்குந்தா பாடசாலையில் மாணவராக இருந்த காலத்தில், முதல் பரிசு பெற்ற ஜோன் மல்வன் என்ற கொழும்பு லயன்ஸ் கிளப் தாபகரை வரைந்த ஓவியம் அவர்களுக்கே 15,000 ரூபாய்களுக்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

தொழில்நுட்பக் கல்லூரியில் இருக்கும் போது "அலைகடல்" என்ற சிறுகதையை 1979ல் எழுதி வெற்றி பெற்றவர். அரியாலையில் 60வது சுதேசத் திருநாள் விழாவிற்கான சிறுகதைப் போட்டியில் கணபதியின் கதை முதலிடம் பெற்றது.

வானொலியில் தொடர்பாடல் செய்யும் பொழுது அவருடைய ஆழ்ந்த இலக்கியப் புலமையை மனோன்மணியம் சுந்தரனார் கல்லூரித் தமிழியல் படிப்பும், வெள்ளைச் சாமியின் ஞானத்தால் பெற்ற அனுபவமும் பெற்றோரிடமும் சமூகத்திடமும் கற்றுக்கொண்ட கற்பிதங்களும் கண்ணாடி போல் பளிச்சிட்டுப் புலப்படும்.

**சமூக விழிப்புணர்வூட்டலில் பங்களிப்பு:**

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த போதும், சவுதியில் 10 வருடங்கள் வேலை செய்த போதும் மிகுந்த அக்கறையுடன் தமிழ்ச் சமூகத்துடன் ஈடுபாடுகளைக் கொண்டிருந்தவர். நொந்து போனோருக்கு கை கொடுத்தார். கனடாவில் பலவித சமூகச் செயற்பாடுகளைச் செய்து வந்தார். கீதவாணியில் 12 வருடமாக ''தமிழ் கற்போம்'' நிகழ்ச்சியில் குழந்தைகளைத் தன்வசம் ஈர்ந்தார். உலகத்தமிழ் வானொலியில் 3 வயது முதல் 16 வயது வரையான குழந்தைகளைத் திருக்குறள் மனன மாக்கல் போட்டியை உருவாக்கிப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்து மாணவருக்கு தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலங்களைப் பாதுகாக்கும் வழியையும் காட்டி வருகிறார். முதியோருக்கும் பிஞ்சு நிலவுகள் எனப் பிஞ்சுகளுக்கும் நிகழ்ச்சிகள் செய்து இளமையிலிருந்தே தமிழ் மரபுகளைப் பேண வழிகாட்டி வருகிறார். யோக்வூட் அரங்கில் ''சுப்பர் சிங்கர்'' நிகழ்வை ஆரம்பித்து 3 வருடங்கள் ஆகின்றன.

கணபதி சிறந்த உழைப்பாளியாக ஸ்ரான்லி சயன்ஸ் சென்ரர் நடாத்தி, சவுதியில் வேலை செய்து, கொழும்பில் நகைக்கடை, பான்ஸி கடைகளுக்கு முதலாளியாகி பின் கனடாவிலும் மீண்டும் தொழிலாளியாக வேலை செய்து ஊதியம் பெற்று வாழ்க்கையை நடத்துபவர். அவர் தனது அன்றாட வாழ்க்கையைச் சாதாரண மக்கள் மத்தியில் நடத்துவது அவரது சமூக அக்கறையைக் காட்டுகின்றது. வெளிப்படையான பேச்சும் சமூக அரசியல் விடயங்களில் அறிவும் கொண்டவராக இருப்பதும் யதார்த்தத்தில் அவர் கொண்ட ஈடுபாட்டைக் காட்டுகின்றது. வெறும் புத்தகப் பூச்சிகளாக இருப்பதால் மட்டும் பொது மக்கள் மீதான தேவைகள் உணரப்படமாட்டாது. மக்களுடன் நெருங்கிய ஈடுபாடு சிறந்த சமூகப் பிரக்ஞை ஏற்பட ஏதுவாகிறது. அப்பொழுது தான் ஜனநாயகம், சமாதானம், சமூகநீதி பற்றிய விழிப்புணர்வு பூரணமடையும். இவற்றைக் கணபதி ரவீந்திரனிடம் காண முடிகின்றது. பல ஆண்டுகள் தமிழ் சேவை ஆற்றிய நடு வயதில் நிற்கும் கணபதி ரவீந்திரன் நீண்ட ஆயுள் பெற்று பல்வேறுபட்ட தேவைகள் நிரம்பிய தமிழ்ச்சமூகம் வாழ தொடர்ந்து உதவ வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

**பார்வதி கந்தசாமி**

## கலைவேந்தனுக்கு அன்னைத் தமிழாலே அன்பளிளி ஒரு வாழ்த்து!

**- சிவவதனி பிரபாகரன் -**

தமிழன்னை தாள் பணிந்து
தமிழ்த்தொண்டு ஆற்றிவரும்
கணபதியே ரவீந்தரனே
கலைவேந்தே வாழிய நீ!

முத்தான தமிழுக்கு
முத்தாக நீ கிடைத்தாய்!
சிந்தனையில் சீர் கொண்ட
செந்தமிழோர் வாழ்த்து இது!

தங்கத் தமிழ் விரும்பி
தனிக்கலை பல படைப்பாய்!
மங்காப் புகழ் கண்டு
மண் போற்ற வாழிய நீ!

பாசத்தின் திருவுருவாய்
பல்கலையின் பிறப்பிடமாய்
பழகும் பண்பில் சிகரமதாய்
பசுந்தமிழின் இன்சுவையாய்

இளையோர் முதியோர் வேறின்றி
இன்புற்று உவகை கொள்வர்
இனிய உன் கலைகள் கண்டு
இதயம் குளிரக் களித்திடுவர்!

கலையுந்தன் விரல் நுனியில்
கலைவேந்தே நடனமிடும்
நிகரேது நின் பண்புக்கு?
நற்றமிழில் நாம் பாடுதற்கு!

நாடகத்தமிழின் கலை வேந்தே
நானிலம் போற்றிட வாழிய நீ!
கண்ணென பல்கலை போற்றும்
கணபதியே வாழிய நீ!

வாழ்த்த வயதில்லை
வான் புகழ் கண்டிடுக
வையகம் போற்றிடவே
வாழ்க நீயும் பல்லாண்டு!



## கலைவேந்தன் கணபதி ரவிந்திரன்
## அவர்களின் ௬௦ம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்து மடல்

**புதுவை இராமன்**

கலைத்துறை என்கிறபோது இயல், இசை, நாடகம் ஆகியவை அனைத்துமே நுண்கலைகளில் ஒரு அங்கம் எனப்படும். அதில் நாடகம் என்கிறபோது மேடை நாடகக்கலை என்பது முற்றிலும் வித்யாசமாக தனித்தன்மை கொண்ட ஒரு அற்புதக் கலையாகும். மேல்நாட்டு அறிஞரான ஷேக்ஸ்பியர் கூட " உலகம் ஒரு நாடக மேடை - அதில் நாம் அனைவரும் நடிகர்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார் என்றால் அனைவரின் வாழ்வே ஒரு மாயை என்ற வகையில், நாடகக் கலையின் பரிணாமமும், சிறப்பும் மிகவும் உயர்வானதாகும். பண்டைய காலத்து நாட்டுப்புறக் கலைகளான நாட்டுக்கூத்து தொடங்கி, இன்றைய **Thaetre Play** வரை பல வடிவங்களில் மேடை நாடகங்களும், வானொலி, தொலைக்காட்சி சீரியலாகவும் நாடு, மொழி, இனம் கடந்ததாக ரசிகர்களை மெய் மறந்து மகிழ வைத்து அனைத்து கவலைகளையும், துக்கங்களையும் மறக்கச் செய்து மன நிறைவையும், புத்துணர்ச்சியையும், நிம்மதியையும் தந்து சிந்தனைக்கு விருந்தாக அமைந்துவிடும். அதிலும் நகைச்சுவை நாடகங்கள் என்கிறபோது அதன் தாக்கமே தனித்துவமானது. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும் என இயற்கை மருத்துவமாக ரசிக்கும் ஒவ்வொருவரையும் எதோ ஒரு விதத்தில் உற்சாகமூட்டுவதே இக்கலையின் மகத்துவம். அவ்விதத்தில் நகைச்சுவைக்கென தங்களது நடிப்பாற்றலால் தமிழ்த் திரையுலக பிரபல நடிகர்களான **N.S.**கிருஷ்ணன் - **T.A.** மதுரம், டணால் தங்கவேலு - சரோஜா தம்பதிகள், **T.S.** பாலையா, சாரங்கபாணி போன்ற அந்த காலத்து நகைச்சுவை நடிகர்கள் முதல் இன்றைய பிரபலங்களான கவுண்டமணி, செந்தில், விவேக், வடிவேலு, மனோரமா, கோவை சரளா போன்றவர்களின் நடிப்பாற்றல் தமிழ் கூறும் நல்லுகம் நிலைத்திருக்கும் வரை நினைவில் நிற்கும்.

இத்தகைய நகைச்சுவை உணர்வை இயல்பாகவே தனது பிறப்பின் வரமாகக் கொண்ட நமக்கெல்லாம் நன்கு அறியப்பட்ட கலைவேந்தன் கணபதி ரவிந்திரனின் 60ம் ஆண்டு பிறந்த நாள் வைபவம் இனிதே கொண்டாடப்படும் இந்நன்னாளில் ஒரு நினைவுப் பரிசாக வழங்கி அவரை மனதார வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அவரது நடிப்புத் திறன் என்பதை வர்ணிக்க வார்த்தையே போதாது. தாயகத்தில் மட்டுமின்றி, புலம் பெயர்ந்த கனடா மற்றும் பிற நாடுகளிலும் அவரது கலைச்சேவை என்பது மேடை நாடகம் மட்டுமின்றி ஒரு பன்முகக் கலைஞராக, இமயத்திற்கு ஒப்ப கலைச்சிகரத்தை அலங்கரிக்கும் விதத்தில் பெரும் வரவேற்புடன் கூடிய புகழும், உயர்ந்த அங்கீகாரமும் பெற வைத்து அனைவராலும் போற்றப்படுகிறது. அவரது நடிப்பாற்றலுக்கு கிடைத்த பாராட்டுக்களும், கௌரவங்களும், விருதுகளும் நூற்றுக்கணக்கானவை என்ற விதத்தில் அவரது கலை இல்லத்தை அலங்கரித்துள்ளதைக் கண்டு நான் பல முறை வியப்புற்றேன் என்றால் மிகையில்லை.

பொதுவாகவே மேடை நாடகம் என்ற புனிதமான கலையில் அவர் கொண்டுள்ள ஈடுபாடும், ஆற்றலும், ஆவமும் திறனும் என்றும் இளமை, இனிமை, புதுமை என தனது நகைச்சுவை நடிப்பால் கவர்ந்து விடுவார். தவிர ஒரு கதாசிரியராக, திரைப்படத் தயாரிப்பாளராக, கவிஞராக, மேடைப் பேச்சாளராக, வானொலி, தொலைக்காட்சி கலைஞராக, ஆன்மீகப் பற்றாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக, வர்ணனையாளராக

மற்றும் பட்டி மன்ற பேச்சாளராக அவரது ஆற்றல்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அவரது கலை இலக்கியத் திறன்கள் அனைத்தையும் கண்டு மகிழ்ந்து பாராட்டாத கலையுலக கலைஞர்களோ, இலக்கியவாதிகளோ இல்லை எனலாம். அந்த அளவிற்கு நகைச்சுவை உணர்வை இறைவன் தந்த வரமாகப் பெற்ற நமது கலைஞரான திரு கணபதி ரவிந்திரன் அவர்களுடன் கடந்த 12 ஆண்டுகளாக பழகியவன் என்ற வகையில் அவரின் குண இயல்புகளான பிறருக்கு உதவும் மனிதநேயப் பண்பாட்டுடன், எப்போதும் முகத்தில் புன்சிரிப்புடன் அனைவரையும் மதித்து, நட்பு பாராட்டி தன்னைப் போன்ற பிற கலைஞர்களை ஊக்குவித்தும், வாய்ப்பளித்து மகிழும் பண்பிற்கு ஈடாக வர்ணிக்க வார்த்தைகளே போதாது.

பொதுவாகவே நகைச்சுவை ஆற்றல் கொண்டவர்களின் வாழ்க்கைப் பின்னணியைப் பார்த்தால் ஏதோ ஒரு விதத்தில் அவர்களின் மனதிலும் பல ஏற்ற தாழ்வுகள், துன்பங்கள் சூழ்ந்திருக்கும். அதற்கு உதாரணம் மேலை நாட்டு நகைச்சுவை நாயகன் சார்லி சாப்லின் எனலாம். அந்த அளவிற்கு தனது மெளன நடிப்பாலேயே அனைவரின் மனதை கொள்ளை கொண்டு விடுவார். அதுபோன்றே கணபதி அவர்களும் தாயகத்தில் அரங்கேற்றிய மேடை, வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள், அத்துடன் திரைப்படங்கள் அனைத்துமே அந்த மாதிரி. அதிலும் கனடாவிற்கு புலம் பெயர்ந்தும் அவரின் நாடக மற்றும் திரைப்பட பங்களிப்பு அனைத்து வகைகளிலும் பெருமையுறச் செய்துள்ளதோடு, குறிப்பாக ஒவ்வொரு வருடமும் தனது **CTAA** கனடியத் தமிழ்க் கலைஞர்கள் சங்கம் என்ற அமைப்பின் மூலம் நடத்தும் நாடகப் பெருவிழா முதல் இங்குள்ள தொலைக்காட்சி, (குறிப்பாக "இது தாண்டா இம்சை")) வானொலி நாடகங்கள், விமர்சனங்ள் ஆகியவையே போதும் அவர் அந்த அந்த பாத்திரமாகவே மாறி அசத்திவிடுவார்.

கலைஞன் பிறப்பதில்லை - உருவாக்கப்படுகிறான் எனபதை தனது கலையுலக சேவையால் முத்திரை பதித்து வருகிறார். அவர் அடிக்கடி மேடைகளில் கூறுவதுபோல ஒரு கலைஞன் வாழும் காலத்திலேயே போற்றிப் பாரட்டப்பட வேண்டும் என்பதற்கேற்ப 60 அகவை காணும் இவ்விழாவில், அவரின் கலையார்வமும், ஈடுபாடும், நடிப்பாற்றலும் மென்மேலும் உயர்ந்து உலகளவில் அவரது புகழ் ஓங்கிட இறைவன் அருளாள் வளமும் நலமும் சூழ பல்லாண்டு வாழ வாழ்த்துவோம் தாயகக் கலைஞரான கலைவேந்தன் திரு கணபதி ரவிந்திரன் அவர்களை!

வாழ்க தமிழ் - வாழ்க கலைகள் - வாழியவே தமிழினம் வையகம் உள்ளவரை.

---

# Best Wishes

## TO MR.KANAPATHY RAVEENDRAN

From
**Kanchana Thuraisingham**
Executive Director-SLCCS
Kanchi Creations

---

# மாபெரும் கலைஞன் நடிகவேள் கணபதி இரவீந்தரன் சீருடன் பல்லாண்டு வாழ்க நலமாக ...



ஊடகத்துறைகளில் நாடகமும் ஆற்றல் வாய்ந்த ஒரு வடிவமாகும். அதுபோன்றே பத்திரிகைத்துறையம் மக்களால் நன்கு அறியப்பட்ட ஓர் ஊடக வடிவமாகும். இவற்றுக்கும் அப்பால் வானொலி, திரைப்படம் என்ற ஊடகங்களும் மக்களால் மிகவும் கவரப்படும் ஆற்றல் வாய்ந்தவை.

. இத்தகைய பல்துறைப்பட்ட ஊடகத்துறைகளின் ஊடாகத் தமிழர் புரம்பெயரந்து வாழும் நாடுகளில் குறிப்பாகக் கனடாவிலுள்ள தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட ஒரு சிறந்த கலைஞனே 'கணபதி இரவீந்திரன்' ஆவார்.

தாயகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையோடு அவர் தொடர்புபட்டிருந்த காலம் முதலாக, இற்றைவரை இரவீந்திரனை நன்கறிவேன். நான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் கடமையாற்றிய காலத்தில் (1970- 1984) இவரது உடன் பிறந்த சகோதரி சாரதா அவர்கள் சட்டவியல் பீடத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவரிடம் இரவீந்திரன் பற்றி அடிக்கடி விசாரித்துக்கொள்வேன். ஆயினும் இரவீந்திரனுடன் நன்கு பழகிக்கொள்ளும் வாய்ப்பு ரொறன்ரோவில்தான் எனக்குக் கிடைத்தது.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இரவீந்தின் மேடை நாடகங்கள் மூலம் மக்கள் மனதில் நன்கு இடம்பிடித்து விட்டார். அவரது நடிப்பே தனி ரகமானது. "கணபதிக்கு நிகர் கணபதியே" என்று கூறத்தக்க அனளவில் கனடாத் தமிழ் நாடக உலகில் தனக்கென ஓரிடத்தைப் பிடித்துக்கொண்டார். இரவீநச்திரன், கீதவாணி வானொலி மூலம் நடத்திய திருக்குறள் தொடர்நிகழ்ச்சிகள் சிறுவர்களாலும் பெரியோர்களாலும் பெரிதும் வரவேற்பைப் பெற்றிருந்தன என்பதை அழுத்தமாகக் குறிப்பிட விரும்பு கின்றேன். அவர் நடத்திய சிறுவர் வானொலி நிகழ்ச்சிகள் சிறுவர் மத்தியில் தமிழ் ஆர்வத்தையும் திருக்குறள் மனனம் செய்வதில் ஈடுபாட்டையும் ஏற்படுத்தின என்பது யதார்த்தமாகும். கடந்த பல ஆண்டுகளாக ரெறன்ரோவில் அவர் நடத்திவரும் "நாடகப் பெருவிழா" தனிச் சிறப்பு வாய்ந்தது. அவ்விழாவில் சிறந்த நாடகங்கள் மேடைஏற்றப்படுவதோடு, கலை - இலக்கியம் - சமூகப்பணி முதலான துறைகளில் மேம்பட்டுநிற்போருக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கிக் கௌரவித்து வருகின்றார்.

இரவீந்திரன் அவர்கள், கலை இலக்கியத்துறையில் மட்டுமன்றிக் கல்வித்துறையிலும் தன்னை வளம்படுத்திக் கொள்வதில் முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். ரொறன்ரோவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கனடா வளாகத்தில் நான் இளங்கலைமானி (BA) மாணவர்களுக்குக் கற்பித்தபோது என்னிடம் பயின்ற சிறந்த மாணவர்களில் கணபதி இரவீந்தின் அவர்களும் ஒருவராவார் . அவர் தொடர்ந்து முதுகலைமானிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளவுள்ளார் என்பதும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

நாடகம், வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகை, கலை - இலக்கியம் - சமூகப்பணி எனப் பல்வேறு துறைகளில் கால்பதித்து தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுக்கொண்டு, மானுட நேயத்துடன் எல்லோருடனும் நட்பாகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகிவரும் கணபதி இரவீந்திரன் அவர்களுடன் எனக்கு நட்புக்கிடைத்ததை நான் பெருமையாகக் கருதுகின்றேன். அவர் நலமும் வளமும் பெற்று, புலம்பெயர்ந்து வாழும் நம்மினம் புத்தறிவு பெறும்வகையிலான கலைச்செயற்பாடுகளில் தொடர்தும் ஈடுபட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் இ. பாலசுந்தரம்**
தலைவர். தமிழ்த்துறை –
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகம், ரொறன்ரோ

## கலைவேந்தே! அகவை கூடும் வேளையில் உவகை பொங்கு வாழ்த்துகிறேன்



முத்தமிழின் ஓர் தமிழின் முதல்வனே
வித்திட்டு வளர்ந்ததுவோ நகைச்சுவை உன்னுள்
சித்தம் எல்லாம் நாடகத்தமிழ் நிறைந்திருக்க
சொத்தாகி நிமிர்ந்தாயே புலக்கலை உலகில்

நடிப்பே என் துடிப்பானது
நற்கவி உன் வடிப்பானது
நாளிதழில் உன் வரிகள் உணர்வின் வெடிப்பானது
நம் சிறார்களிற்கு காற்றலையில் உன் குரல் பிடிப்பானது

ஊடாகம் நீ ஓடி உலாவும் அரங்கானது
நாடகம் உன்னுயிரில் கலந்து முகவரியானது
தேடகமாய் திகழ்ந்திட்டாய் கலைவானில்
கூடும் அகவையில் கூடிவிட்டோம் உனைவாழ்த்த

தமிழாண்ட தலைநகராம் நல்லையில் உதித்து
சொல்லாண்ட வம்சத்தில் வழிவந்து
நற்பினால் இதயங்களை வென்றாண்ட வேந்தே
பல்லாண்டு நீ கலையோடும் நலமோடும்
வாழிய வாழியவே

K.N. **இராஜமுகுந்தன்**

## நண்பன் கணபதி ரவீந்திரனுக்கு
## இளமை அகவை விழா

சூறாவளி வந்தால்
சுழற்றிக் கொண்டுபோகும்
மாறா மெலிவு கொண்ட
தீராத் தமிழ் வாலிபனை
ஜோரான கீதவாணியின்
ரம்மிய வானலையில்
தினம்தினம் கவிபாட
நிதமும் நாம் ரசித்தோம்

நல்ல கவிஞன் என்று
நாமெல்லாம் பாராட்டிட,
நான் கவிஞன் மட்டுமா என
நம்மையெல்லாம் அதிரவைத்தார்.
நாடகமும் விமர்சனமும்
நாம் சுவைக்க முத்தமிழும்
பன்முக ஆளுமை
தமிழியல் ஆய்வு என
கலைவேந்தன் நம் ரவீந்திரன்
நகைச்சுவையும் தமிழ் சுவையும்
நயமான கவிச்சுவையுமென
தீந்தமிழில் விந்தை படைத்தார்
பேச்சிலும் நண்பர் யமாய்த்தார்!

அன்பருக்கு
அடிக்கடி கோபம் வரும்
வெடிக்கின்ற சத்தம் தரும்
துடிக்கும் குழந்தை போல—அதில்
துளியும் ஆபத்தில்லை
நண்பர் கால் கல்லில் பட்டால்
உணர்வார் உளத்தில் வலி
அத்தனை இளகிய மனம்
அடித்துச் சொன்ன கருத்தைக்கூட
அடுத்தகணம் நட்புக்காய்
விடுத்து சிரித்துக்கொள்ளும்
சில்மிசமற்ற மெல்லிய மனம்

நாம் மறக்கமுடியாத எம்மிதய வாணி
நம்மை ஒன்றாய்க் கட்டிவைத்த ஆணி
நம் கலையை ஏற்றிவைத்த ஏணி
எம் தங்கக் கலைவாணி
எம்மினிய கீத வாணி
மறக்கவொண்ணா நினைவுகள்

கீதவாணி வானலை
வெள்ளி மாலையில் கவிமழை
கொட்டிட அலையில் கவிச்சரம்
கலந்திடத் தொழிலில் அவசரம்
பறந்து வந்து பாய்ந்து உடைமாற்றி
பறக்கப் பரபரக்க உணவிடம் சென்று
உண்ண நேரமின்றி உறைவிடம் நாடி
உணவைக் கொத்தி கவிதை கொட்டி
உயரிய நேயரின் உணர்வைத் தட்டி
தமிழை வாழ்ந்த அன்பர் என் நண்பர் ரவி

வேகமாய் வளர்ந்து கலைகளில் உயர்ந்து
நாடகம், பட்டறை, பயிற்சி, பல மேடை என
படு வேகமாய் நுண்கலையில் அதிரவைத்தார்
படிப்பில் பட்டம் மொழியில் முதிர்ச்சி
ஊடகத்துறையில் அதிவேக வளர்ச்சி
பத்திரிகை வானொலி தொலைக்காட்சி
ஒப்பரிய அத்தனை மேடைகளில் காட்சி என
பாப்பா தொடக்கம் தாத்தா வரையில்
கனடாத் தமிழர் அத்தனை பேரும்
தம் சொந்த உறவாய் நண்பனை அணைக்க
எம் நண்பனின் உயர்வில் மகிழ்ச்சி கொண்டோம்

வெள்ளிக் கவிச்சரத்தின் என் இனிய நண்பன்
இன்று ஈர்வெள்ளி அகவை காணும் இளையவன்
இன்னும் பல வெள்ளி கலைவளம் கண்டு
ஒற்றைத் துருவ வெள்ளியாய் கதிரவனை வென்று
ஒப்பாரும் மிக்காரும் போற்றும் வகை
அகிலத்தில் உச்சமாய்ப் புகழ்பெற
அன்பே சிவமென பக்தியில் முத்திபெற
முத்தமிழில் முழுமுதிர்ச்சிபெற
தித்திப்பாய் வாழ்த்துகிறேன் நண்பா!
வாழ்க வாழ்க மங்களங்கள் பொங்க
மகிழ்வும் வளமும் பெற்று வாழ்க!!

என்றும் அன்புடன்,
**குயின்ரஸ் துரைசிங்கம்**

# *A Baby at Sixty*
## *Kalaivanthan Ganapathy Ravindreen*
### *By Samy Appadurai*

Ganapathy Ravindreen is one of the rare protectors and promoters of heritage values of the Tamils both in the traditional Tamil homeland of Sri Lanka and abroad particularly in Canada where the largest Tamil population outside of Asia resides both as citizens and permanent residents.

He has expressed his love and thirst for the betterment of the Tamils in the forms of poetry, drama, comedy shows and movies. He is a multitalented and diversely skilled person who can easily adapt himself to any situation without deviating from his original path.

He has been updating himself with the elements of the ever changing culture both in the global village and within the Tamil community and this has kept him in the lime light and has never left him with the label of an out-dated producer of his programs. Even during times of great stress, he has risen to the occasion and has maintained his commitment to providing programs of the most excellent quality.

One of the best qualities Ravi has is that he is able to grasp the interest of the viewers and he spontaneously produces his programs with the aim of satisfying the aesthetic thirst of the viewing audiences ranging from children to seniors.

It would be an injustice if I did not express a word of appreciation and thanks to Ravi for producing a very exciting weekly drama show which tackles social issues faced by Canadian Tamils on Tamil One Television. This program is terrific and appreciated by all who watch it.
As an artist he has earned a reputable position in the Tamil community due to his skills, experience, and tireless contributions.

It is my great pleasure to congratulate Ravi on his sixtieth birthday which is considered a milestone in anyone's life. Furthermore, the astrological position of the planets is exactly the same as it was on his date of birth sixty years ago; therefore it is a very unique birthday for him.
I am privileged to be the Chairman of this function and I am proud to extend our sincere thanks to all of you who have shown interest and given your support and good wishes.

## GANAPATHY RAVINDRAN, THE SOCIAL ARCHITECT

Sivasambo Sridas

I have had the pleasure of knowing Mr. Ganapathy Ravindran mainly as an entertainer par excellence. I have been to a number of Plays he has staged here in Toronto and his performance has tremendously impressed me at all times.

I learn that he has had an eventful academic career during which he has excelled in the fine Arts, especially Poetry and Drama; writing and directing plays even at the tender age of fourteen or so. No wonder he has blossomed into an adult who has become a household name in the field of Drama.

Those of us viewing the weekly slot on Sundays set apart for his "***Ithuthaanda Imsai***", on Tamil One, will have much more to say about Ganapathy Ravindran's humanity. Yes, he strives, with able support from Ruby Yogadasan, his pair on stage, to have some social message conveyed to the audience, each and every time this programme is aired.

What I found profoundly interesting is the session he has with the audience after the screen comes down. He devotes that quality time to ascertain the efficacy of his presentation, predominantly satirical in content, in conveying the message of the day to his audience. Such is his conviction that he seeks to downplay the entertainment aspect of his presentation while emphasizing the social message built into the presentation. There has been occasions where I have been watching only the interaction with the audience during the second half of the programme, having missed the drama itself. Having got the message ( not how it was conveyed) I make it a point to catch the first half at a subsequent repeat of the programme, just to savour the manner in which he chose to put the message across. Such is the interest his presentation evinces and like umpteen others I am thankful to this social architect.

On a personal note, Ganapathy Ravindran is just an acquaintance for me, having known him only here in Toronto but that indeed is not the feeling I experience every time I cross path with him. His humility is striking. His respect, perhaps for reputation and age is manifest in his conversation wherein he makes you feel that he has known you for ages. It is just this quality that draws me close to this fine gentleman who undoubtedly is an asset to the Tamil community. It gives me great pleasure to be associated with this effort at documenting not only the achievements of this unassuming individual but also his humanity with which he stands out among his peers. I wish him long life and success in all his future endeavors.

# "கணபதிரவீந்திரன் கலையுலகின் சகாப்தம்"

இன்று வைரவிழாக்காணும் திரு கணபதிரவீந்திரன் அவர்களின் வளமான வாழ்வு பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புமாக அமைந்திட கனடா வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் தனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றது.

கணபதிரவீந்திரன் என்று இன்று கனடாவில் பெயர்சுட்டி அழைக்கப்படுபவர் எல்லோருக்கும் நன்கு தெரிந்தவரும், நன்கு பரீட்சயமானவருமாவார். இவர் எவ்வாறு இந்தளவிற்கு மக்களிடையே அறிமுகமானார் என்பது யாவர்க்கும் மிக இலகுவாகத் தெரிந்த விடயம்தான். ஆனாலும் அதனை உரியமுறையில் தொகுத்து ஒழுங்கமைத்துத் தருவதே அவர் கலைத் துறைக்கும், ஊடகத் துறைக்கும், உதவித் துறைக்கும் ஆற்றிய அளப்பெரிய சேவைகளுக்கும், அவரது இரக்கமான, ஏழ்மையான சுபாவநிலைக்கும் கொடுக்கின்ற பெருமதிப்பாகும். மேலும் கணபதிரவீந்திரன் அவர்களின் இரசிகர்களுக்கும், அவரை அறிமுகங் கொண்ட பொதுமக்களுக்கும், உற்ரோர்க்கும், உறவினர்களுக்கும் வழங்குகின்ற நன்மதிப்புமாக அமையுமென நம்புகின்றோம்.

கணபதிரவீந்திரன் அவர்கள் 22 சித்திரை 1953ம் ஆண்டு ஈழநல்லூரில் திரு திருமதி கணபதிப்பிள்ளை ஆசிரியர் நல்லம்மா ஆசிரியை அவர்களுக்கு ஆறாவது கடைசி மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை செங்குந்தா வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். உயர் கல்வியினை யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரியில் பயின்றார். தனது பாடசாலைக் கல்வியினை முடித்துக் கொண்டதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி சயன்ஸ் சென்ரர் என்னும் கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகராக இருந்ததோடு, நிர்வாக இயக்குனராகவும் செயற்பட்டார். அதன் பின்னர் கொழும்பிற்குச் சென்று அங்கு அழகுசாதனப்பொருள், நகை வியாபார நிலையங்களை வைத்து நடாத்தினார். அதன்பின்னர் உக்கிரமடைந்த இனப்பிரச்சினை காரணமாக நாட்டைவிட்டு வெளியேறினார்.

கனடாவில் வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் ஆரம்பிக்கப்பட்ட 1997ம் ஆண்டிலேயே கணபதிரவீந்திரன் அவர்களும் கனடாவில் காலடி எடுத்த வைத்தார். அவர் காலடி எடுத்து வைத்த மறுஆண்டே கனடா வன்னிச் சங்கத்திற்கு அறிமுகமானார். எவ்வாறு இவர் இங்கே அறிமுகமானார்? தனது கலைத்திறமையினால் 1998ம் ஆண்டு நடைபெற்ற "வன்னிவிழா98"ல் "சிதம்பரசக்கரம்" என்னும் முழுநீள நகைச்சுவை நாடகத்தினை மேடையேற்றியதன் மூலம் வன்னிப் பிரதேச மக்களின் மனங்களில் நிரந்தரமாக இடம்பிடித்துக் கொண்டார். இந்நாடகம் இன்றுவரை 160 மேடையேற்றங்கைக் கண்டுள்ளது. அன்று இவ்வாறாக மக்கள் மனங்களில் இடம்பிடித்துக் கொண்ட இவர் இன்றுவரையிலும் அவர் தனது கலைப் படைப்புகளை அம் மக்களுக்கு ஏற்றமுறையில் தயாரித்து வழங்குவதன் மூலமாக தன்னிருப்பைத், தன் கலையிருப்பை அம்மக்களது மனங்களில் நிலைநிறுத்தி வருகின்ற ஓர் அற்புதக் கலைஞராகவும் உள்ளார். அன்றுதொட்டு இன்று

வரையிலும் கனடா வன்னிச் சங்கத்தினால் எடுக்கப்பட்ட வன்னி விழாக்கள், இசை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இவரது நிகழ்ச்சி இல்லாமல் நடைபெற்றதில்லை.

கணபதிரவீந்திரன் அவர்கள் தனியே கனடா வன்னிச் சங்கத்திற்கு மட்டும் கலைப்படைப்புக்களை வழங்கிய ஓர் கலைஞரல்ல. கனடாவில் இன்று விழாக்களை நடாத்துகின்ற ஊர்ச்சங்கங்கள், விளையாட்டுச் சங்கங்கள், தமிழர் பொது அமைப்புக்கள் போன்றவற்றின் விழாக்கள் பலவற்றில் இவரது கலைப்படைப்புக்கள் மேடையேறிக் கொண்டேயிருக்கின்றன.

கணபதிரவீந்திரன் அவர்கள் தனது சிறுவயது முதலே தன்னை இலக்கிய, கலைத்துறையில் ஈடுபடுத்திக் கொண்டவர். யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விழாவில், தனது எட்டாவது வயதில் முதற்தடவையாகப் பெண்வேடமேற்று நடிக்கத் தொடங்கினார். அன்றில் இருந்து ஈழத்திலே பலநாடகங்களில் குடிகாரனாக, குடியானவனாக, குடும்பத் தலைவனாகப் பலதரப்பட்ட வேடங்களையும் ஏற்று நடித்திருந்தபோதும் அதிகமான நாடகங்களில் பெண்வேடங்களையே விரும்பி ஏற்று நடித்தும் இருக்கின்றார். தான் ஏற்ற பாத்திரங்களைச் சிறப்பாகச் செய்வதில் இவருக்கு நிகர் இவேரேயாவர். இதனால் ஈழத்தில் அதிலும் சிறப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 1970களில் இவரது நாடகப்புகழ் கொடிகட்டிப் பறந்தது. மேலும் இவர் ஈழத்தில் தயாரித்து மேடையேற்றிய "நடவடி நல்லூருக்கு" என்னும் நாடகம் பொதுமக்களிடையே அமோக வரவேற்பினைப் பெற்றது. இந்நாடகத்தின் மூலமாக இவரது புகழ் மேலும் தமிழ் மக்களிடையே பரவிற்று. இதனைவிட உத்தமன், கைதி, தங்கப்பதக்கம் போன்ற நாடகங்களும் இவர் பங்குபற்றி நடித்துப் புகழ் பெற்ற நாடங்களாக அக்காலப்பகுதியில் போற்றப்பட்டன. கவிதை, சிறுகதைகள் என்பன எழுதும் ஆற்றலும் ஆர்வமுங் கொண்டவர். தொடர்ச்சியாக இவர் இவற்றினை எழுதிவந்ததன் பயனாக 1979ம் ஆண்டில் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதைப் போட்டியில் இரண்டிலுமே முதலிடம் பெற்றவராவர்.

கனடாவிற்குப் புலம் பெயர்ந்ததன் பின்னர் திரு கணபதிரவீந்திரன் அவர்கள் நாடகத்துறையினைத் தொடர்ச்சியாகச் செய்வதோடு சினிமாத் துறையிலும் தனது காலடியினைப் பதித்துள்ளார். சினிமாப் படங்களைத் தயாரிப்பதற்கான ஓர் அமைப்பாக RR Creation என்னும் அமைப்பினை கனடாவில் உருவாக்கினார். இதனூடாகத் தயாரிக்கப்பட்ட பல ஈழத்தமிழர் படங்களில் பல பாத்திரங்களை ஏற்று நடித்ததோடுமட்டுமல்லாது "கதிரொளி", "கனேடியன்" போன்ற படங்களையும் தானே முன்னின்று தயாரித்தும் உள்ளார். இவற்றினைவிட தமிழிச்சி, மனசு, அதிகாலை26, மலரே மௌனமா, ஸ்ரார்67 போன்ற படங்களிலும் இவர் வேறுபட்ட பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். வில்லனாக, பிச்சைக்காரனாக, தகப்பனாக, அண்ணனாக, மைத்துணனாக இவரது பாத்திரப் பங்களிப்புக்கள் படத்திற்குப் படம் வேறுபட்டே அமைந்தன.

நாடகத்துறையினை வளர்த்துச் செல்லவேண்டும் என்ற அவாவினால் தானே முன்னின்று கனேடிய தமிழ்க் கலைஞர்கள் சங்கம் என்ற அமைப்பினை 2004ம் ஆண்டில் உருவாக்கினார். இவ்வமைப்பின் மூலமாக நாடக விழாவினை நடாத்துவதற்குத் திட்டமிட்டு அதற்கு "நாடகப் பெருவிழா" என்னும் பெயரிட்டு 2004ம் ஆண்டில் இருந்து 2008ம் ஆண்டுவரை தொடர்ச்சியாக அதனைக் கனடாவில் நடாத்தியும் வந்தார். 2009ம் ஆண்டில் ஈழத்திலே தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக இடைநின்ற நாடகப் பெருவிழா மீண்டும் இவ்வாண்டில் புத்துயிர் பெறுவதற்கு ஆவன செய்யப்படுவதாக

அறியமுடிவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றோம். புலம்பெயர் தமிழர்களது நாடகத் துறை வளர்ச்சியில் கணபதிரவீந்திரனின் நாடகப் பெருவிழாவுக்கும் ஓர் காத்திரமான பங்குண்டு என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்கின்றோம்.

கணபதிரவீந்திரன் அவர்கள் நாடக, சினிமாத் துறையில் மட்டுமல்ல ஊடகத் துறையிலும் தனது சிறப்பான பங்களிப்புகளை ஆற்றி வருகின்றார். இவர் ஊடகத்துறையில் தனது சிறுவயதிலேயே காலடி பதித்தவர். தனது 14வது வயதில் யாழ்ப்பாணம் ஈழநாடு பதிரிகையில் தன்னை நல்லூர்ப் பிரதேச நிருபராக இணைத்துக் கொண்டவர். 3 வருடங்களின் பின்னர் உதவி ஆசிரியராகப் பதவியேற்றுத் தனது சேவையினை சிறப்பாக வழங்கினார். இக்காலத்தில் இவரால் ஈழநாட்டுப் பத்திரிகையில் எழுதப்பட்டுவந்த ஆசிரியர் தலையங்கம் (Editorial) என்பதனை வாசிப்பதற்காக ஒவ்வோர் நாளும் பாத்திருக்கும் வாசகர்கள் ஏராளம் ஏராளம். அப்போதே இவர் ஆசிரியர் தலையங்கம் ஊடாக உன்னதமான அரசியல், சமூகக் கருத்துக்களைத் தெட்டத் தெளிவாக எழுதும் ஆற்றல் படைத்தவராக இருந்தார். கனடாவிற்குப் புலம்பெயர்ந்ததன் பின்னர் தனது ஊடக சேவையினைப் பத்திரிகைத் துறையோடு சேர்த்து வானொலி, தொலைக்காட்சி என விரிவுபடுத்திச் சென்றார். கனடாவில் வெளிவருகின்ற பத்திரிகைகளில் தனது ஆக்கங்களை எழுதி வெளியிட்டதுடன், தங்கதீபம் பத்திரிகையில் பொறுப்பான பதவியில் இருந்து அதனை வெளியிட ஆக்கபூர்வமான பணிகளையும் சிறிதுகாலம் ஆற்றினார். உதயன் பத்திரிகை மூலமாக "ஐரோப்பியப் பயணம்" என்னும் தொடரினை 40 வாரங்களாக எழுதி வெளியிட்டார். அதேபோன்று ஆயுதஎழுத்துப் பத்திரிகையில் "இது பெரிய கூட்டு" என்னும் பக்கத்தினூடாக கனேடியச் செய்திகளையும், கனேடியத் தமிழர் சமூக நடவடிக்கைகளையும், நேர்காணல்களையும் அவ்வப்போது தொடராக எழுதி வெயிட்டவர். வானொலி ஊடகத்துறை என்று பார்க்கும்போது கனடாவில் முதன் முதலாகத் தன்னை அகில உலகத் தமிழ் வானொலியான கீதவாணியில் இணைத்துக் கொண்டார். இவ் ஊடகத்தில் 10 வருடங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றினார். தனது நிகழ்ச்சியில் "தமிழ் கற்போம்" என்னும் சிறுவர்களுக்கான நிகழ்ச்சியினை நடாத்துவதன் மூலமாக கனேடியத் தமிழ்க் குழந்தைகளுக்கு அழகுதமிழை உரியமுறையில் அன்பாகவும் பண்பாகவும் பேசவைத்ததோடு பொதுமறையாம் திருக்குறளை மனனம் செய்யவும் அதனை மழலைகள் மூலமாக வானலையில் பரவவிடவும் இவர் தவறவில்லை. இதேபோன்று ஜி.ரி.ஆர் வானொலியில் 3 வருடங்களாகத் தற்போது தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றார். இவ்வானொலியின் ஊடாக "பிஞ்சுநிலவுகள்", "தமிழ்க் குடில்", "சுப்ப சிங்கர்" போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றார். பிஞ்சுநிலவுகள் என்னும் நிகழ்ச்சியின் ஊடாக சிறுவர் தமிழை ஊன்றிக் கற்றுக் கொடுக்கின்றார். இவர் தொடர்ந்தும் திருக்குறளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மழலைகளுக்கு மனனப் பாடம் கற்றுக் கொடுக்கின்றார். 3 வயதுக் குழந்தையும் 500 திருக்குறள்களை மனனம் செய்ய வகைசெய்தவர் என்றால் இவர் திறமையை என்வென்று போற்றுவது. இளையோரைத் தமிழால் வளர்ப்பதிலும் முதியோருக்குத் தேவையான நேரத்தில் உதவுவதிலும் கணபதிரவீந்திரன் அவர்கள் தன்நேரத்தினையும் செலவிட்டு வருகின்றார். முதியோர் உதவிக்காக நிதி சார் நிகழ்ச்சிகளை நடாத்திப் பணஉதவி வழங்கியுள்ளார். இதேபோன்று கனேடியச் சிறுவர்களிடையே தமிழ்க்கலையினை வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் கலைநிகழ்ச்சிகளை அவர்களிடையே பழக்கி அவர்களுக்காக விழாக்களை ஒழுங்கு செய்து அவர்களை மேடையில் ஏற்றி மகிழ்வடையும் பொதுமனதுக் கலைஞர் இவர். 2011ம் ஆண்டு சித்திரை மாதம் 22ம் திகதி அன்று தமிழ்க் குழந்தைகளிடையே "சுப்பசிங்கா" என்னும் நிகழ்ச்சியினை

GTR வானொலியின் உதவியுடன் நடாத்தி அக்குழந்தைகளை ஊக்கப்படுத்தினார்.

தொலைக்காட்சி ஊடகசேவை என்று பார்க்கும்போது தமிழ்த் தொலைக்காட்சிகளான "தமிழ் வண்" என்பதிலும், ரி.வி.ஐ என்பதிலும் தனது நிகழ்ச்சிகளை நகைச்சுவை நாடகங்களாகவும், நேர்காணல்களாகவும், நற்சிந்தனைக் கருத்துக்ளை விளக்கும் நிகழ்வுகளாகவும் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார். குறிப்பாக தமிழ் வண் தொலைக்காட்சியில் வருகின்ற "இது தாண்டா இம்சை" என்ற தொடர் நாடகத்தின் மூலமாகவும், ரி.வி.ஐ யில் திரு கே. எஸ். பாலச்சந்திரன் அவர்களது "வைத்திலிங்கம் சோ" என்ற நிகழ்சியின் மூலமாகவும் தனது கலை உணர்வுகளை வெளிக்கொணருகின்றார்.

உதவித்துறை என்று பார்கும்போது அதிலும் இவரது சேவை தடம்பதித்துள்ளது என்றே நாங்கள் கூறிவைக்க விரும்புகின்றோம். உண்மையைக் கூறினால் இவர் ஓர் பணம் படைத்த கலைஞனல்ல. ஆனாலும் நல்ல மனம்படைத்த கலைஞன், நல்ல குணம் படைத்த கலைஞன் என்பது எங்கள் யாவருக்கும் தெரிந்ததொன்றாகும். ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களில் பலர் ஏழ்மையில் கலைபடைப்பவர்களாகவே உள்ளனர். இதற்குக் கணபதிரவீந்திரன் அவர்களும் விதிவிலக்கானவரல்லர். இருந்தாலும் எல்லோரையும் போன்று சிறிய சிறிய தொகை உதவிகளை அல்லல்பட்ட அவலப்பட்ட எங்கள் சொந்தங்களது, எங்கள் உறவுகளது துயர் துடைக்க அவ்வப்போது தந்துதவியவர். இதற்கும் மேலாக பெருந்ததொகைப் பணத்தினைப் பொதுமக்களிடம் இருத்து பெற்றுக் கொள்வதற்கு தனது கலைத் திறமையினையும், தனது ஊடகத் திறமையினையும் நன்கே பொருத்தமான தேவையான நேரங்களில் எல்லாம் வாரி வழங்கியிருக்கின்றார். இதற்காகப் பெருமளவில் தனது சொந்த நேரத்தினை எந்தவித பிரதியுபகாரமும் எதிர்பாக்காமல் செலவு செய்திருக்கின்றார். வன்னிச் சங்கத்தினைப் பொறுத்தவரையில் செஞ்சோலை தாக்கபட்ட நேரத்திலும் சரி, 2009ம் ஆண்டில் போர் தொடங்கியவேளையிலும் சரி, மக்கள் முகாங்களில் துன்பப்பட்ட வேளைகளிலும் சரி நாங்கள் சென்று ஊடக, கலையுதவிகள் கேட்டபோதெல்லாம் எந்தவித மறுப்பும் இல்லாமல் செய்து தருகின்ற ஒருசில கலைஞர்களில் இவரும் முதன்மையானவராக உள்ளார் என்பதனை இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

நல்லதோர் கலைஞர், இலகுவாக எல்லோருடனும் பழகக் கூடிய கர்வமற்ற கலைஞர், யாரும் இலகுவாக அணுகக் கூடிய எங்கள் கலைஞர், தன் கலையால் உறவுகளுக்கு உதவும் எண்ணங் கொண்ட கலைஞர், எந்த நேரத்திலும் அவர் வீட்டுக் கதவுதட்டி உதவி கேட்கக் கூடிய சிறப்புக் கலைஞர். இவாறான சிறந்த குணங்களைக் கொண்ட எங்கள் கலைஞர் கணபதிரவீந்திரன் அவர்கள் இன்று 60 அகவையைத் தொட்டு பொன்விழாக் காண்பதையிட்டு நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். இவரது முதிர்ந்த கலைகள் மேலும் முத்திரை பதிக்க வாழ்த்துகின்றோம். இவரது முதிர்ந்த அனுபவங்கள் ஏனைய இளங்கலைஞர்களுக்கும் கல்விக் கூடங்களாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகின்றோம். கலைத் துறையிலும், ஊடகத் துறையிலும் இவர் மேலும் புகழ்பரப்பி எல்லா வழமும் பெற்றுச் சீரும் சிறப்புமாக நீடு வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**தலைவர்**

**வ.த.ச.க அமையம் - கனடா.**

ஓம்

## மணிவிழாக் காணும் கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களை வாழ்த்தி வழங்கிய பாமாலை

வந்தனம் செய்து வணங்கிடும் பண்பும்
சொந்தம் அணைப்பும் சோர்விலாத் துடிப்பும்
செந்தமிழ் ஞானமும் செழிப்புறு பேச்சொடு
பந்தியில் சிறந்திடும் பண்பனே வாழி!

சென்றிடும் அவையெலாம் சிரிப்பொலி பெருக்குவாய்
மன்றினில் எங்கணும் மகிழ்ச்சியை ஊட்டுவாய்
அன்றலர் முகத்தொடு ஆற்றிடும் தொண்டினால்
குன்றென உயர்ந்த கணபதியே வாழி!

நாடகக் கலையின் நாயக! ரவீந்திரா!
தேடுதற் கரிய தெவிட்டாத் திரவியா!
ஆடலும் பாடலும் அரும்பெரும் பகிடிகள்
கூடியே மகிழ்வொடு கணபதி வாழி!

ஏறிய மேடை எண்ணில் அடங்கா!
கூறிய பகிடிகள் கூற்றில் அடங்கா!
மீறிய சிரிப்பொலி மேடையில் அடங்கா!
வீறு நடைதனில் வெல்லுநீ அடங்கா!

கணபதி வந்திடக் கரவொலி பெருகிடும்
குணபதி பகிடியால் குடலும் நொந்திடும்
வணங்கியே தாயை வழங்கிடும் பேச்சினால்
மணந்திடும் தமிழின் மகிமையே வாழி!

அறுபதைக் காணும் அன்பனே ரவீந்திரா!
இருபது போலவே என்றும் திகழ்க!
வருவது உந்தன் வசந்த காலமே!
முருகனை வேண்டினோம் மகிழ்வொடு வாழி!

உள்ளத்து அன்பொடு ஒருங்கிணைந்து வாழ்த்துவது
**சின்னச் சின்ன ராகச் சிட்டுக்களொடு வாணியக்கா**

## எங்கள் அன்பு ரவி மாமாவுக்கு அன்பு மருமகள் திவ்யாவின் வாழ்த்து...

ரவி மாமாவின் பிறந்த நாளுக்கு அவரால் தட்டிக் கொடுத்து வளர்க்கப்பட்ட சிறுவர்கள் சார்பில் என் வாழ்த்தைத் தெரிவிக்கின்றேன். அவர் எம் தமிழையும் கலையையும் எமக்குள் வளர்க்க காட்டிய ஊக்கத்துக்கும் எம் மீது காட்டிய அன்புக்கும் முதலில் எம் நன்றிகள்.

என் போன்ற இளையவர்களை அன்போடு அரவணைத்து ஊக்குவிப்பவர் ரவி மாமா. எங்களில் ஒருவர் போல் மிக எளிமையாக பழகி எம்மை மிகவும் மதிப்பார். சிறுவர் எம்மை தோழர்களாக பார்ப்பார். அன்பும் அக்கறையும் காட்டி ஊக்குவித்து எம் வெற்றியை தன் வெற்றியாக எண்ணி பெருமைப்பட்டு மகிழ்வார்.

அவர் சிறந்த ஒரு கலைஞர், எழுத்தாளர், பல்துறை ஆற்றல் உள்ளவர். ஆனாலும் என் போன்ற சிறுவர்களோடு பழகும் போது அவரும் ஒரு குழந்தை போலவே மாறி நகைச்சுவைகள் சொல்லி எம்மோடு சேர்ந்து தானும் சிரித்து சிரிப்புக் காட்டுவார். அவர் ஒரு மிகச் சிறந்த நடிகர். அவரால் எந்த பாத்திரம் ஏற்றும் மிகத் திறமையாக நடிக்க முடியும். பிறரை நடிக்க வைக்கவும் முடியும். உங்களை அழ வைக்கவும் அவரால் முடியும். சிரிக்க வைக்கவும் அவரால் முடியும். அப்படி ஒரு சிறந்த நடிகர், இயக்குனர், சகலகலாவல்லவன்.

எனக்கு மட்டுமல்ல எல்லா பெரியவர்களுக்கும் சிறுவர்களுக்குமே ரவி மாமா குடிகாரர் போல் "இப்ப என்ன பிரச்சனை?" என்றபடி மேடையில் வந்தால் வயிறு குலுங்க சிரித்து வயிற்றுவலி வந்து விடும்.

ரவி மாமாவோடு நான் பல நாடகங்கள் மேடையிலும் ஒரு நாடகம் தொலைக்காட்சியிலும் செய்திருந்தேன். அவர் சிறந்த ஒரு ஓவியரும் ஆவார். இதழாசிரியராகவும் இருந்து பல நல்ல ஆக்கங்களை தந்திருந்தார்.

எனது மூன்றாவது வயது முதல் நான் அவரோடு நாடகங்கள் பல செய்து அவரால் பாராட்டப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு இருக்கின்றதை நான் என் வரமாகவே நினைக்கின்றேன். என் நான்காவது வயதில் அது வரை நான் பெற்ற விருதுகள் படைப்புகள் என்பவற்றை தொகுத்து என்னைப்பற்றி அவரே எழுதிய சிறப்பு ஆக்கமானது இன்றும் நான் படித்து பார்த்து ஊக்கம் பெறுவேன். என் வாழ்நாள் முழுவதும் அதை நான் பத்திரப்படுத்தி பேணிக் காப்பேன். என்றும் அவருக்கும் ரூபி அன்ரிக்கும் நன்றி உள்ளவளாகவும் இருப்பேன்.

ரவி மாமாவுக்கு நான் வெறுமனே நன்றி சொன்னால் போதாது. என்னை தூக்கி விட வாய்ப்பளித்த பல ஏணிகளில் இருவர் ரவி மாமாவும் ரூபி அன்ரியும். அவர்களை நான் என்றும் மறக்க மாட்டேன். நான் மட்டுமல்ல என்னைப் போன்ற சிறுவர்கள் எவருமே அவரை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். இந்த பொழுதில் அவர்கள் எல்லோர் சார்பிலும் நான் இந்த வாழ்த்தை தெரிவிக்கின்றேன் ரவி மாமா அன்றிலிருந்து இன்று வரை என்னை காணும் நேரம் எல்லாம் தன் சொந்த பிள்ளை போல் ஊக்குவிப்பார். அதே சிரிப்பு... அதே அன்பு.. ஆனால் பாவம் மாமா...

அவர் மகள் இறந்த போது துடித்த துடிப்பைப் பார்த்து நான் மாமாவை கட்டிப் பிடித்து அழுதே விட்டேன். அவரில் நான் எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றேன் என அவரது மகள் இறந்த போது செத்தவீட்டில் அவர் கதறி அழுத போது என்னையும் அறியாமல் நானும் அழுத போது அறிந்து கொண்டேன். கடவுள் ஏன் இப்படி ஒரு கொடுமையை செய்தார் பாசமுள்ள எங்கள் ரவி மாமாக்கு? ஆனாலும் எனக்கு தெரியும் அவர் பெற்ற மகளை இழந்தாலும்.. அவர் தமிழ் ஆர்வம் ஊட்டி வளர்த்த என் போன்ற சிறுவர்கள் சிறுமிகள் அவருக்கு என்றும் பிள்ளைகளாக இருப்போம். ரவி மாமாவும் என்றும் தமிழ் தொண்டு செய்து அவருக்கே உரித்தான நகைச்சுவைகள் கூறிக் கொண்டு எல்லோரோடும் மகிழ்வாக சிரித்து வாழ வேண்டும். நீடூழி காலம் நலமோடு வாழ வேண்டும். வாழ்த்துக்கள் ரவி மாமா நீங்கள் நலமோடு வாழ்க வாழ்க வாழ்க!! மீண்டும் மீண்டும் எம் வாழ்த்துக்கள்!



**என்றும் உங்கள் பாசமுள்ள திவ்யா பிரபாகரன்**

## கணபதி இரவீந்திரன் மணி விழா வாழ்த்து

நாடகக் கலைஞர் நல்ல தோர் கவிஞர்
வேடங்கள் பல போட்ட வித்தகர்
நாடறிந்த நடிகர் நாழும் பொழுதும்
நாடக உலகின் நினைவுடன் வாழ்பவர்
கலைக்காகவே வெறியுடன் உழைப்பவர்
களைக்காமல் காரியம் பார்ப்பவர் அவர்
ஏறாத மேடையில்லை இந் நகரில்
பாடாத பாடில்லைக் கவியரங்கில்
உண்மையாய் ஓடி ஓடி உழைக்கிறார்
ஊதிய மெதுவு மின்றி எந்நாழும்
காண்கிறார் மணி விழா களிப்புடன்
வாழவே கடவுளை வேண்டி நாம்
தொழுகிறோம் தொடரட்டும் அவர் பணி
தொரன்றோவில் பல் லாண்டு தேக
சுகத்தோடும் பலத்தோடும் சுபீட்சமாய்ப்
பலர் போற்ற வாழ்க வாழ்கவே

-----**துறையூரான்.**--------

## என்றும் செய்நன்றி மறவோம்

தமிழர் கலையுலகில் தனக்கென தனியுலகத்தை தக்க வைத்துள்ள கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்களது மணிவிழாவினை நடாத்த உதவியவர்களுக்கும், விழாவின் போது நேரடியாக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டவர்களுக்கும், வரமுடியாத போதும் தங்கள் ஆதரவுகளை நல்கியவர்களுக்கும், உங்கள் கையில் தவழ்ந்து கொண்டிருக்கும் மலரினை வெளியிட்ட JJ பிறின்டர்ஸ் ஸ்தாபத்திற்கும், ஒலி, ஒளி அமைப்புக்களைச் செய்து கொண்டிருக்கின்றவர்களுக்கும், இவ்அழகான மண்டபத்தை தந்துதவிய Baba Banquet Hall உரிமையாளருக்கும் சிரந்தாழ்த்தி, கரம்கூப்பி எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்கள் தமிழர்கள் மீதும், தமிழர்களின் அடையாளத்தை தக்க வைப்பதிலும், தமிழர் பாரம்பரியத்தை பேணிப்பாதுகாப்பதிலும் அக்கறையோடு உழைத்து வருகிறார் என்பது அனைவரும் அறிந்ததே. அவர் தன்னுடைய கலை பயணத்தில் பல தியாகங்களைப் புரிந்து, தமிழர்கள் குறிப்பாக தமிழ் சிறார்கள் தங்கள் இனத்தின் பெருமையை உணர்ந்து தரணியெங்கும் பறைசாற்றிட வேண்டும் என்று உணர்ந்து வரும் ஓர் உயர் நோக்குக் கொண்ட உத்தமன்.

அவருக்கு எடுக்கும் இவ்விழா ஒரு தனி மனிதனுக்கு எடுக்கும் விழா என்பதை விட தமிழ் அன்னையின் அடியவன் ஒருவனுக்கு எடுக்கும் விழாவாகக் கருதியே நாங்கள் இவ்விழாவை ஒழுங்கு செய்திருக்கிறோம். இவ்விழா உங்கள் ஆதரவோடும் ஆசியோடும் சிறப்பாக நடைபெறுகிறது.

எல்லாம் வல்ல இறைவனின் பேரருளோடு கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் அவர்கள் நலமுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து, பணிகள் பல ஆற்றி எம் இனத்தின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டுமென்று எம் விழாக்குழு சார்பில் வாழ்த்துகின்றோம்.

நன்றி

## நண்பர்கள்

அல்லும் பகலும் அயராது ஓடுகின்ற
இவ்வாழ்க்கை எம் வாழ்க்கை
கண்டவுடன் தலையாட்டி கைகாட்டி
கடந்து சென்றிடுவோர் பலர்
நின்று நிதானமாய் விசாரிக்கும்
பண்புள்ள பண்பாளன் நீர்
இதயநோய் இரத்தக்கொதிப்பு
இவற்றுக்கு மருந்துகள் மறுபக்கம்
வாருங்கள் மருந்துண்டு
வாய்விட்டுச் சிரியுங்கள்
நோய் போய்விடும்
நீயிருக்கும் இடத்தினை மற்றோர்
சிரிப்பொலியால் அறிந்திடுவர்
நின்நட்பு நீள வேண்டும்
நீடூழி நீ வாழ வேண்டும்
நண்பர் நாம் வாழ்த்துகின்றோம்
வாடுகின்ற மலர்மாலை போடாமல்
வாடா இம்மலரினைத் தருகின்றோம்.

**பொன் சுந்தரலிங்கம்**
**நடா. உதயன்**
**கென் கிருபா**
**அழகன்**
**அரியராஜா**
**சோதி**
**தவம்**
**கண்ணன்**
**மோகன்**
**தீபன்**
**சோம சச்சி**
**முருகையா**
**தனம்**
**விஜயன்**
**மனோ**

# நினைவழியா நினைவுகள்















JJPRINT 416.298.9322